# காந்தி வழி

# 2

பதிப்பாசிரியர்

பொ. திருகூடசுந்தரம்



இலக்கியப் பண்ணை

ராயப்பேட்டை - சென்னை

உரிமை பதிவு செய்யப்பெற்றது

வெளியிட்டது : 28—7—46

ரூபாய் ஒன்று
தபால் செலவு தனி

சென்னை, ராயப்பேட்டை சக்தி பிரஸ் லிமிடெட்
சக்தி பிரஸில் கைக்காரித்தில் அச்சிடப்பெற்றது

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| **கடவுள்** | | | பக்கம் |
| 1. | சிருஷ்டி கர்த்தா யார்? | 4-4-46 | ... 1 |
| 2. | ராமநாம பஜனை | 23-3-46 | ... 1 |
| 3. | ராமநாமம் | 10-3-46 | ... 2 |
| 4. | ராமநாமம் | 6-4-46 | ... 3 |
| 5. | சஞ்சீவி மருந்து | 19-4-46 | ... 3 |
| 6. | பிரார்த்தனை செய்வோம் | 4-4-46 | ... 6 |
| 7. | காந்தியடிகள் கோயில் | 15-3-46 | ... 7 |
| **அஹிம்சை** | | | |
| 8. | இரண்டு வேண்டுகோட்கள் | 25-3-46 | ... 8 |
| 9. | சத்தியாக்கிரகம் | 24-3-46 | ... 10 |
| 10. | என்ன வெட்கக்கேடு? | 11-3-46 | ... 13 |
| 11. | நீதி யாது? | 5-4-46 | ... 15 |
| 12. | காலத்தின் குறிகள் | 15-4-46 | ... 16 |
| 13. | புனிதமான வாரம் | 15-4-46 | ... 18 |
| 14. | இரக்கமும் இரக்கமின்மையும் | 15-4-46 | ... 21 |
| 15. | இ. தே. ரா. லட்சியங்கள் | 20-3-46 | ... 21 |
| 16. | இப்பொழுது கூலிப் பட்டாளமன்று | 31-3-46 | ... 24 |
| 17. | இ. தே. ரா. படிப்பினை | 8-4-46 | ... 26 |
| **உண்ணாவிரதம்** | | | |
| 18. | உண்ணாவிரதத் தொத்துநோய் | 13-4-46 | ... 28 |
| **நிர்மாண வேலை** | | | |
| 19. | நிர்மாண வேலையும் அஹிம்சையும் | 23-3-46 | ... 30 |
| **கதர்** | | | |
| 20. | மெஷின்கள் | 1-3-46 | ... 32 |
| 21. | கதர் எதற்கு? | 3-4-46 | ... 33 |
| 22. | கதர்ப் பட்டு | 20-4-46 | ... 35 |
| 23. | ஏன் நூலுக்குமட்டும்? | 20-4-46 | ... 36 |
| 24. | உண்மைதானா? | 21-4-46 | ... 36 |
| **தீண்டாமை** | | | |
| 25. | இந்த அலட்சியம் ஏன்? | 21-3-46 | ... 37 |
| 26. | ஹரிஜனச் சேரிவாசம் | 25-3-46 | ... 39 |
| 27. | ஹரிஜனங்களுடன் உண்ணல் | 1-4-46 | ... 40 |
| 28. | ஹரிஜனச் சேரிவாசம் | 9-4-46 | ... 40 |
| 29. | எந்தப் பெயரானால் என்ன? | 5-4-46 | ... 41 |
| 30. | தோட்டிகள் வேலை நிறுத்தம் | 15-4-46 | ... 43 |

பெண்கள்

31. பெண் பிரதிநிதிகள் 30-3-46 ... 44
32. பெண்களும் தேர்தலும் 12-4-46 ... 45

ஹிந்துஸ்தானி

33. ஹிந்துஸ்தானி 30-3-46 ... 47
34. உருது பாஷைக்கு ரோமன் லிபி 15-4-46 ... 47

அரசியல்

35. இந்தியாவைவிட்டு வெளியேறுக 29-3-46 ... 48
36. நிறத் துவேஷம் 2-3-46 ... 50
37. மந்திரிகள் சம்பளம் 6-4-46 ... 52
38. மந்திரிகள் சம்பளம் 13-4-46 ... 53
39. மந்திரிகள் கடமை 22-4-46 ... 54
40. ஏன் கூடாது ? 20-4-46 ... 56

உணவு

41. பஞ்சமும் ஜனன விகிதமும் 19-3-46 ... 57
42. அழகு எது ? 23-3-46 ... 58
43. வனஸ்பதியும் நெய்யும் 8-4-46 ... 59
44. ஒரு மந்திரியின் துக்கம் 14-4-46 ... 61
45. வருந்தத் தக்கது 21-4-46 ... 63
46. பசு மடங்கள் 20-4-46 ... 64

பொருளாதாரம்

47. பொதுவுடைமை 4-3-46 ... 67
48. முதலாளித்துவமும் வேலை நிறுத்தமும் 23-3-46 ... 72

மாணவர்கள்

49. படிப்பு முடிந்தபின் 1-3-46 ... 74

இயற்கைச் சிகிச்சை

50. இன்னுமொரு சேவை 23-3-46 ... 75
51. இயற்கைச் சிகிச்சை 23-3-46 ... 77
52. இதுவே என் இந்தியா 23-3-46 ... 78
53. இயற்கைச் சிகிச்சைமுறை 23-3-46 ... 78
54. 125 வயதுவரை வாழ்வது எப்படி ? 11-2-46 ... 79

கதம்பம்

55. பண முடிப்புக்கள் 19-2-46 ... 81
56. செல்லாத நாணயங்கள் 17-3-46 ... 81
57. குதிரைப் பந்தயம் 30-3-46 ... 83
58. நேதாஜி இருக்கிறாரா ? 30-3-46 ... 84
59. பத்திரிகா நிருபர்கள் 14-4-46 ... 85
60. சாஸ்திரியாரும் காந்தியடிகளும் 21-4-46 ... 85

## சிருஷ்டி கர்த்தா யார்?

**கேள்வி:**—கடவுள் என்பது மனிதனுடைய கற்பனா சக்தியின் சிருஷ்டியே யாகும். மனிதனைக் கடவுள் சிருஷ்டித்ததாகக் கூறுவதைவிடக் கடவுளை மனிதன் சிருஷ்டித்ததாகக் கூறுவது தானே உண்மை?

**பதில்:**—இந்த நண்பர் கூறுவது உண்மைபோலவே தோன்றும். இவர் தம்மை யறியாமலே 'கடவுள்'—'சிருஷ்டி' என்னும் மொழிகளைக்கொண்டு நம்மை மயங்கவைக்கிறார். ஆனால் கடவுள்தான் விதியாகவும் விதியை ஏற்படுத்துபவராகவும் இருக்கிறார். ஆதலால் அவரைச் சிருஷ்டித்தவர் யார் என்ற கேள்விக்கு இடமேயில்லை. அதிலும் மனிதனைப்போன்ற அற்ப ஜந்துவையா கடவுள் சிருஷ்டியுடன் சம்பந்தப்படுத்துவது? மனிதன் அணையைக் கட்ட முடியுமேயன்றி ஆற்றை உண்டாக்க முடியுமோ? அவன் நாற்காலியைச் செய்ய முடியுமேயன்றி மரத்தைச் சிருஷ்டிக்க முடியுமோ? நதியையும் மரத்தையும் சிருஷ்டிக்க முடியாத மனிதன் கடவுளைப் பலவிதமாகத் தன்னுடைய மனத்தில் எண்ணிப் பார்க்க முடியுமேயன்றி சிருஷ்டித்து விட முடியுமோ? கடவுள் மனிதனைச் சிருஷ்டித்தார் என்பதுதான் உண்மை. மனிதன் கடவுளை சிருஷ்டித்தான் என்பதெல்லாம் வெறும் பிரமையே யாகும். ஆயினும் கடவுள் கர்த்தாவுமில்லை காரணமுமில்லை என்று வேண்டுமானால் யாரும் கூறிக் கொள்ளலாம். இந்த இரண்டில் எதைச் சொன்னாலும் அவருக்கு ஏற்கும்.

## ராம நாம பஜனை

காந்தியடிகள் உருளி என்னும் கிராமத்தில் ஏற்படுத்திய இயற்கை வைத்தியசாலையில் நடந்த முதல் பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ் கண்டவாறு கூறினார்:

இப்பொழுது பாடப்பெற்ற பாடலானது "கடவுளே! நீயே ஜனங்களின் துன்பங்களைத் துடைப்பவன்" என்று கூறியதைக் கேட்டீர்கள். கடவுள் ஏழைகள் என்றும் பணக்காரர் என்றும் பாராமல் எல்லோருடைய துன்பங்களையும் நீக்குகின்றார். ஆனால் நீங்கள் கோபத்துக்கு இடங் கொடுத்துவிட்டாலும், உயிர் வாழ்வதற்காக மட்டும் உண்ணுமல் சுகத்துக்காக உண்டாலும் ராம நாமத்தின் பொருளை அறிந்துகொள்ள மாட்டீர்கள். உங்கள் பஜனை அந்தரங்க சுத்தியாயிராது. வெறும் வாய் மட்டுமே உச்சரிக்கும். ஆனால் ராம நாமம் பயன்தர வேண்டுமானால், அதை பஜிக்கும்போது நீங்கள் உங்களையே மறந்து விட்டவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் அது உங்கள் வாழ்வின் சகல விஷயங்களிலும் இடம் பெறவேண்டும்.

# ராம நாமம்

இயற்கை வைத்தியருடைய மருந்துகளில் இணையற்ற ஆற்றலுடையது ராம நாமமேயாகும். அப்படிக் கூறுவதைக் கேட்டு யாரும் ஆச்சரியப் படவேண்டியதில்லை. பேர்பெற்ற ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் என்னிடம் "நான் என் வாழ்நாள் முழுவதிலும் மருந்தையே கொடுத்து வருகிறேன். ஆனால் தாங்கள் உடல் நோய்களைக் குணப்படுத்த ராம நாமத்தைக் கையாளும்படி கூறிய பின் அவ்விதமே வாக்பட்டரும் சரகரும் கூறியிருப்பது நினைவிற்கு வந்தது" என்று கூறினார். ராம நாமத்தை ஆன்ம நோய்களுக்கு உபயோகப்படுத்துவது தொன்று தொட்டு நடந்து வரும் புராதன சம்பிரதாயமே யாகும். ஆனால் பெரிதில் சிறிதும் அடங்கும். அதனால் ராம நாமமானது உடல் நோய்களையும் குணமாக்கும் என்று நான் கூறுகிறேன். இயற்கை வைத்தியர் நோயாளியிடம் "என்னை அழையும், உம்முடைய நோயைக் குணப்படுத்துகிறேன்" என்று சொல்லமாட்டார். நோயைக் குணமாக்கும் சக்தி ஒவ்வொருவரிடமும் இருக்கிறது என்று கூறி அதை எழுப்பி நோயைக் குணமாக்கிக் கொள்ளும் முறையைக் கற்றுக் கொடுப்பார். அந்தத் தத்துவத்தை மட்டும் நாம் அறிந்து கொள்வோமானல், நாம் சுதந்திரம் அடைவதோடு ஆரோக்கியமும் அடைந்து விடுவோம். அப்பொழுது நம்முடைய நாடு இப்பொழுதுள்ளதுபோல் நோயும் பிணியுமுள்ள நாடாயிராது.

ஆனல் ராம நாமத்தின் ஆற்றலை உபயோகிப்பதற்குச் சில நிபந்தனைகள் உள. அது வெறும் மந்திரவாதியின் ஜாலவித்தையன்று. அதிகமாகச் சாப்பிட்டுத் திணறுபவர் அந்தக் கஷ்டத்தை நீக்கவும் அதன்பின் மறுபடியும் அதிகமாகச் சாப்பிடவும் உதவக் கூடிய மருந்தைத் தேடினல் அது இயற்கை வைத்தியரிடம் கிடையாது. ராம நாமம் அதற்கு உதவாது. ராம நாமத்தை நன்மையான காரியத்துக்குப் பயன்படுத்தலாமே யன்றி ஒரு நாளும் தீமையான காரியத்துக்குப் பயன்படுத்த முடியாது. அப்படி இல்லையானல் திருடர்களும் கொள்ளைக்காரர்களும் மகா பெரிய பக்தர்கள் ஆகிவிடமாட்டார்களா? இதய சுத்தி உள்ளவர்களும் இதய சுத்தி விரும்புகிறவர்களுமே ராம நாமத்தை உபயோகிக்க முடியும்.

அதிகமாகச் சுகங்களை அனுபவிப்பதற்கு அதை உபயோகப்படுத்த முடியாது. வயிறு புடைக்கத் தின்றுவிட்டால் அதற்கு மருந்து பட்டினிதான், பிரார்த்தனை யன்று. பிரார்த்தனையானது பட்டினியிருந்து உடல் சுத்தமான பிறகு செய்தால்தான் பயன் தரும். பட்டினி யிருப்பவரும் பிரார்த்தனை செய்யலாம். அப்போது அது பட்டினியின் கஷ்டங்களைச் சகிக்கக் கூடிய சக்தியை அளிக்கும். அது போலவே வயிற்றில் மருந்துகளை நிறைத்துக் கொண்டு வாயால் ராம நாமம் பஜிப்பது அர்த்தமற்ற நாடகமே யாகும்.

நோயாளியின் தவறான போக்குப் படியே நடக்கும் மருத்துவர் தம்மையும் நோயாளியையும் தாழ்த்திக் கொள்பவர் ஆவார். உடலை சிருஷ்டிகர்த்தாவின் சேவைக்கான கருவியாக மதியாமல் சுகானுபவத்துக்கான சாதனமாக எண்ணிப் பணத்தை விரயம் செய்வதைக்காட்டிலும் மோசமான காரியம் வேறேதும் உண்டோ? ராம நாமம் மனிதனைத் தூய்மை செய்து உயர்த்துகிறது. அதுதான் அதன் உபயோகமும் ஆற்றலுமாகும்.

## ராம நாமம்

கேள்வி:—ராம நாமத்தை இதயத்தில் வைத்துச் சிந்தித்தால் போதாதா? அதைப் பாராயணம் செய்வதால் ஏதேனும் விசேஷமான பலன் உண்டாகுமா?

பதில்:—ராம நாமத்தைப் பாராயணம் செய்வதால் விசேஷமான பலன் உண்டாகும் என்றே நம்புகிறேன். தம்முடைய இதயத்தில் கடவுள் உண்மையாகவே வீற்றிருப்பதாக உணர்ந்துவிட்டவர்கள் பாராயணம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அத்தகையவர் யாரையும் நான் இதுவரைப் பார்த்ததேயில்லை. அதற்கு மாறாக ராம நாம பஜனையால் விசேஷமான பலன் உண்டாவதாகவே என்னுடைய அனுபவம் கூறுகிறது. ஏன், எப்படி என்பதை அறிய வேண்டிய அவசியமில்லை.

## சஞ்சீவி மருந்து

இளைஞர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர் ஒருவர் எழுதுகிறார்:—

"தாங்கள் எழுதும் ஒவ்வொரு மொழியையும் நான் மிகுந்த ஆவலுடன் படித்து வருகிறேன். ஹரிஜன் பத்திரிகை கிடைத்ததும் அதைப்படித்து முடிக்காமல் கீழே வைக்க முடியவில்லை. அதனால் என்னால் போற்றப்படுபவர் யாதொரு குறையும் இல்லாதவராக இருக்கவேண்டும் என்னும் ஆசை உண்டாய் விடுகிறது. ஏதேனும் பொருள் விளங்காம லிருந்தால் எனக்கு மனச்சாந்தி உண்டாவதில்லை. தாங்கள் ராம நாம பஜனையை சர்வரோக நிவாரணியாகக் கூறியிருப்பது எனக்கு விளங்கவேயில்லை. இக்காலத்து இளைஞர்கள் சகிப்புத்தன்மையை மேற்கொண்டே தங்களுடைய கருத்துக்களில் சிலவற்றை ஆட்சேபியாமல் இருக்கிறார்கள். "காந்தியடிகள் நமக்கு எத்தனையோ பெரிய விஷயங்களைக் கற்றுக் கொடுத்து வருகிறார், எவ்வளவோ உன்னதமான நிலைக்கு நம்முடைய மனத்தை உயர்த்தியிருக்கிறார், எல்லாவற்றிற்கும் மேலாக எவ்வளவோ சமீபத்தில் சுயராஜ்யத்தைக் கொண்டு வந்து விட்டார், இந்த நிலைமையில் அவருடைய ராம நாமப் பைத்தியத்தைப் பொருட்படுத்தாமல் இருந்தால் என்ன?" என்றே அவர்கள் எண்ணுகிறார்கள்.

தாங்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறீர்கள் :—

(1) எந்த நோயானாலும் ராம நாமத்தை இதய சுத்தியுடன் பஜித்தால் நிச்சயமாகக் குணமாய்விடும்.

(2) மனிதனுடைய உடலானது மண், நீர், ஆகாயம், சூரியன், காற்று என்னும் ஐம் பூதங்களாலேயே ஆக்கப்பட்டிருப்பதால் அவைகளை மட்டுமே நோயைக் குணப்படுத்துவதற்குரிய சாதனமாகக் கொள்ளவேண்டும்.

(3) நம்முடைய தேகத்தில் உண்டாகும் நோய்களுக்கும் ராம பஜனையே சஞ்சீவி மருந்து என்று உறுதி கூறுகிறேன்.

தாங்கள் இயற்கை சிகிச்சை முறையில் இந்தப் புது விஷயத்தைப் புகுத்தியபோது நான் முதலில் தாங்கள் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ள "கிறிஸ்தவ மத சிகிச்சை" யையோ அல்லது "மனம் மூலம் சிகிச்சை செய்யும் முறை" யையோ தான் குறிப்பிடுகிறீர்கள் என்று எண்ணினேன். இந்த முறைகளை எல்லா வைத்திய முறைகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தவிதமாகத்தான் நான் தங்கள் முதல் கூற்றை அர்த்தப்படுத்தினேன். ஆனால் மேலே கண்ட தங்கள் இரண்டாவது கூற்று எனக்கு விளங்கவேயில்லை. தாங்கள் கூறும் ஐம் பூதங்களைத் தவிர வேறு எதுவும் இருக்கப்படாது மருந்துகளில் என்பது அனுபவ சாத்தியமில்லையே.

தாங்கள் நம்பிக்கையை வற்புறுத்துவதா யிருந்தால் எனக்கு ஆட்சேபனை யில்லை. நோயாளி வைத்தியரிடம் நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியம்தான். ஆனால், வியாதிகளைக் குணப்படுத்த நம்பிக்கை மட்டுமே போதும் என்று கூறுவதை ஏற்க முடியவில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன் என்னுடைய சின்னப் பெண்ணுக்கு இழுப்பு நோய் கண்டது. அவளைக் காப்பாற்றியது தற்காலத்தில் வைத்தியர் கண்டுபிடித்துள்ள அதி நூதனமான சிகிச்சை முறையே யாகும். அந்த வியாதியைப் போக்கிக் கொள்ள இரண்டரை வயதுக் குழந்தையை ராம நாம பஜனை செய்யும்படி சொல்ல முடியாது என்பதைத் தாங்களும் ஏற்றுக் கொள்வீர்கள். அது மட்டுமன்று. எந்தத் தாயையும் குழந்தைக்காக பஜனை மட்டும் செய்யுமாறு சொல்லுவதும் முடியாத காரியமாகும்.

தாங்கள் மார்ச் 24உ ஹரிஜனில் சரகருடைய ஸ்லோகத்தை எடுத்துக் காட்டுகிறீர்கள். அதுவும் எனக்குத் திருப்தியை அளிக்கவில்லை, எந்தப் பழைய நூலானாலும், எவ்வளவு பெரியவரானாலும், இதயம் ஒப்புக் கொள்ளாததைச் சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளா திருக்கும்படி தாங்களேதான் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்கள்."

எனக்கு மாணவர்களுடைய நன் மதிப்பைப் பெற வேண்டுமென்ற ஆசை அதிகம்தான். ஆனால் அவர்களைத் திருப்திப் படுத்தி

ஞல் போதுமா? அவர்களை விட அதிகமான பேர்கள் அடங்கிய ஜன சமூகத்தையும் திருப்திப்படுத்த வேண்டுமல்லவா? அத்துடன் எந்தப் பொதுஜன ஊழியரும் மனச்சாட்சிக்கு விரோதமாக யாரையும் எந்த இனத்தையும் திருப்திப் படுத்துவது என்பது கூடாத காரியம்.

இந்த நிருபரும் அவரைப்போல் எண்ணுகிறவர்களும் நான் இந்தியாவைக் கற்பனைக்கு எட்டாத உன்னத நிலைக்குக் கொண்டுவந்து விட்டதாக எண்ணுவார்களானுல் என்னுடைய பைத்தியங்கள் என்று கருதுகிருர்களே அவற்றை சகித்துக் கொண்டால் மட்டும் போதாது. சகிப்புத்தன்மை மட்டுமிருந் தால் அதனுல் அவர்களுக்கும் லாபமில்லை, எனக்கும் லாபமில்லை. அதற்கு மாருக அது அவர்களிடம் சோம்பலேயும் என்னிடம் ஆணவத்தையுமே வளர்த்துவிடும். பைத்தியக்காரத் தனமாகத் தோன்றினுலும் எதையும் நன்ருகச் சிந்தியாமல் தள்ளிவிடலாகாது. பைத்தியக்கார யோசனைக்காரர் என்று பிறரால் இகழப் பட்டவர்கள் அவற்றிற்காகத் தூக்கு மேடை ஏறி யிருக்கிருர்கள்.

ராம நாம பஜனையானது நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட சிகிச்சை முறையையும் கிறிஸ்தவ மதசிகிச்சை முறையையும் ஒத்ததுபோல் தோன்றினும் அவற்றினின்று வேறுபட்டதேயாகும். ராம நாம பஜனையானது ஒரு பெரிய உண்மையை ஆதாரமாகக் கொண்டதாகும். உண்மையாகவே கடவுளை இதயத்தில் வீற்றிருக்கச் செய்து விட்டால் அந்தக் கணமே உடல், அறிவு, ஒழுக்கம் சம்பந்தமான சகல நோய்களும் பறந்து போகும். அப்படி நிகழக் காணுததால் அதைப் பொய் என்று தள்ளிவிட முடியாது. என்னுடைய வாதம் கடவுளிடம் நம்பிக்கை யில்லாதவர்க்குச் சிறிதும் திருப்தி யளிக்காது.

நம்பிக்கைச் சிகிச்சை யாளரும் மனே சிகிச்சை யாளரும் கிறிஸ்தவ மத சிகிச்சை யாளரும் ராம நாம பஜனையில் அடங்கியுள்ள உண்மைக்குச் சான்று பகர்வார்கள். என் வாதத்தை நான் அறிவு மூலமாக விளக்கிவிட முடியாது. சர்க்கரையைச் சுவைத்தறியாதவனுக்குச் சர்க்கரை இனிக்கும் என்று நிரூபித்துக் காட்டுவதற்கு சர்க்கரையைச் சுவைக்கச் செய்வதைத் தவிர வேறு வழி ஏது?

ராம நாமமாகிய அந்தப் புனித மொழியை மனப் பூர்வமாகப் பஜனை செய்வதற்குரிய நிபந்தனைகளை இப்பொழுது மறுபடியும் எடுத்துக் கூற விரும்ப வில்லை.

ராம நாமத்தில் சிறிதளவேனும் நம்பிக்கை யுடையவர்களே சரகருடைய ஸ்லோகத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள். மற்றவர்கள் அதைச் சிந்தித்துப் பார்க்கக்கூட மாட்டார்கள்.

சிறு குழந்தைகள் பொறுப்பு அறியாதவர்கள். அதனுல் ராம நாமம் அவர்களுக்கு ஏற்றதன்று என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் தங்கள் பெற்ருேருடைய கருணையையே எதிர்பார்த்து

வாழ்பவர்கள். அதிலிருந்தே பெற்றோர்களுடைய பொறுப்பு எவ்வளவு அதிகம் என்பது விளங்கும். தங்கள் ராம நாம பஜனையையே நம்பிக் குழந்தைகளுக்கு வேறு சிகிச்சை செய்யாமல் திங்கிழைத்து விட்ட பல பெற்றோர்களை அறிவேன்.

இறுதியாக, சகலமும், மருந்துகளும் கூட ஐம் பூதங்களாலானதாகக் கூறும் வாதம் மனக் குழப்பத்தையே காட்டும். அது கூடாது என்பதற்காகவே அதை இங்கு எடுத்துக் கூறுகிறேன்.

## பிரார்த்தனை செய்வோம்

இந்தியா வெகுநாளாகப் பெறவேண்டும் என்று ஆவல் கொண்டிருந்த அரசியல் சுதந்திரத்தைப் பெறும் தறுவாயில் இருந்து கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது பிரார்த்தனை செய்யவேண்டிய சமயமாகும். பிரார்த்தனை என்பது கிழவிகளின் சோம்பேறிப் பொழுது போக்கன்று. சரியான முறையில் அறிந்து அனுஷ்டித்தால் சர்வ வல்லமையுள்ள சக்தியாக ஆகும்.

ஆதலால் நாம் பிரார்த்தனை செய்து நாம் அனுஷ்டித்த அஹிம்சையின் லட்சியம் யாது என்பதையும் நாம் பெறும் சுதந்திரத்தை எப்படி அஹிம்சையைக் கொண்டுப் பாதுகாப்பது என்பதையும் கண்டுகொள்ள வேண்டும். நாம் அஹிம்சையைப் பலவீனர்களைப் போலவே அனுஷ்டித்து வந்திருந்தால், அந்தவிதமாக அனுஷ்டிக்கும் அஹிம்சையைக்கொண்டு ஒருநாளும் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. நம்மிடம் ஆயுதங்களும் இல்லை. நமக்கு ஆயுதங்களை உபயோகிக்கவும் தெரியாது. அதனால் பலவீனர்களான நாம் ஆயுதங்களைக் கொண்டும் சுதந்திரத்தை காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஆயுதங்களை உபயோகிப்பதற்கு வேண்டிய கட்டுப்பாட்டுப் பழக்கமும் நமக்கு கிடையாது. இந்த நிலைமையில் நாம் பிற தேசத்தாருடைய உதவியையே நம்பி வாழ வேண்டியவர்களாக ஆவோம். அப்பொழுது பிற தேசத்தார் நம்மைத் தங்களுக்கு சமானமானவர்களாகக் கருதமாட்டார்கள். தாழ்ந்தவர்களாகவே கருதுவார்கள் என்று சொல்வது நமக்குக் கர்ண கடூரமாக இருப்பதால் மாணவர்களாகக் கருதுவார்கள் என்று சொல்லி ஆத்ம திருப்தி அடைந்து கொள்ளலாம்.

ஆதலால் எப்படி சுதந்திரத்தைப் பெறுவதற்கு அஹிம்சையை நம்பி நிற்கவேண்டி யிருக்கிறதோ அப்படியே சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அஹிம்சையையேதான் நம்பி நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் பொருள் யாதெனில் நம்முடைய எதிரிகள் என்று யார் யார் சொல்லிக் கொள்ளுகிறார்களோ அவர்களிடமெல்லாம் அஹிம்சையை அனுஷ்டிக்க வேண்டும் என்பதே யாகும். சுமார் 30 வருஷங்களாக அஹிம்சா அனுஷ்டானத்தில் பழகியவர்களுக்கு இது ஒரு பெரிய கஷ்டமான காரியமன்று. "தேவையானால் கொல்லு, அப்படிக் கொல்லும்போது இறக்கவேண்டி ஏற்பட்டால் இற" என்பதற்குப் பதிலாக "மானத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக

உயிர்துற'' என்பதே அஹிம்சா தத்துவத்தின் சாரமாகும். தைரிய மான போர் வீரன் செய்வது யாது? அவன் அவசியப்பட்டால் தான் கொல்வான், அப்படிக் கொல்வதால் உண்டாகும் அபா யத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பான். அஹிம்சைக்கு அதையும்விட அதிகமான மனோதைரியமும் தியாக புத்தியும் தேவை யாகும். பிறரைக் கொல்லும் காரியத்தில் உயிர்விடத் தயாராக வுள்ளவர்கள் பிறரைக் கொல்லாது விடும் காரியத்தில் உயிர்விடத் தயங்குவது ஏன்? முன்னது சுலபமாகவும் பின்னது மனித சக் திக்கு மேம்பட்டதாகவும் தோன்றுவது ஏன்? கொல்லும் வித்தை யைக் கற்று அனுஷ்டித்தால்தான் அபாயத்தைப் பொருட் படுத்தாதிருக்கலாமே யன்றி வேறு எந்த விதத்திலும் முடியாது என்று எண்ணுவது நம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாகவே தோன்றுகிறது. ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் இதயத்தில் மயக்கம் உண்டாகிறது. அதனால்தான் நம்மை நாம் இப்படிக் கேவலமாக ஏமாற்றிக் கொள்ளுகிறோம்.

ஆனால், விஷயம் இப்படித் தெளிவாக இருக்குமானால் ஏன் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று மத நம்பிக்கையில்லாதவர் கள் கேட்கலாம். அதற்கு நான் கூறும் பதில் யாதெனில், தேசத் தின் சுதந்திரத்துக்காகவும் கௌரவத்துக்காகவும் சுயநலத்தைத் தியாகம் செய்யும் உயர்ந்த வீர வித்தையின் முதற்பாடமும் இறு திப் பாடமும் பிரார்த்தனைதான் என்பதேயாகும்.

பிரார்த்தனை செய்ய வேண்டுமானால் கடவுளிடம் பரிபூரண மான நம்பிக்கை இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. அத் தகைய நம்பிக்கை யில்லாவிட்டால் சத்தியாக்ரகம் ஒரு நாளும் வெற்றியடையாது. கடவுளை எந்தப் பெயரைக் கொண்டு அழைத் தாலும் சரி, வாழ்வை நடத்தவேண்டிய முறையைக் கூறும் ஜீவ நாடி அவரே யாவர் என்பதை மட்டும் மறத்தலாகாது.

## "காந்தியடிகள் கோயில்"

என்னுடைய நண்பர் ஒருவர் அனுப்பிய தினசரிப் பத்திரிகையில் மேற்கண்ட தலைப்பில், எனக்குக் கோயில் கட்டி என்னுடைய விக்கிரகத்தை வைத்து வணங்குவதாக எழுதியிருந்தது. இது முற்றிலும் தவறான விக்கிரக ஆராதனை என்றே கருதுகின்றேன். கோயிலைக் கட்டியவர் தம்முடைய பணத்தைத் தவறாக உபயோ கித்து விரயமாக்கி விட்டார். அங்கு வரும் கிராமவாசிகள் தவறான வழி காண்பிக்கப்பட் டிருக்கிறார்கள். என்னுடைய வாழ்வைத் தவறாக அர்த்தப்படுத்திக்கொண்டு விட்டதால் நான் இழிவுபடுத்தப் பட்டுவிட்டேன். நான் கடவுள் வழிபாட்டுக்குக் கூறிய பொருளைச் சரியாக அறிந்துகொள்ள வில்லை. கைராட்டி னத்தை வழிபடுவது என்பது அதை ஜீவனத்துக்காகவோ அல்லது சுயராஜ்யம் பெறுவதற்கான யக்ஞமாகவோ சுழற்றுவ தாகும். கீதையை வழிபடுவது கிளிப் பிள்ளையைப்போல் பாரா யணம் செய்வதன்று, அதன் உபதேசப்படி நடப்பதேயாகும்.

உபதேசப்படி நடப்பதற்குத் துணையாக உபயோகித்தால் மட்டுமே பாராயணம் நல்லதாகும். ஒருவர் சொற்படி எவ்வளவுக் கெவ்வளவு நடக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவே அவரை வழிபட்டவர்களாவோம். உயிரோடுள்ளவருடைய உருவத்தை வைத்து வணங்கினால் ஹிந்து மதம் இழிவு செய்யப்பட்டதே யாகும். எந்த மனிதனையும் இறந்துபோவதற்கு முன் நல்லவனாகக் கூற முடியாது. இறந்த பின்னர் கூட அவனிடம் நல்ல குணங்கள் உள்ளதாக நம்புகிறவனுக்கே நல்லவன் ஆவான். உண்மை யாதெனில் மனிதனுடைய இதயம் கடவுள் ஒருவனுக்கே தெரியும். ஆதலால் உள்ளவனோ இறந்தவனோ எவனையும் வணங்காமல் உண்மை என்று வழங்கப்படும் கடவுளிடம் காணும் பரிபூரணத்தை மட்டும் வணங்குவதே தவறில்லாத மார்க்கம். அப்படியானால் போட்டோக்கள் வைத்திருப்பதும் பயனற்ற வழிபாடுதானோ என்று கேட்கலாம். அப்படியேதான் என்று நான் இதற்குமுன் பல தடவை கூறியிருக்கிறேன். ஆயினும் பணச் செலவான வழக்கமாயினும் குற்றமில்லாததாக இருப்பதால் அது இருந்துபோகட்டும் என்று கருதுகின்றேன். ஆனால் இதைக்கொண்டு உருவ வழிபாட்டில் இறங்கிவிடக் கூடாது என்று எச்சரிக்கின்றேன். கோயில் கட்டியவர் விக்கிரகத்தை நீக்கிவிட்டு ஏழைகள் கூலிக்காகவும் மற்றவர்கள் யக்ஞமாகவும் நூற்கவாக்கூடிய ஸ்தலமாகச் செய்து அதன்மூலம் எல்லோரும் கதர் அணியக் கூடியதாகச் செய்துவிட்டால் எனக்குச் சந்தோஷமும் ஆறுதலும் உண்டாகும். அதுதான் கீதா உபதேசப்படி நடப்பதும் அதையும் என்னையும் வணங்குவதும் ஆகும்.

## இரண்டு வேண்டுகோட்கள்

நான் என்னுடைய சுய சரிதையை முன் விட்டயிடத்திலிருந்து தொடர்ந்து எழுதவேண்டுமென்றும், அஹிம்சை விஞ்ஞானத்தைக் குறித்து ஒரு நூல் எழுதவேண்டும் என்றும் நண்பர் ஒருவர் யோசனை கூறுகிறார்.

நான் சுயசரிதை எதுவும் எழுதவில்லை. நான் செய்ததெல்லாம் சத்தியமாக நடக்க நான் செய்த முயற்சிகளைக் குறித்து தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதியதும் பின்னர் அவைகளைத் தொகுத்து புஸ்தக ரூபத்தில் வெளியிட்டதுமே யாகும். அப்படிச் செய்து இருபது ஆண்டுகளுக்கு அதிகம் ஆகிவிட்டன. அந்த இருபது வருஷ காலத்தில் நான் செய்தவற்றையும் சிந்தித்தவற்றையும் வரிசைக் கிரமமாகக் குறித்துவைத்துக் கொள்ளவில்லை. அப்படிச் செய்ய எனக்கு ஆசைதான். ஆனால் அதற்கு வேண்டிய சாவகாசம் ஏது? இந்த நெருக்கடியான சமயத்தில் ஏற்றுக் கொள்ளவேண்டிய கடமையாகக் கருதியே இப்பொழுது ஹரிஜன் பத்திரிகையை மறுபடியும் நடத்தி வருகின்றேன். இந்த வேலையைச் செய்வதுகூட எனக்குக் கஷ்டமாகவே இருக்கின்றது. அப்படியிருக்க என்னுடைய சத்திய முயற்சிகளை நான் விட்ட யிடத்திலிருந்து நாளதுவரை எழுதுவதற்கு நேரம்

ஏது ? ஆயினும் அவைகளை எழுதவேண்டியது ஆண்டவனுடைய சித்தமாயிருக்குமானல் அவனே அதற்கு வழிதேடித் தருவான்.

அஹிம்சா விஞ்ஞானத்தைப்பற்றி நூல் எழுதுவது என்பது என்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டது. சாஸ்திரோக்தமான நூல்கள் எழுதுவது என்பது என்னால் இயலாத காரியம். என்னுடைய சுபாவம் நூல் எழுதுவதில் ஈடுபடுவதைவிட அதிகமாகச் செயல்புரிவதில் ஈடுபடுவதேயாகும். என்னுடைய கடமை என்று எதைத் தீர்மானிக்கிறேனே அதையே செய்கின்றேன். நான் எதைச் செய்தாலும் சேவை செய்யும் நோக்கத்துடனேயே செய்கின்றேன். அஹிம்சா தர்மத்தை விஞ்ஞான ரீதியில் அமைக்க முடியுமோ என்னவோ ? முடியுமானல் அதைச் செய்யக்கூடியவர்கள் செய்யட்டும்.

நான் செய்ய முடியாவிட்டால் திரு. விநோபா திரு. மஷ்ருவாலா, திரு. காகா கலேல்கார் ஆகியவர்களில் யாரையேனும் தேர்ந்தெடுத்து அவரைக்கொண்டு அந்த நூலை எழுதி முடிக்கச் செய்யவேண்டும் என்று நண்பர் யோசனை கூறுகிறார். திரு. விநோபா செய்ய முடியும், ஆனால் செய்யமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவர் ஒவ்வொரு மணி நேரமும் பணி செய்வதற்காகத் திட்டம் வகுத்துக்கொண்டிருப்பதால் சாஸ்திரம் எழுதுவதற்காகக் காலத்தைச் செலவிடுவது பாப காரியம் என்று எண்ணுவார். அவருடைய கருத்தை நானும் சரி என்றே சொல்வேன். உலகம் நாடி நிற்பதெல்லாம் சாஸ்திரங்களுக்காகவன்று ; இதய சுத்தியுடன் செய்யும் பணிக்காகவேயாகும். ஆதலால் உலகத்துக்கு நன்மை செய்யக்கூடியவர்கள் தம்முடைய காலத்தைச் சாஸ்திரம் வகுப்பதில் விரயம் செய்துவிடமாட்டார்கள்.

திரு மஷ்ருவாலா ஏற்கெனவே தாமாக ஒரு நூல் எழுதியுள்ளார். தேசம் இடங்கொடுத்தால் அதை விரிவாய் எழுத அவருக்கு விருப்பமுண்டு என்பதை அறிவேன். அவருடைய நூலை ஒரு சாஸ்திரம் என்று சொல்வது சரியாகாது. ஆயினும் அதைக் கிட்டத்தட்ட ஒரு சாஸ்திரம்போலவே மதிக்கலாம். இப்பொழுதுள்ள உடல் நிலையில் அவரால் மேற்கொண்டு இந்தப் பாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக்கொள்ளும்படி நானும் சொல்லமாட்டேன். திரு. விநோபாவைப்போல அவரும் தம்முடைய காலத்தில் ஒரு கணத்தைக்கூட வீணாக்குவதில்லை. அதில் பெரும்பாகம் அவருடைய நண்பர்களுக்கு உதவி செய்வதிலேயே கழிந்துகொண்டு வருகின்றது. அதனால் தினந்தோறும் மாலையில் பார்த்தால் அவர் முற்றிலும் சோர்ந்துபோயே காணப்படுகிறார்.

திரு. காகா சாகேப், திரு. தக்கார் போலவே இடைவிடாமல் சுற்றுப் பிரயாணம் செய்வதில் சலிப்பில்லாத பேர்வழியாவர். இப்பொழுது அவர் தேசிய மொழியையும் மாகாண மொழிகளையும் அபிவிர்த்தி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்.

ஆதலால் சாஸ்திரம் எழுத அவர் சம்மதித்தால்கூட அரைக் கணமும் அவர் தம்முடைய வேலையைவிட்டு வேறு வேலையில் புகக்கூடாது என்று நான் தடுத்து விடுவேன்.

ஆகவே அஹிம்சா சாஸ்திரம் எழுதவேண்டிய அவசியம் தற்போது உண்டாகவில்லை என்பது இதுகாறும் கூறியதிலிருந்து தெளிவாகும். அத்துடன் சாஸ்திரம் எழுதினாலும் அது நான் உள்ளவரை பூர்த்திபெற்றதாகாது. அதனால் எழுதுவதானால் நான் இறந்த பிறகேதான் எழுதவேண்டும். அப்பொழுதுங்கூட அஹிம்சை முழுவதையும் எழுதிக் காட்டிவிட முடியாது. இது வரை யாரேனும் இறைவனை எழுதிக் காட்டிவிட்டார்களோ? இல்லை. அதே மாதிரிதான் அஹிம்சா விஷயமும். இன்று எதைச் செய்கிறேனோ அதையே நாளையும் செய்வேன் என்றும், இன்று எதை நம்புகிறேனோ அதையே நாளையும் நம்புவேன் என்றும் என்னால் உறுதி கூறவும் முடியாது. கடவுள் ஒருவர் தாம் சகலமும் அறிந்தவர். மனிதன் எப்பொழுதும் குறைபாடு உடையவனே. மனிதனைவன் கடவுள் சாயலாகச் சிருஷ்டிக்கப் பட்டவனாக இருந்தபோதிலும் கடவுளுக்கும் அவனுக்கும் வெகு தூரமே. கடவுள் மனிதனுடைய கண்ணுக்கு எட்டாதவர். ஆதலால் நாம் செய்யக்கூடியதெல்லாம் நாம் யாரைக் கடவுள் அம்சம் பொருந்தியவர் என்று கருதுகிறோமோ அவருடைய சொல்லையும் செயலையும் அறிய முயல்வதேயாகும். நாம் அவர்களுடைய சொல்லையும் செயலையும் நம்முடைய ஆன்மாவில் நிறைந்து நிற்கச் செய்துகொண்டு நம்முடைய இதயம் ஒப்புகின்ற அளவுக்கு அவற்றின்படியே நடக்க முயலவேண்டும். எந்த சாஸ்திரம் இதற்கு அதிகமாக நமக்கு வழிகாட்டி நன்மை செய்து விடமுடியும்?

## சத்யாக்ரகம்

### வாழும் முறையும் மரிக்கும் முறையும்

பம்பாயில் 14—3—46ல் சிவாஜி பார்க்கில் கூடியிருந்த இரண்டு லட்சம் ஜனங்கள் கொண்ட பிரமாண்டமான கூட்டத்தில் காந்தியடிகள் நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கம் :—

" ராம்துன் பாடுவதே கூட்டுப் பிரார்த்தனையின் பிரதானமான அம்சமாகும். கீதையிலுள்ள ஸ்லோகங்களையும் குரானிலுள்ள வாக்கியங்களையும் ஜெண்ட் அவஸ்தாவிலுள்ள பிரார்த்தனையையும் சாதாரணமான ஜனங்கள் அறிந்து கொள்வதும் சரியான முறையில் பாராயணம் செய்வதும் கஷ்டமான காரியம். ஆனால், கடவுள் நாமமாகிய ராம நாமத்தைப் பஜிப்பதில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். அது எளிதான காரியம், அதே சமயத்தில் அதிகமான பயனைத் தருவதுமாகும். ஆனால் அது உண்மையானதாகவும் உள்ளத்தினின்று எழுவதாகவு மிருக்கவேண்டியது அவசியமாகும். அது எளிதாக இருப்பதுவே தான் அதன் பெருமைக்கும் அனைவர்க்கும் ஏற்றதாயிருப்பதற்கும் காரணமாகும்.

கோடிக் கணக்கான மக்கள் ஒன்றுசேர்ந்து செய்யக் கூடியது எதுவாயினும் விசேஷமான ஆற்றல் உடையதாக ஆகிவிடுகிறது.

நீங்கள் எல்லோரும் எவ்விதப் பயிற்சியுமில்லாமலே அழகாக ராம்துன் பாடியதற்காக உங்களைப் பாராட்டுகின்றேன். ஆனால் நீங்கள் வீட்டில் வைத்துப் பயின்றுகொண்டு வந்தால் இதைவிட அழகாகப் பாடுவீர்கள். தாளத்திற்கு ஒத்ததாகப் பாடி குரலும் வாத்தியமும் கருத்தும் ஒன்றாக இணைந்து மொழியால் சொல்ல முடியாத இனிமையும் ஆற்றலும் உடைய ஒரு சூழ் நிலையை உண்டாக்கி விடுகின்றன.

இந்த விதமாகப் பலர் ஒன்றுசேர்ந்து பிரார்த்தனை செய்யும் முறையை நான் தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்ரகப் போரை ஆரம்பிப்பதற்கு சிறிது காலத்துக்கு முன்புதான் ஏற்படுத்தலானேன். அப்பொழுது அங்குள்ள இந்திய சமூகம் பெரியதோர் அபாய நிலைமையில் இருந்துகொண் டிருந்தது. அதைத் தடுப்பதற்காக நாங்கள் மனிதப் பிரயத்தனங்கள் அத்தனையும் செய்தோம். பத்திரிகை மூலமும் பிரசங்க மூலமும், விண்ணப்பங்கள் மூலமும் பேட்டி காண்டல் மூலமும் பரிகாரந் தேட முயன்றோம். ஆனால் எவ்வித பலனும் உண்டாகவில்லை. அங்கே நீக்கிரோவர்களும் வெள்ளையர்களும் ஏராளம், இந்தியர்களோ வெகு சொற்பம். அத்துடன் ஒரு சிலரே வியாபாரிகள், ஏனையோரெல்லாம் "முறிச் சீட்டுத்" தொழிலாளர்களேதாம். இந்த நிலைமையில் எழுத்து வாசனையற்ற இந்த ஏழை இந்திய மக்கள் என்ன செய்ய இயலும்? வெள்ளையர்கள் சர்வாயுத பாணிகளாக இருந்தார்கள். ஆதலால் இந்தியர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெற வேண்டுமானால், வெள்ளையர்களிடமிருந்த ஆயுதங்களினின்று வேறுபட்டதும் அவற்றைவிட அதிகப் பலம் பொருந்தியதுமான ஒரு ஆயுதத்தைச் சிருஷ்டிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். அந்த நிலைமையில்தான் நான் ஆன்ம சக்தியாகிய சத்தியாக்ரக ஆயுதத்தை உபயோகிப்பதற்கு அவசியமான பயிற்சியை அளிக்கும் சாதனமாக பீனிக்ஸ் ஆச்சிரமத்திலும் டால்ஸ்டாய் ஆச்சிரமத்திலும் இத்தகையக் கூட்டுப் பிரார்த்தனை முறையை ஏற்படுத்தலானேன்.

சத்தியாக்ரகத்தின் பேர் பிரார்த்தனையே யாகும். சத்தியாக்ரகியானவன் எப்பொழுதும் மிருக பலத்தின் கொடுங்கோன்மையினின்று தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குக் கடவுளையே தான் சார்ந்து நிற்கின்றான். ஆதலால் நீங்கள் ஏன் எப்பொழுதும் பிரிட்டிஷாரோ பிறரோ ஏமாற்றி விடுவார்கள் என்று பயந்து சாகவேண்டும்? எவரேனும் ஏமாற்றினால் அவரே தான் நஷ்டம் அடைவார். மனோ தைரியமுடையவர்தாம் சத்தியாக்ரகப் போர் செய்யமுடியும். கோழைகளும் மன உறுதியில்லாதவர்களும் செய்யமுடியாது. சத்தியாக்ரகமானது எப்படி வாழ்வது என்பதைப் போலவே, எப்படி இறப்பது என்பதையும் கற்றுக்கொடுக்கும். உலகத்தில் பிறப்பும் இறப்பும் சகஜமான

காரியமே யாகும். மிருகத்திடமில்லாமல் மனிதனிட மட்டுமுள்ள விசேஷ குணம் அகத்திலுள்ள ஆன்மா காட்டும் வழியில் நடக்கச் சித்தாகாலமும் முயல்வதே யாகும். பிரார்த்தனை சமயத்தில் பாராயணம் செய்யப்படும் கீதையில் இரண்டாவது அத்தியாயத்தின் இறுதி ஸ்லோகங்கள் பதினெட்டும் வாழ்வு நடத்தவேண்டிய முறையின் ரகசியத்தை ரத்னச் சுருக்கமாகக் கூறுகின்றது. அதில் அர்ஜுனன் கேட்கும் கேள்விக்கு விடையாக கிருஷ்ண பகவான் "ஸ்திதபிரக்ஞன்" அதாவது அசையாத ஞானியாகிய சத்தியாக்ரகியின் லட்சணங்களைக் கூறுகின்றார்.

வாழ்வு நடத்தவேண்டிய முறையைத் தெரிந்துகொண்டால் மரிக்கவேண்டிய முறையையும் தெரிந்து கொள்ளலாம். எல்லோரும் ஒருநாள் இறக்க வேண்டியவர்களே. ஓடி விழுந்து இறக்கலாம், இருதய நோயால் இறக்கலாம், மூச்சுத் திணறி இறக்கலாம். ஆனால் சத்தியாக்ரகி விரும்பக் கூடியதும் வேண்டக் கூடியதும் இத்தகைய மரண மன்று. சத்தியாக்ரகி மரணம் என்னும் முறையானது தம்முடைய கடமையைச் செய்வதன் காரணமாக உண்டாகும் மரணத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்வதேயாகும். இந்த வித்தையைப் பம்பாய் மகாஜனங்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை யென்று தோன்றுகிறது. பகைவனை அடிக்கவோ கொல்லவோ செய்யாதிருந்தால் மட்டும் போதாது. பகைவனைக் கொல்லும் பொழுது வாளா பார்த்துக் கொண்டிருப்பவர்கள் சத்தியாக்கிரகிகளாக மாட்டார்கள். உயிரைக் கொடுத்தேனும் பகைவனைக் காப்பாற்றுவதே கடன். இந்திய மக்கள் இந்த வித்தையை மட்டும் கற்றுக்கொள்வார்களானல் இந்தியாவின் நிலைமை அடியோடு மாறிப்போகும். இந்தியர் தம்முடைய பலவீனத்தை மறைக்கவே அஹிம்சையை அனுஷ்டிப்பதாகக் கூறுகிறார்கள் என்று யாரும் குறைகூற மாட்டார்கள். நாமும் அக்கிரமச் செயல்கள் நடந்துவிட்டதற்குப் போக்கிரிகளைக் குறை கூறிக்கொண் டிருக்க மாட்டோம். அதற்குப் பதிலாக அவர்களை எல்லாம் சீர்திருத்தவும் அடக்கவுமே முயல்வோம்.

நாம் நமது சரித்திரத்திலே ஒரு நெருக்கடியான கட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். எங்கு பார்த்தாலும் அபாயம் உறுமிக்கொண் டிருக்கின்றது. ஆயினும் உலகத்திலே இணையற்ற சக்தியாயுள்ள சத்யாக்ரகத்தின் ஆற்றலை உணர்ந்து கொண்டால் அபாயத்தையே நாம் நமக்கு நலந்தரும் சந்தர்ப்பமாக மாற்றி விடலாம்."

## என்ன வெட்கக்கேடு!

**காந்தியடிகள் 11—3—46 மாலை பம்பாயில் ரங்டா மாளிகையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தின் சுருக்கம் :—**

பம்பாயில் சமீபத்தில் நடந்த சம்பவங்களைக் கேட்க எனக்கு நாணம் உண்டாவதுபோலவே உங்களுக்கும் உண்டாகும் என்று எண்ணுகிறேன். இங்கிருப்பவர்களில் யாரும் இந்தக் கேவலமான காரியங்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஆனால் அதைக் கொண்டு மட்டுமே உங்களைப் பாராட்டிவிட முடியாது. யாரும் சும்மா கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாத காலம் வந்துவிட்டது. எது சரி என்று மனம் ஏற்றுக் கொள்கின்றதோ அதைப் பகிரங்கமாகக் கூறவும் அதற்காகத் துன்பங்களை ஏற்கவும் தயாரா யிருக்க வேண்டும். தீப்பிடித்து எரியும்போது செயலற்று நிற்பது மன்னிக்க முடியாததாகும். இது என்ன அனுஷ்டிக்க முடிந்த லட்சியமா? ஆனால் உங்களுக்கு நான் சொல்லுகிறேன், கேளுங்கள், இப்பொழுது ஏற்பட்டுள்ள கஷ்டகாலத்தில் நம்மை ஈடேற்றக்கூடிய வழி இதைத் தவிர வேறு கிடையாது.

இப்போது ஏற்பட்டுள்ள அசங்கியமான சம்பவங்களை யெல்லாம் போக்கிரிகளின் செயல்கள் என்று கூறித் தப்பித்துக் கொள்வது இப்பொழுதைய பழக்கமாக ஆகியிருக்கின்றது. ஆனால் போக்கிரிகள் என்பவர்கள் தாம் யார்? அவர்களும் நம்முடைய நாட்டு மக்கள் தாமே. நம்முடைய நாட்டு மக்களில் யாரேனும் இத்தகைய செயல்களில் இறங்கினால் நாங்கள் எல்லோரும் ஒரே இனத்தவர் என்று தம்பட்டம் அடிக்கும் நாம் அவர்களுடைய செயல்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர் என்று கூற முடியாது. இந்தச் செயல்களைச் செய்தவர்களைப் போக்கிரிகள் என்று கண்டிப்பதிலும் தேசபக்தர்கள் என்று புகழ்வதிலும் பலனில்லை. இகழும், புகழும் எல்லோர்க்கும் உரியனவே. சுதந்திரம் அடைய விரும்புவோர் அனுசரிக்கத் தகுந்த ஒரே வழி கடமையைச் செய்யும்பொழுது இகழோ புகழோ எது வந்தாலும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வதேயாகும்.

### கடவுள் நெறி

உண்பதிலும் உறங்குவதிலும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் கிடையாது. மனிதனுடைய விசேஷ குணம் மிருகத்தைவிட உயர்ந்ததாக ஆவதற்கு இடைவிடாமல் முயல்வதேயாகும். மனித ஜாதியானது மிருக தர்மம் மனித தர்மம் என்ற இரண்டில் எதை ஏற்றுக் கொள்வது என்று தீர்மானிக்க வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள நாம் இருபத்தி ஐந்து வருடங்கட்கு முன்னதாகவே மனித தர்மத்தை ஏற்றுக்கொண்டு விட்டோம். ஆயினும் நாம் உயர்ந்த

நெறியில் நடப்பதாகக் கூறிக் கொண்டபோதிலும் நம்முடைய கூற்றுப் போன்றில்லை நம்முடைய அனுஷ்டானம். அஹிம்சைதான் வீரர்கள் ஆயுதம் என்று கோபுரமீது நின்று கோஷித்து வந்த போதிலும் நம்மில் சிலர் அஹிம்சையை பலவீனருடைய ஆயுதமாக உபயோகித்து அதற்கு அபகீர்த்தி தேடி வருகிறார்கள். சமீபத்தில் பம்பாயில் நடந்த அட்டூழியங்களை அடக்க முயலாமல் சும்மா பார்த்துக்கொண் டிருந்தவர்கள் அனைவரும் கோழைகளே யாவர். அஹிம்சை என்பது வீரருக்கே சொந்தம் என்று நான் மறுபடியும் மிகுந்த பணிவுடன் கூற விரும்புகிறேன்.

பிரிதம் என்னும் ஞானி "ஆண்டவன் காட்டும் நெறி வீரனுக்கே உரியது. கோழைக் கன்று" என்று பாடுகின்றார்.

ஆண்டவர் காட்டும் நெறி அஹிம்சையும் சத்தியமும் கூடிய நெறியே யாகும். அஹிம்சையாகவும் சத்தியமாகவுமே நான் கடவுளை வணங்குகின்றேன். உங்களுக்கு அஹிம்சா தர்மத்தின் சகல அம்சங்களிலும் நம்பிக்கை யில்லையானால், அதை நீங்கள் உபேட்சித்து விடலாம். யாரும் தடுக்க மாட்டார்கள்.

பிழைகளை ஏற்றுக்கொண்டு திருத்திக்கொள்வதே உய்யும் வழி என்பதில் நான் பரிபூரணமான நம்பிக்கை யுடையேன். அந்த மாதிரிப் பிழைகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆன்மாவைத் தூய்மை செய்து ஆற்றல் அளிக்கும். அஹிம்சையை அனுஷ்டிப்பவர் பழி வாங்காமல் பிறர் தரும் துன்பங்களை ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் அதன் பொருள் அதுமட்டுமே யன்று. உண்மையை உரைக்கவும் அதன்படி ஒழுகவும் வேண்டிய சந்தர்ப்பங்களில் வாயைப் பொத்திக்கொண்டு மௌனம் சாதிப்பது என்பதும் கோழைத்தனமே யாகும். அஹிம்சையையும் சத்தியத்தையும் கடைப் பிடித்தே சுதந்திரம் பெறுவோம் என்று காங்கிரஸ் மகா சபை கூறிவரும் வண்ணம் பெற வேண்டுமானால் அத்தகைய வீரத்தை வளர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். அதுதான் வாழ்வதற்கும் மடிவதற்கும் ஏற்ற இலட்சியமாகும். இந்த லட்சியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் ஒரே ஒரு ஆங்கில ஸ்திரியோ குழந்தையோ அடிக்கப்பட்டாலும் அது தம்முடைய அஹிம்சா தர்மக் கொள்கையை அறை கூவி யழைப்பதாகவே கருதவேண்டும். அவர்கள் உயிரை ஈந்தேனும் அவர்களைக் காக்கவேண்டும். அப்போதுதான் நாம் "கடவுள் காட்டும் நெறி வீரர்க்கே யன்றி கோழைகளுக்கன்று" என்ற பாடலைப் பாடத் தகுதியுடையவர்கள் ஆவோம். தற்சமயம் ஆட்சி செய்துவரும் பிரிட்டிஷ் சர்க்கார் தவறு செய்வதற்காக நிராயுதபாணிகளாயுள்ள ஆங்கிலப் பெண்களையும் குழந்தைகளையும் தாக்குவது என்பது மனிதன் என்னும் பெயர்க்கு இழிவு தேடுவதேயாகும்.

### சந்தேகிப்பது ஆண்மையன்று

"பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியார் வரப்போகிறார்கள். அவர்கள் நல்ல எண்ணத்துடன் வரவில்லை என்று இப்பொழுதே கூறிவிடுவது நம்முடைய பலவீனத்தையே காட்டும். நாம் வீரர்

கள் என்று காட்டும்பொருட்டு அவர்கள் உண்மையிலேயே இந்தியாவுக்கு அதன் பிறப்புரிமையாகிய சுயராஜ்யத்தை வழங்குவதற்காக வருவதாகக் கூறுவதை நம்புவதே நமது கடன். கடன் வாங்கியவர் கடனைத் திருப்பித் தர வந்தால் அவரை வரவேற்பது தானே கடன்? அப்படிக்கின்றி முன்னால் அநியாயம் செய்ததை மனத்தில் வைத்துக்கொண்டு இப்பொழுது நிந்திப்பதும் அவமதிப்பதும் ஆண்மைக்கு அழகாகுமா? பிரிட்டிஷ் சர்க்கார் சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்பதை இந்தக் கடைசித் தடவையும் காட்டிவிடட்டுமே, அதன்பின் கண்டிக்கக் காலங் கடந்துவிட மாட்டாது. அதுவரை கௌரவமாக மௌனமாயிருப்பதே வீரர்கள் மேற்கொள்ள வேண்டிய முறையாகும்."

## நீதி யாது?

"சூழப்பமடைந்தவர்" என்ற புனை பெயரில் ஒரு நிருபர் எழுதுகிறார்:—

"இத்தாலியும், ஜெர்மனியும், ஜப்பானும் தங்கள் ஆதிக்கத்தை இழந்துவிட்டன என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் அப்படி இழந்ததற்குக் காரணம் தாங்கள் கூறுவது போல அவர்கள் ஹிம்சையை நம்பியிருந்ததா? அல்லது நீண்ட நாள் யுத்தம் செய்ததால் ஏற்பட்ட சோர்வா? பிரிட்டனும் ருஷ்யாவும், அமெரிக்காவும் வெற்றி பெற்றதைக் கொண்டு அவைகள் செய்ததெல்லாம் அஹிம்சையின் பாற்படும் என்று சொல்லமுடியுமா?"

நிருபருடைய கேள்வியை அவருடைய வாதத்தின் வீறு குறையாதபடி சுருக்கியிருக்கின்றேன். என்னுடைய கட்டுரைகளிலிருந்து அவர் காட்டும் மேற்கோள்களில் வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறப்படும் நேச தேசங்களைப் பற்றி நான் எதுவுமே கூறவில்லை என்பதைக் கவனிக்கவில்லை. ஆயினும் அவர்கள் காலம் தவறிப்போவதற்கு முன்னதாகவே அஹிம்சா தர்மத்தை உணர்ந்து அப்படி நடந்து கொள்ளாவிட்டால் அவர்களுடைய வெற்றி எல்லாம் வெறும் தற்பெருமையாகவே இருக்கும் என்று பிறிதோரிடத்தில் கூறியிருக்கின்றேன்.

"வாளை எடுப்பவன் வாளாலேயே மடிவான்" என்னும் உண்மையில் நான் பரிபூரணமான நம்பிக்கை உடையவன். தோற்றவர்கள் கையாண்ட சாதனங்களையே வென்றவர்களும் கையாண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. உபயோகித்த அளவில்தான் வித்தியாசமேயன்றி வேறெதிலும் கிடையாது. வென்ற தேசத்தார் அனைவரும் அதற்குள்ளாகவே பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ள ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகிறது. அடுத்த யுத்தம் இன்னும் ஆரம்பமாகாதிருப்பதற்குக் காரணம் அதற்கு இன்னும் யாரும் தயாராக ஆகிவிடாததேதான். என்னதான் சொன்னாலும் மனிதர் என்பவர் வெறும் உயிரற்ற பொறிகள் அல்லரே. அதனால் அவர்கள் மிருகங்களைப்போலானாலன்றி இடைவிடாமல் யுத்தம் புரிந்துகொண்டிருக்க முடியாது. அவர்கள் ஆழ்ந்து

யோசித்து மனிதர்கள் பரஸ்பரம் கழுத்தை வெட்டிக் கொள்வதால் எவ்வித நன்மையும் அடையப் போவதில்லை என்பதையும், யுத்தத்தால் கிடைக்கும் நன்மைகளைவிடச் சமாதானத்தால் கிடைக்கும் நன்மைகளே சிறந்தவை என்பதையும் உணர்ந்தால் தான் மனித சமூகத்துக்கு விமோசனம் உண்டாகும். அழிக்கும் முறைகளைக் கண்டு பிடிப்பதற்காக உபயோகிக்கப் பெறும் சாமர்த்தியம் மனித ஜாதியைத் தாழ்த்தும்; ஆனால் ஆக்கும் முறைகளை கண்டு பிடிப்பதற்காக உபயோகிக்கப் பெறும் சாமர்த்தியமே மனித ஜாதிக்கு உகந்ததாகும்."

## காலத்தின் குறிகள்

ஜாலியன் வாலாபாக் தினத்தன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் பேசியதாவது :—

"தேசியவாரம் புனிதமான வாரம். இன்று அந்த வாரத்தின் இறுதிநாள். ஜாலியன்வாலா படுகொலை நடந்தது இன்றுதான். இந்தியாவில் சத்தியாக்கிரகம் ஏப்ரல் மாதம் ஆறுந்தேதி பிறந்தது. அதனால் ஜனங்களிடை ஏற்பட்ட விழிப்பு எதிர்பாராத அளவு அமோகமாயிருந்த படியால் சர்க்கார் அதைப் பயங்கர முறையைக் கையாண்டே அடக்கக்கூடியவர்களா யிருந்தார்கள். அவர்களுடைய அடக்குமுறையானது ஜாலியன்வாலா பாகிலே உச்சஸ்தானத்தை அடைந்தது. அந்த இடத்தில் ஜெனரல் டயர் என்னும் இராணுவ அதிகாரி ஐம்பது சிப்பாய்களைக்கொண்டு நிராயுதபாணிகளாகக் கூடியிருந்த ஜனக் கூட்டத்தின் மீது சுடச் செய்து சுமார் 500 பேரைக் கொல்லவும், 1500 பேரைக் காயப்படுத்தவும் செய்தான். அந்தத் தோட்டத்திலிருந்து வெளியே போவதற்கு ஒரே ஒரு வாசல்தான் இருந்தது. அந்த வாசலையும் ஜனங்கள் வெளியே போகாதபடி சிப்பாய்கள் நின்று அடைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகலால் இப்படிப் பொறியில் அகப்பட்டுக் கொண்ட நிரபராதிகளான ஆண்களும் பெண்களும் வெளியேற முடியாமல் வலையிலகப்பட்ட முயல்களைச் போலச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்தப் படுகொலை நடக்குமுன் ஜனங்கள் சில அக்கிரமங்கள் செய்து விட்டார்கள் என்பது உண்மையே. ஆனால், அதற்காகச் சர்க்கார் மேற்கொண்ட காட்டுமிராண்டிச் செயலுடன் ஒப்பிட்டால் ஜனங்களுடைய செயல் மிகமிக அற்பமானதே. ஆனால், ஏகாதிபத்தியங்கள் எல்லாம் இந்த விதமாகத் தான் நடந்து வந்திருக்கின்றன. ஒரு சில அன்னியர் இருந்து கொண்டு40 கோடி மக்களை அடக்கி ஆள்வதற்கு இதைத் தவிர வேறு வழி கிடையாது.

இந்தச் சம்பவங்களை யெல்லாம் இப்பொழுது ஏன் கூறுகிறேன்? மனக் கசப்பை உண்டாக்கவுமன்று, துவேஷக்கனலை அணையாமல் செய்யுவுமன்று. இந்த அட்டூழியத்துக்கு ஆஸ்பதமான பழைய ஆட்சி முறைக்கும் இப்பொழுது தூரத்தில் தெரியும்

புது முறைக்குமுள்ள வித்தியாசத்தை வற்புறுத்துவதற்காகவே யாகும். பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டியின் அந்தரங்க சுத்தியில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இறுதியாக பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் பரிபூரணமாக வெளியேறிவிடத் தீர்மானித்து விட்டார்கள் என்பதை முற்றிலும் நம்புகிறேன். இப்போது அவர்களுடைய மனத்தைக் கலக்கி வருவது, எப்படி ஒழுங்கான முறையில் வெளியேறுவது என்ற விஷயமேயாகும். அதைக் குறித்தே அவர்கள் தங்கள் சக்தி முழுவதையும் உபயோகித்து வருகிறார்கள். சால்புக்கு லட்சணம் யாதெனில், ஒருவன் இது வரைத் தவறு செய்தபோதிலும், இனிமேல் செய்வதில்லை என்று கூறி, இதுவரை செய்ததற்குத் தக்க பரிகாரம் செய்ய முயல்வானாயின், அவனைப் பாராட்டுவதும் அவனுக்கு வந்தனம் அளிப்பதுமே யன்றி, முன்னால் செய்த தவறுகளைக் கூறிப் புண்படுத்துவதன்று.

நீங்கள் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணனையும் டாக்டர் லோஹியாவையும் அறிவீர்கள். அவர்கள் இருவரும் அதிகமான துணிவுடைய வீரர்களும் பண்டிதர்களுமாவார்கள். அவர்கள் இஷ்டப்பட்டிருந்தால் ஏராளமான பணம் எளிதில் சம்பாதித்திருக்க முடியும். ஆயினும் அவர்கள் அப்படிச் செய்யாமல் தியாகத்தையும் சேவையையுமே மேற்கொண்டார்கள். தேசத்தின் அடிமைத் தளைகளை அறுத்தெறிவதே அவர்களுடைய வாழ்க்கை லட்சியம். அதனால் அன்னிய சர்க்கார் அவர்களைத் தங்களுடைய வாழ்வுக்கு அபாயமானவர்கள் என்று கருதியதிலும், அவர்களைச் சிறைக்குள் தள்ளியதிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் அவர்களுடைய தகுதியை அறிந்துகொள்ள நாம் வேறு உரைகல் வைத்திருக்கின்றோம். அவர்களை நாம் தங்களை ஈன்ற தாய்நாட்டிடமுள்ள பக்திக்காக அனைத்தையும் தியாகம் செய்த தேசபக்தர்களாகப் போற்றுகின்றோம். அவர்கள் அஹிம்சையிலிருந்து வழுவிய விஷயத்தை இப்போது ஆராய வேண்டியதில்லை. இப்பொழுது கவனிக்கவேண்டிய விஷயம், இந்தியாவுக்குப் பூரண சுயேச்சை வேண்டும் என்பதில் நமக்கும் பிரிட்டிஷாருக்கும் கருத்து ஒற்றுமை உண்டாயிருக்கின்றது என்பதே யாகும். அதனாலேயே அவர்களை இப்போது சர்க்கார் அபாயமானவர்களாகக் கருதவில்லை இந்த விதமாகப் பார்த்தால் இவர்களுடைய விடுதலையும் நேற்று இந்திய தேசிய ராணுவத்தினர் பெற்ற விடுதலையும் தூது கோஷ்டியாரும் வைஸிராயும் அந்தரங்க சுத்தியாகவே நடக்கின்றார்கள் என்பதற்கு அத்தாட்சியாகும். இதற்காக நாம் அவர்களுக்கு வந்தனம் செலுத்தவேண்டும். அத்துடன் அவர்களுக்கு அறிவை அருளிவரும் கடவுளுக்கும் வந்தனம் செலுத்தவேண்டும்.

இன்றுடன் முடிவடைகிற சத்தியாக்கிரக வாரத்தை நாம் எப்பொழுதும் வகுப்பு ஒற்றுமை உண்டாக்கவும், கதரைப் பரவச் செய்யவுமே உபயோகித்து வருகின்றோம். வகுப்பு ஒற்றுமை என்பதில் இந்து முஸ்லிம் ஒற்றுமை மட்டுமன்று, இங்கிலீஷ்

காரருடன் ஏற்படவேண்டிய ஒற்றுமையும் அடங்கும். வகுப்பு ஒற்றுமை யாருக்கும் தீங்கு செய்வதாக இருத்தலாகாது. அது தான் அஹிம்சையின் தத்துவமாகும்.

தேசீய வாரமானது உள்ளத்தைச் சோதித்துத் தூய்மை செய்வதற்கும் பிரார்த்தனை செய்வதற்குமாக ஏற்பட்டதாகும். உள்ளத் தூய்மை யில்லாதவர் பிரார்த்தனை செய்ய இயலாது."

## புனிதமான வாரம்

ஏப்ரல் 6-ம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் ஹிந்துஸ்தானியில் செய்த பிரசங்கத்தின் சாராம்சமாவது :—

"இதே தினத்தில்தான், காலஞ் சென்ற சிரத்தானந்தஜி உயிரோடு இருந்தபொழுது ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் புரட்சி ஆரம்பித்தது. இந்த வாரத்தில் இந்தியாவில் புதிய தோர் சகாப்தம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதன் முதலாக அகில இந்தியாவிலுமுள்ள மக்கள் அனைவரும் ஒரே திரளாகத் திரண்டார்கள். இது முற்றிலும் தானாகவே ஏற்பட்ட புரட்சியாகும்.

இந்தச் சமயத்தில்தான் ஜனங்கள் முதன் முதலாக ஹிந்து முஸ்லீம் என்ற வித்தியாசத்தை மறந்து இருந்தனர். நானும் அலி சகோதரர்களும் இந்தியா முழுவதும் உடன்பிறந்த சகோதரர்கள் போல் சுற்றுப் பிரயாணம் செய்தோம். நாங்கள் ஒரே முகமாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப் பற்றியும், சுதந்தரத்தைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துச் சொன்னோம். இனிமேல் ஆங்கில அரசாங்கத்திடம முறையிடுவதை விட்டுவிட்டு கடவுளிடம் பிரார்த்தனை மூலம் முறையிடத் தீர்மானித்தோம். அப்படியே சத்தியாக்கிரகம் இந்தியாவில் ஆரம்பமாயிற்று. அலி சகோதரர்கள் தேசீய தினத்தன்று ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின்படி உண்ணாவிரதத்திலும் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டார்கள். மக்கள் ஏப்ரல் 6ஆம் தேதியிலிருந்து 13ம் தேதி வரையில் உண்ணாவிரதமிருந்தனர். யாவரும் கடவுளின் குழந்தைகள் என்பதையும் தாய்நாட்டில் வாழ்ந்தால் ஒன்றாக வாழவேண்டும், வீழ்ந்தால் ஒன்றாக வீழவேண்டும் என்பதையும் உணர்ந்தார்கள். ஆயிரக் கணக்கான ஜனங்கள் கோயில்களிலும், சர்ச்சுகளிலும், மசூதிகளிலும் கூடி பிரார்த்தனை நடத்தினார்கள். டில்லியிலுள்ள ஜும்மா மசூதியில் முஸ்லீம்களுடன் ஹிந்துக்கள் பெருந் திரளாகக் கூடினர். சுவாமி சிரத்தானந்தர் பேசினார். இந்த விதமாக இந்து முஸ்லீம் ஐக்கிய நிலைமை உச்சஸ்தானம் அடைந்தது. இந்திய சரித்திரத்திலேயே இது ஒரு பெரிய வெற்றிகரமான நாள். நாம் எப்பொழுதும் மறக்காமல் போற்ற வேண்டிய நாளாகும்.

இப்போது அந்த நிலைமை மாறி விட்டது. ஹிந்து முஸ்லீம்களுடைய இருதயங்கள் பிரிந்து விட்டன. சூழ்நிலை ஜாதி வித்தி

யாச வெறுப்பாலும், பகைமையாலும் மோசமாகி விட்டது. முஸ்லீம்களில் ஒரு பகுதியினர் வேறு தேச இனத்தினர் என்று சொல்ல ஆரம்பித்திருக்கின்றனர். அவர்கள் சொல்வதை அர்த்தம்செய்து கொள்ள முடியவில்லை. அதனுல் அதைப் பற்றி இப்பொழுது பேச விரும்பவில்லை.

நாம் இன்று இந்தக் கூட்டத்தைப் பிரார்த்தனையுடனேயே ஆரம்பித்திருக்கிறோம். நமக்குப் பிரார்த்தனையில் நம்பிக்கையிருக்குமாஞல் நாம் பிறர் தொண்டையை நெரிக்கவோ பிறரைப் பகைவராகக் கருதவோ மாட்டோம். அமிர்தசரஸ் நகரத்தில் ஜனங்கள் யோசனையின்றித் தவருன காரியங்களில் இறங்கி விட்டார்கள்.

ஆனுல் நாங்கள், உடனே செய்த குற்றத்தை உணர்ந்தோம். பரிகாரம் தேடினோம். மன்னிக்கும்படி கடவுளிடம் பிரார்த்தனையும் செய்தோம். உண்ணுவிரதமும் இருந்தோம். குற்றம் செய்வது மனித இயல்பு. செய்த குற்றத்தை உணர்வதே இனிச் செய்யாமலிருப்பதற்கு முதற்படியாகும்.

அதற்கு மாருகத், தன்னுடைய குற்றத்தை மறைக்க முயல்பவன் வஞ்சகமே உயிர்பெற்றது போல் வாழ்ந்து அழிகின்றன். மனிதன் மிருகமுமல்லன், கடவுளுமல்லன். தெய்வத்தன்மை அடைய முயலும் கடவுள்சிருஷ்டி ஆவான். தவறை உணர்வதும், தன்னைத்தானே திருத்திக் கொள்வதுந்தான் அதற்குச் சாதனங்கள். தவறை உணர்ந்து கடவுளிடம் மன்னிப்புக் கேட்ட உடனே நம்முடைய பாவம் நீங்கி, புது வாழ்வு உண்டாகிறது. உண்மையான பச்சாத்தாபமே பிரார்த்தனைக்கு அஸ்திவாரமாகும்.

பிரார்த்தனை என்பது வாயால் மாத்திரம் ஜபிப்பதன்று. நல்ல காரியங்கள் செய்வதானுல்தான் அதற்கு அர்த்தமுண்டு. அப்படியானுல் இந்தப் புனிதமான வாரத்தில் பிரார்த்தனை செய்ய வேண்டிய முறை யாது? நம்முடைய மனதில் ஒளிந்து கிடக்கக் கூடிய வகுப்புத் துவேஷத்தையும் கெட்ட எண்ணத்தையும் ஒரு ரேகைகூட யில்லாமல் மனதைச் சுத்தம் செய்வதேயாகும். ஆகவே வகுப்பு ஒற்றுமை உண்டாக்குவது என்பது ஒரு வகையான பிரார்த்தனையேயாகும். அஹிம்சா பூர்வமான சுயராஜ்யத்தை அடைவதற்காக நூல் நூற்கும் யக்ஞத்தை நடத்துவதன் மூலமும் பிரார்த்தனை செய்யலாம். 1919-ம் வருஷத்தில் பஞ்சாபிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் கைராட்டினத்தின் சங்கீதம் இசைத்துக் கொண்டிருந்தது எனக்கு இன்றும் தெளிவாக ஞாபகமிருக்கிறது. ஒரு சமயம் நான் சுற்றுப் பிரயாணம் செய்த போது கைராட்டின நூலை ஒரு மலையாகக் குவித்து எனக்குப் பரிசளித்தார்கள். எனக்கு அவ்வளவு நூல் அளித்தது அதற்கு முன்பும் கிடையாது. பின்பும் கிடையாது. இப்பொழுதுதான் என்னுடைய சென்னைச் சுற்றுப் பிரயாணத்தின் போது மதுரை நகரத்தில் அந்த அளவு நூல் அளிக்கப்பட்டது. அப்படிப் பரிசளித்த பஞ்சாபிலுள்ள சகோதரிகள் இப்பொழுது என்ன

செய்துகொண்டிருக்கிறார்கள்? உள்ளத்தைப் பரிசோதித்துத் தூய்மைப் படுத்துவதற்காக ஏற்பட்ட இந்த வாரத்தில் நீங்கள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இதுவே. இந்தியாவிலுள்ள நாற்பது கோடி மக்களும் உண்மையாகவே கைராட்டினத்தில் நம்பிக்கை யுடையவர்களாய், சுயநலமின்றி தியாக உணர்ச்சியுடன், கடவுளை இதயத்தில் ஏற்றுக்கொண்டு, அஹிம்சா மூலமாகச் சுதந்திரம் பெறும் நோக்கத்தோடு நூல் நூற்கட்டும் செய்வார்களானால், அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்யும் முயற்சி நமக்கு நிச்சயமாகச் சுயராஜ்யத்தைத் தேடித் தருவதோடு சுயராஜ்யம் வந்தபின் அதைப் பாதுகாப்பதற்கான சாதனங்களையும் அளித்து, இருளில் தடவிக்கொண்டிருக்கும் உலகத்துக்கு வழி காட்டவும் செய்யும்.

சில நாட்களுக்கு முன் நான் டில்லிச் "செங்கோட்டை"க்குச் சென்று இந்திய தேசீய இராணுவ வீரர்களைக் கண்டு பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் விடுதலை அடைந்தபின் செய்ய வேண்டியது யாது என்பதுபற்றி விவாதித்தோம். அவர்கள் தாங்கள் விடுதலை பெற்ற பிறகு காங்கிரஸ் கொடியின் கீழ் நின்று அஹிம்ஸா வீரர்களாக இந்தியாவுக்குச் சேவை செய்யப் போவதாக உறுதி கூறுகிறார்கள் யார் உடையில்லாமல் வாடுபவர்க்கு உடை கொடுப்பதற்காக நூல் நூற்கிறார்களோ, யார் நம்மை பயமுறுத்தி நிற்கும் பஞ்ச நிலைமையைச் சமாளிக்க அதிகமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்களோ அவர்களேதாம இன்றையதினம் உண்மையான இந்தியப் போர் வீரர்கள் ஆவார்கள் என்று அவர்களிடம் கூறினேன். காங்கிரஸ் மகா சபையானது இந்திய சுதந்திரப் போரை அஹிம்சா முறையிலேயே நடத்தத் தீர்மானிக்கிறது. ஆனால் சுதந்திரம் அடைந்தபின் அதைப் பறிக்கப் பிற நாட்டார் படை யெடுத்தால் அவர்களை எதிர்க்கவும் அஹிம்சா முறையை அனுஷ்டிப்பதா இல்லையா என்ற விஷயமாக இன்னும் அது ஒரு முடிவுக்கு வரவில்லை. சுதந்திரத்தை எல்லோரும்—நொண்டியும் சப்பாணியுங்கூடச் சமமாக அனுபவிப்பதா யிருந்தால், அவர்களும் அதைப் பாதுகாக்க மற்றவர்களைப் போலவே உதவி செய்யக் கூடியவர்களா யிருக்க வேண்டும். ஆயுதத்தைக் கொண்டுதான் பாதுகாக்க முடியும் என்றால் அவர்கள் எப்படி உதவி செய்ய முடியும் என்பது என்னுடைய பாமர மூளைக்கு விளங்கவேயில்லை. ஆதலால் நான் அஹிம்சை, சத்தியாக்ரகம், ஆத்ம சக்தி என்பவற்றை இதுவரை வற்புறுத்தி வருவதுபோலவே இனிமேலும் வற்புறுத்தி வருவேன். அஹிம்சா முறையை அனுஷ்டிக்க உடல் பலவீனம் இடையூறாக இருக்கமாட்டாது. துர்ப்பலமான பெண்ணும் குழந்தையுங்கூட சர்வாயுதபாணியான அரக்கனையும் எதிர்க்க முடியும்.

கட்டுப்பாடாக அமைந்துள்ள ஒரு ஜன சமூகம் அஹிம்சையை அனுஷ்டிப்பதற்கு அனுகூலமாகவே கைராட்டினத்தைக் கேந்திரமாகக் கொண்ட 18 அம்ச நிர்மாணத் திட்டத்தை வகுத்

திருக்கின்றேன். இந்த தேசிய வாரத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அஹிம்சா சக்தியை வளர்ப்போமாக."

## இரக்கமும் இரக்கமின்மையும்

அஹிம்சை, இரக்கம், அன்பு, உண்மை என்னும் அறங்களின் மேன்மையானது ஹிம்சை, இரக்கமின்மை, துவேஷம், பொய் முதலியவைகளை எதிர்த்து நிற்கும் போதுதான் விளங்கும்.

இது உண்மையாகுமானல், அஹிம்சையால் கொலைகாரனை வெல்ல முடியாது என்று கூறுவது தவருகும். கொல்ல வருகிறவனிடம் அஹிம்சையாக நடப்பது அழிவைத் தேடிக் கொள்வதேயாகும் என்று கூறக்கூடும். ஆனல், இதுதான் அஹிம்சையின் உண்மையான சோதனையாகும். எதிர்க்க விரும்பியும் எதிர்க்கப் பலமில்லாத காரணத்தால் கொல்லப்படுகிறவனை அஹிம்சையை அனுஷ்டித்தவனுகக் கூற முடியாது. ஆனல், கொலை செய்ய வருகிறவனிடம் துவேஷம் கொள்ளாமல் அவனை மன்னிக்குமாறு கடவுளிடம் வேண்டிக் கொள்ளுகிறவனே உண்மையாக அஹிம்சையை அனுஷ்டித்தவனுவான். இயேசு கிறிஸ்து இவ்விதமாகவே நடந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. சிலுவையில் அறையப்பட்டு இறக்கும் தறுவாயிலிருந்த சமயம்—"தந்தையே! அவர்கள் செய்வதை அறியார், அதனல் அவரை மன்னித்தருளும்!" என்று கூறினராம். இதேமாதிரிப் பல பெரியோர்கள் நடந்து கொண்டிருக்கிருர்களாயினும் இது உலகப் பிரசித்தமா யிருப்பதால் இதை மட்டும் இங்கு கூறினேன்.

நாம் அஹிம்சையை இந்த அளவுக்கு அனுஷ்டிக்கவில்லை என்பது உண்மைதான். ஆயினும் நம்முடைய பலவீனத்தையும் அனுபவக் குறைவையும் எண்ணி நாம் அஹிம்சையை அரைகுறையாக அனுஷ்டித்தால் போதும் என்று எண்ணிவிடலாகாது. லட்சியத்தைச் சரியாக அறிந்து கொள்ளாவிட்டால் ஒரு நாளும் அடைந்துவிட முடியாது. ஆதலால் அஹிம்சையின் ஆற்றலை அறிய நாம் நம்முடைய பகுத்தறிவை உபயோகிக்க வேண்டியது அவசியமாகும்.

## இ. தே. ராவின் இலட்சியங்கள்

மேஜர் ஜெனரல் ஷா நவாஜும் கர்னல் ஷேகாலும் காந்தியடிகள் பம்பாயில் தங்கியிருந்த சமயத்தில் வந்து இ. தே. ரா. வீரர்கள் இனிச் செய்யவேண்டியது யாது என்பது குறித்துக் காந்தி யடிகளுடன் விவாதித்தார்கள்.

அவர்கள் கூறினர்கள்: எங்கள் வீரர்கள் அஹிம்சா முறையில் தேச சேவைசெய்து புகழ்பெற விரும்புகிருர்கள். ஆனல் அவர்களுக்கு ஜீவனேபயோகத்துக்கான வழியைக் காட்டினலொழிய

அவர்களைத் தர்ம நியாயத்தை அனுசரியாதவர்கள் தங்கள் நலனுக்காகத் தவருன வழியில் உபயோகித்துக் கொள்வார்கள். அதனால் நாங்கள் செய்ய வேண்டியது யாது?

**காந்தியடிகள் :** நான் சென்னையில் கூறியதையே உங்கட்குக் கூறுகிறேன். பிறர் கை பார்த்து வாழ்வது வீரனுடைய கௌரவத்துக்கும் சுயமரியாதைக்கும் அழகன்று. அவர்கள் யோக்கியமான தொழில்கள் செய்தே தங்கள் ஜீவனத்தை நடத்திக்கொள்ள வேண்டும். இ. தே. ரா. சகாயநிதி இருந்தாலும் அதிலிருந்து உதவி பெறுதல் தவறு. தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்ரகக் கைதிகளின் குடும்பத்தாரை டால்ஸ்டாய் ஆச்சிரமத்தில் வேலை செய்யுமாறு செய்தே அவர்களுக்கு ஜீவனோபாயத்துக்கு வழி செய்தேன். இந்த முறையின் மேன்மை யாதெனில் எவ்வளவு அதிகமாக இதை அனுஷ்டித்தாலும் செலவும் கஷ்டமும் அதிகமாகா என்பதே யாகும். இ. தே. ரா. வீரர்களுடைய சிறப்பு இனிமேல்தான் வெளியாகவேண்டும். யுத்த களத்தில் போர் செய்வதில் ஒருவிதக் கவர்ச்சியும் மகிழ்ச்சியும் உண்டு. அவை சாதாரண வாழ்வில் கிடையா. அத்துடன் இப்பொழுது நாட்டில் பஞ்சம் என்னும் பேய் நடமாட ஆரம்பித்திருக்கிறது. உங்கள் வீரர்கள் யுத்த களத்தில் காட்டிய மனோதைரியம், ஒற்றுமை, விடாப்பிடி முதலிய நற்குணங்களை இந்தப் பஞ்சப் பேயைத் துரத்துவதிலும் காட்டுவார்களா? துப்பாக்கியை உபயோகிப்பதில் காட்டிய திறமையை எல்லாம் மண்வெட்டியையும் ஏரையும் உபயோகிப்பதில் காட்டுவார்களா? உணவு உண்டாக்குவதற்காகக் கிணறு வெட்டுவதும் காட்டை வெட்டித் திருத்துவதும் உடை உண்டாக்குவதற்காகக் கைராட்டினத்தைச் சுழற்றுவதும் கைத்தறியை ஓட்டுவதுமே இன்றுள்ள நிலைமையில் தேசத்தின் தேவைகள் ஆகும். உங்கள் வீரர்கள் இந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வருவார்களா? அவர்களிடம் பலமிருக்கிறது. கட்டுப்பாடிருக்கிறது, அவற்றிற்கு மேலாக வகுப்பு வாதத்தால் கறைப்படாத ஒற்றுமையும் ஐக்கியமும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் அவர்கள் ஜனங்களிடம் அஹிம்சா முறையில் கட்டுப்பாடும் நிர்மாணமும் உண்டாக்குவதற்கு வேண்டிய சக்தியை விசேஷமான அளவில் அளிக்கின்றன. வீரன் என்ற பெயருக்குத் தகுந்த ஒவ்வொருவரும், இஷ்டப்பட்டால் வேலை செய்வதற்கு நிர்மாணத்திட்டம் தயாராகி யிருக்கின்றது. அந்த வேலையை மேற்கொண்டால் அவர்களிடை வேலையில்லாதவர் யாரும் இருக்க மாட்டார்கள்.''

இவ்விதமாகக் காந்தியடிகள் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது இங்கிலாந்து தேசத்தில் தேசீயச் சேனையின் தளகர்த்தராயிருந்த கிராம்வெல் என்பவரைப் பற்றி ஆங்கிலச் சரித்திராசிரியர் கூறியது ஞாபகத்துக்கு வந்தது :

"இந்தச் சுறு சுறுப்பான, ஒழுக்கமுள்ள யோசிக்கும் சக்தியுடைய, தெளிவான புத்தியுள்ள மக்கள் சேனையில் சேர்ந்து

ஆயுதபாணிகளாக ஆகியதற்குக் காரணம் வறுமையுமன்று. புதுமையிலுள்ள அவாவுமன்று. படை திரட்டும் உத்யோகஸ்தருடைய பசப்பு வார்த்தையுமன்று. மதவிடுதலே, அரசியல், சுதந்திரம், புகழ் இவற்றிலுள்ள ஆசையும் உற்சாகமுமே யாகும். அந்த வீரர்கள் தாங்கள் கூலிக்காரர்கள் அல்லர் என்றும் தேசத்தின் சுதந்திரத்தையும் மதத்தையும் காப்பதைக் கடமையாக எண்ணும் ஆங்கிலச் சுதந்திர புருஷர்களே என்றும் பெருமை பேசிக் கொண்டார்கள்.

யுத்த களத்தில் இந்த அபூர்வமான சக்தியை யாராலும் எதிர்க்க முடியவில்லை. சில படைகளில் ஒழுக்கம் காணப்படும்; சில படைகளில் உற்சாகம் காணப்படும். ஆனல் கிராம்வெல் தளபதியின் படையில்தான் உறுதியான கட்டுப்பாடும் ஓங்கி வளரும் உற்சாகமும் ஒருங்கே காணப்பட்டன. அவருடைய படைகள் யந்திரங்களைப் போன்ற ஒழுங்குடனும் மத வைராக்கியரைப் போன்ற உறுதியுடனும் சென்று வெற்றி பெற்றன.

ஆனல் மற்றப் படைகளில் காணப்படாமல் கிராம்வெல் படையில் மட்டும் காணப்பட்ட விசேஷ அம்சம் சகல வீரர்களிடமும் காணப்பட்ட ஒழுக்கமும் பயபக்தியுமே யாகும். அந்தப் படையில் ஆணையிடுவதும், குடிப்பதும், சூதாடுவதும் காணப்படவில்லை. நீண்ட காலமாக இராணுவ ஆட்சி நடைபெற்ற போதிலும் சொத்துக்கோ கற்புக்கோ சிறிதளவுகூடப் பங்கம் உண்டாகவில்லை.''

சேனையைக் கலைத்தபொழுது இராணுவத் தொழிலில் பழகிய ஐம்பதாயிரம் பேர் வீடு திரும்பினர். இந்த மாதிரி நிகழும் பொழுது, கஷ்டமும் திருட்டும் உண்டாவதும் வீடு திரும்பிய வீரர்கள் தெருத் தெருவாகப் பிச்சை ஏற்பதும் சகஜம். ஆனல் அத்தகைய காரியம் ஒன்றும் நடைபெறவில்லை. உலகில் யாராலும் வெல்ல முடியாதிருந்த வீரர்கள் அனைவரும் சிலமாத காலத்துக்குள் சாதாரணமான தொழில்களில் ஈடுபட்டு விட்டார்கள். இவர்களுக்கு எதிரியாயிருந்த ராஜ பக்தர்கள்கூட இவர்களே மற்றவர்களைவிட அதிக வருமான முடைவர்களா யிருந்தார்கள் என்றும் இவர்களுள் ஒருவர்கூடத் திருட்டுக் குற்றச்சாட்டு செய்யப்பட்டதில்லை என்றும், யாரும் பிச்சை எடுக்கக் காணப்பட்டதில்லை என்றும், யாரேனும் ஒரு கொத்தரோ வண்டிக்காரரோ குடியாதவராகவும் சுறுசுறுப்புள்ளவராகவும் காணப்பட்டால் உடனே அதைக் கிராம்வெல் படைவீரர் என்று தீர்மானித்து விடலாம் என்றும் சாட்சி கூறுகிருர்கள்.''

# இப்பொழுது கூலிப் பட்டாளமன்று

காந்தியடிகள் இயற்கைச் சிகிச்சைசாலை ஏற்படுத்தும் பொருட்டு உருலி என்னும் கிராமம் சென்றார். அங்கே ராணுவ முகாம் ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. அதிலுள்ள இந்திய வீரர்களில் சிலர் காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார்கள்.

**வீரர்கள் :**—நாங்கள் போர் வீரர்கள்தான்; ஆனால் இந்தியாவுக்குச் சுதந்திரம் தேடும் போர் வீரர்களே யாவோம்.

**காந்தியடிகள் :**—அதைக் கேட்டு சந்தோஷம் அடைகின்றேன். ஏனெனில் நீங்கள் இதுவரை இந்தியா சுதந்திரம் அடைவதைத் தடுப்பதற்காக உபயோகிக்கப்பட்டு வந்தீர்கள். ஜாலியன் வாலாபாக் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

**வீரர்கள் :**—ஆம், கேட்டிருக்கிறோம், ஆனால் அந்தக் காலம் எல்லாம் போய்விட்டது. அந்தக் காலத்தில் நாங்கள் கிணற்றுத் தவளைகளாகவே இருந்தோம். இப்பொழுது நாங்கள் விஷயங்களை அறிந்து கொள்கிறோம். இப்பொழுது எங்கள் கண்கள் மூடியிருக்கவில்லை. நாங்கள் கூலிக்காகச் சேர்ந்துள்ளவர்கள்தாம். ஆனால் இப்பொழுது நாங்கள் அதைப் பிரதானமாகக் கருதவில்லை.

**காந்தியடிகள் :**—அதைக் கேட்க எனக்குப் பரம சந்தோஷமாயிருக்கிறது. நான் கூலிப் பட்டாளம் என்று கூறியது உங்களை இழித்துக் கூறுவதற்காகவன்று. சாப்பாட்டுக்காக அன்னிய சர்க்காரிடம் சேவை செய்யும் பட்டாளம் என்று கூறுவதற்காகவே அப்படிச் சொன்னேன். அந்தச் சொற்றொடரைக் கண்டு அனேகர் கோபித்தார்கள். ஆயினும் நான் கூறியதில் தவறு எதுவும் கிடையாது. அதை நான் கூறியதும் நம்முடைய நாட்டில் நடைபெற்றுவரும் இராணுவமுறை அடியோடு ஒழிய வேண்டும் என்பதற்காகவே யாகும்.

**வீரர்கள் :**—இந்தியா சுதந்திரம் பெற்றால் எங்கள் நிலைமை எவ்வாறாகும்?

**காந்தியடிகள் :**—அப்பொழுது மற்றவர்களைப் போலவே நீங்களும் சுதந்திரம் பெறுவீர்கள். இந்தியா சுதந்திரம் பெற்றபிறகும் இந்தியாவுக்கு வீரர்கள் வேண்டியவர்களே. நீங்கள் இராணுவப் பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். அதை நீங்கள் இந்தியாவுக்காகப் பயன்படுத்த வேண்டும். அபாயம் உண்டாகும் பொழுது அனைவரும் ஒன்றுசேர்ந்து எதிர்க்கிற குணத்தை அடைந்திருக்கிறீர்கள். அபாயம் அகன்றுபோனதும் அந்தக் குணமும் அகன்று போகுமானால் அது நாட்டுக்கு நல்லதன்று.

ஆனால் உங்களுக்கு இப்பொழுது தரப்படும் விசேஷ சௌகரியங்கள் சுதந்திர இந்தியாவில் தரப்படமாட்டா. இப்பொழுது அன்னிய அரசாங்கமானது இந்திய ஏழைகளின் பணத்தை

அள்ளி வீசி உங்களுக்கு லஞ்சம் கொடுப்பது போல விசேஷ சுக போகங்கள் ஏற்படுத்தி யிருக்கிறதே 'அவைகள் எதுவும் சுதந்திர இந்தியாவில் கிடையாது. இந்தியா பரம ஏழை ஆதலால் நீங் களும் ஏழையாக இருக்கத் தயாராக இருந்தால்தான் இந்தியா வுக்குச் சேவைசெய்ய முடியும். சுதந்திரம் சுதந்திரம் என்று பறந்து கொண்டிருக்கும் இந்தியா இ. தே. ரா. வீரர்களை உங் சரிப்பது சகஜம்தான். ஆனால் அந்த வீரர்கள் அதில் மயங்கி இந்தியாவின் வறுமை நிலைமையை மறந்து விடுவார்களானால் அவர் கள் தங்கள் தேச மக்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குப் பதிலாக சாபத்தையே பெறுவார்கள் என்று காப்டன் ஷா நவா ஜிடம் கூறினேன். அதையே உங்களுக்கும் கூற விரும்பு கின்றேன். நீங்களும் உங்கள் விசேஷ உரிமைகளை வேண்டாம் என்று துறந்துவிடத் தயாராக இருந்தாலன்றி நீங்கள் சுயராஜ்யம் வரும் பொழுது சந்தோஷப்படுவதற்குப் பதிலாக வருத்தமே படு வீர்கள். முன்னிருந்த எஜமானர்களை எண்ணி ஏங்குவீர்கள்.

## புதிய எழுச்சி

வீரர்கள் :—பத்திரிகைகளைப் படிக்க விடாதிருந்த காலமும் ஒன்றுஇருந்தது. ஆனால் இப்பொழுதோ நாங்கள் நேரே மேலதிகாரி களிடம் சென்று எங்கள் மாபெருந் தலைவரைத் தரிசிக்கப் போவ தாகக் கூறுகிறோம், யாரும் எங்களைத் தடுக்கத் துணிவதில்லை.

காந்தியடிகள் :—ஆம் இப்பொழுது ஒரு புதிய எழுச்சி உண்டா யிருக்கிறது இராணுவ வீரர்களிடையே என்பதை அறிவேன். இந்தச் சந்தோஷகரமான மாறுதலை உண்டாக்கியதன் பெருமை யில் பெரும்பாகம் நேத்தாஜி போஸுக்கே உரியதாகும். அவ ருடைய முறையை நான் அங்கீகரிக்கா விட்டாலும் அவர் இந்தியப் போர் வீரர்க்குப் புதியதோர் இலட்சியத்தைச் காட்டியதன் மூலம் இந்தியாவுக்கு மகத்தான சேவை செய்திருப்பதைப் பாராட்டவே செய்கின்றேன்.

வீரர்கள் :—இந்தியாவை இரண்டு மூன்றாகப் பிரிக்க வேண்டு மென்று கூறுகிறீர்களே, அது இராணுவத்திலுள்ள எங்களுக்கு அர்த்தமே ஆகவில்லை. எங்களுக்கு ஒரே ஒரு இந்தியாதான் தெரியும், அந்த இந்தியாவுக்காகத்தான் நாங்கள் போரும் புரிந் தோம், ரத்தமும் சிந்தினோம்.

காந்தியடிகள் :—ஆனால் உலகத்தில் மனிதர்கள் ஒரே மாதிரி யாக இருப்பார்களா?

அனைவரும் சிரித்தார்கள்.

பிறகு வீரர்கள் கள்ளங்கபடற்ற சிறுபிள்ளைகளைப் போல— "நாங்கள் கோஷங்கள் போடலாமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு காந்தியடிகள்—" அதில் என்ன ஆட்சேபம் " என்று கூறினார். அவ்வளவுதான் அவர்கள் எல்லோரும் " ஜெ ஹிந்த் " என்றும் "நேத்தாஜிக்கு ஜே" என்றும் கோஷித்தது வானைப் பிளந்து விட்டது.

# இந்திய தேசீய ராணுவத்தின் படிப்பினை

காந்தியடிகள் இந்திய தேசீய ராணுவக் கைதிகளைப் போய்ப் பார்த்து வந்த மறுதினம் மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

" நேற்று முதல் என்னுடைய மனத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் கருத்துக்களை உங்களிடம் கூற விரும்புகிறேன். நமது தேசம் விடுதலை பெற்ற இ. தே. ரா. வீரருக்கு ராணுவ உபசாரம் செய்திருக்கின்றது. தேசீய வீர சிகாமணிகள் என்று போற்றுகிறது. எல்லோரும் பொதுஜன ஆவேசத்தில் தட்டுத் தடுமாறி ஆனந்த நிலையில் நிற்கிறார்கள். ஆயினும் இப்படித் தலைகால் தெரியாமல் வீர பூஜை செய்வது எனக்குப் பிடிக்கவில்லை என்பதை நான் ஒளியாமல் ஒப்புக் கொள்கின்றேன். நான் இந்திய தேசீய இராணுவத்தாருடைய சாமர்த்தியத்தையும் தியாகத்தையும் தேசபக்தியையும் நான் போற்றுகின்றேன். ஆயினும் நான் அவர்கள் தேச சுதந்திரம் அடைவதற்காக மேற்கொண்ட முறையைச் சரி என்று சொல்ல முடியாது. அது காங்கிரஸ் மகா சபை சென்ற 25 வருஷகாலமாக அனுஷ்டித்து வரும் முடிவுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். நேற்று நான் உங்களிடம் ஸ்திதப்ரக்ஞன் என்று கூறும் நிலை கலங்காத ஞானியாகிய சத்யாக்கிரகியைப் பற்றிப் பேசினேன். அந்த லட்யத்தை ஏற்றுக் கொண்டால் நாம் யாரையும் நம்முடைய பகைவராகக் கருதமாட்டோம். பகைமையையும் துவேஷத்தையும் அறவே அகற்றி விடுவோம். அந்த லட்சியத்தை ஞானிகளும் முனிவர்களும் மட்டும் தான் அடைய முடியும் என்பதில்லை. எல்லோருமே அடையலாம். நான் என்னைத் தோட்டி என்று பெயரளவில் மட்டும் கூறிக் கொள்ள வில்லை. நான் தென் ஆப்பிரிக்கா விலுள்ள பீனிக்ஸ் ஆச்சிரமத்தில் இருந்தபோது தோட்டியின் வேலையைச் செய்யவும் செய்தேன். தாழ்ந்தவர்களிலும் தாழ்ந்தவர்களாயுள்ள தோட்டிகளுடன் உறவு கொண்டாட வேண்டு மென்று எழுந்த ஆவலின் காரணமாக அங்குதான் நான் வாளியையும் துடைப்பத்தையும் ஏந்தி தோட்டி வேலை செய்தேன். இலட்சியத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டோரில் ஒருவனாகிய அடியேன் உங்களுக்குக் கூறவிரும்புவது யாதெனில் யாரேனும், சாதாரணமாகவே அறிவுடைய கிராம வாசியுங்கூட இந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்று ஆவல் கொண்டு முயல்வாரே யானால் பிரார்த்தனைச் சமயத்தில் பாராயணம் செய்யப் பெறும் கீதா ஸ்லோகங்களில் சொல்லியுள்ள மனச் சாந்திநிலையை அடைய முடியும் என்பதே யாகும். சில சமயங்களில் நாம் நம்முடைய ஸ்திர புத்தியை இழந்து விடுகிறோம். அப்படி இழப்பது நமக்குத் தெரியாமலும் இருக்கலாம், தெரிந்தாலும் ஒத்துக் கொள்ள மனமில்லாமலும் இருக்கலாம். ஆனால் ஸ்திர புத்தி யுள்ளவர்கள் சிறு குழந்தைகளைக் கூடக் கோபிக்கவோ கடிந்து கொள்ளவோ மாட்டார்கள். இதைக் கூறும் மதமானது இகலோக வாழ்வில் அனுஷ்டிக்க

வேண்டிய தர்மமே யன்றி இப்போது சொல்வதைப்பற்றி லட்சியம் செய்யாமல் பரலோகத்தில் நலம் பெறுவதற்கான சாதனமன்று. பரலோக விமோசன சாதனம் மதம் ஆகாது.

நான் இந்தியதேசீய இராணுவ வீரர்களைப் போய்ப் பார்த்ததில் விசேஷமாக எதுவும் செய்துவிடவில்லை, என் கடமையை நிறைவேற்றினேன், அவ்வளவே. அவர்களைச் சந்திக்க முடிந்தது எனக்குப் பரம சந்தோஷமாக இருந்தது. அவர்களும் என்னைப் பேரன்புடன் வரவேற்றார்கள். அதை நான் என்றும் போற்றுவேன். அவர்கள் என்னைத் தேசத்தின் நலனுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து விட்ட ஊழியனாக மதிப்பதற்கு அறிகுறியாகவே அவர்களுடைய வரவேற்பைக் கருதுகின்றேன்.

நேத்தாஜியை நான் என்னுடைய மகனைப்போலவே கருதி வந்தேன். காலஞ் சென்ற தேசபந்து தாஸருக்கு உதவியாயிருந்து புகழ்பெற்று வந்த காலத்தில்தான் நான் அவரை அறிய நேர்ந்தது. அவர் கடைசியாக இந்திய தேசிய ராணுவத்திற்குச் செய்த உபதேசம் யாதெனில் அவர்கள் அன்னிய நாட்டிலிருக்கும்வரை ஆயுதம் கொண்டு போர் புரிந்தபோதிலும் இந்தியாவுக்குச் சென்றதும் காங்கிரஸ் தலைமையின் கீழ் அஹிம்சா வீரர்களாகவே தேசத்திற்கு ஊழியம் செய்ய வேண்டியவர்கள் ஆவார்கள் என்பதேயாகும். ஆதலால் நாம் இந்திய தேசிய ராணுவத்தாரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை யாதெனில் சச்சரவுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உபயோகித்துப் பார்த்து பயனற்றது என்று கண்டுக் கொண்டுவிட்ட ஆயுத முறையைத் துறந்து விட்டு அஹிம்சையையும் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் அபிவிர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இந்திய தேசீய ராணுவம் தன்னுடைய லட்சியத்தை அடையத் தவறிவிட்ட போதிலும் பெருமை பேசிக்கொள்ளத் தக்க அளவு மகத்தான காரியங்களைச் சாதிக்கவே செய்திருக்கிறது. அவற்றுள் தலை சிறந்தது இந்தியாவிலுள்ள சகல மதங்களையும் ஜாதிகளையும் சேர்ந்தவர்களை ஒரு கொடியின்கீழ் ஒன்று சேர்த்து அவர்களுக்கு ஜாதி அபிமானமோ ஊர் அபிமானமோ அணுவளவுமில்லாமல் ஒற்றுமையாகவும் யோக்கியமாகவும் வாழ்வதற்கான ஆவலை உண்டாக்கியதேயாகும். அந்த உதாரணத்தைப் பின்பற்றியே நாமும் நடக்கவேண்டும். அவர்கள் போர்க்களத்தில் மாற்றானைத் தோற்கடிக்க விரும்பும் ஆவேசத்தில் ஒன்றுபட்டது, பிரமாதமான காரியமன்று. அந்த ஒற்றுமையைச் சமாதான காலத்திலும் நிலைத்து நிற்கும்படி செய்வதே பெரிய காரியமாகும். அது கஷ்டமான காரியம்தான். ஆயினும் நாம் கடமையை நிறைவேற்றும் பொழுது உயிர்துறக்க நேர்ந்தாலும் பிறரைக் கொல்லாமல் உயிர்த்துறக்கச் சித்தமாயிருக்க வேண்டு மாதலால் கீதையில் கூறியுள்ள ஞானியின் குணங்களை நம்மிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆயுத பலத்தைவிட சத்தியாக்ரகத்தின் பலம் ஆயிரமடங்கு அதிகமாகும். இதை இந்திய ராணுவ வீரர்களிடம் சொல்வேன். அவர்கள் அதை உணர்வதாகவும் இனிமேல் காங்கிரஸ் கொடியின் கீழ் உண்மையான சத்யாக்ரக வீரர்களாக பாரதமாதாவுக்குப் பணி புரியப் போவதாகவும் சந்தோஷத்துடன் உறுதி கூறுகிறார்கள். அதைக் கேட்க எனக்கும் சந்தோஷமாகவே இருந்தது.

## உண்ணாவிரதத் தொத்துநோய்

"உண்ணாவிரதம் ஒரு தொத்து நோயாக ஆகிவருகிறது, அந்தக் குற்றத்துக்குத் தாங்களே பொறுப்பாளி" என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

அவர் கூறுவதாவது:- "உள்ளத்தையும் உடலையும் தூய்மை செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் உண்ணாவிரதம் பயனுடையது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போது சம்பள உயர்வுக்காகவும் வேறு பல காரியங்களுக்காகவும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். தாங்கள் தீண்டாமையை ஒழிப்பதற்காக உண்ணாவிரத மிருப்பவரை ஆதரிக்கிறீர்கள். ஆனால் அதே சமயத்தில் வேறு காரணத்துக்காக உண்ணாவிரத மிருப்பவரை உயிர் துறக்க விட்டுவிடத் தயாரா யிருக்கிறீர்கள், இது நியாயமா? உண்ணாவிரதம் எப்போது இருக்கலாம் எப்போது இருக்கக் கூடாது, எத்தனை நாட்கள் இருக்கலாம், தண்ணீர்மட்டுந்தான் சாப்பிட வேண்டுமா, பழச் சாறும் சாப்பிடலாமா என்ற விஷயங்கள் குறித்து நீங்கள் விதிகள் வகுக்க வேண்டாமா? நீங்கள் உண்ணாவிரத மிருக்கும்போது அந்தராத்மாவின் ஆணை என்று கூறுகிறீர்கள். நீங்கள் உண்ணாவிரதமிருப்பதை நிறுத்தாமல் பிறரை நிறுத்தச் சொல்வது நியாயமா?"

இந்த வாதம் அர்த்தமுள்ளதுதான். ஆயினும் விதிகள் வகுப்பது என்பது முடியாத காரியம். அனுபவம்தான் வழிகாட்ட முடியும். உண்ணாவிரத மிருப்பவரேதான் விதிகளை வகுத்துக் கொள்ள வேண்டும். என்னை அவர் ஒரு நிபுணராக மதித்தால் என்னிடம் யோசனை கேட்டுக் கொள்ளலாம். உண்ணாவிரதமானது சத்யாக்ரக ஆயுதசாலையிலுள்ள ஆயுதங்களில் தோல்வியறியாத ஒரு ஆயுதம் என்று நான் துணிந்து கூறிவருகிறேன். சத்யாக்ரகத்தின் சிருஷ்டி கர்த்தா என்ற நிலைமையில் அதை நானே அனேக சமயங்களில் உபயோகித்திருக்கிறேன். யாரேனும் உண்ணாவிரதத்தைச் சத்யாக்ரகம் சம்பந்தமாக மேற்கொள்வதானால் அதை மேற்கொள்ளுமுன் என்னுடைய அனுமதியை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளுதல் அவசியம். இந்த யோசனையை ஏற்று நடந்தால் நான் உயிர் வாழுமட்டுமேனும் விதிகள் வகுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

ஆயினும் அஸ்திவாரமான தத்துவம் ஒன்றைமட்டும் கூற விரும்புகிறேன். சத்யாக்ரகியானவர் பிற பரிகாரங்களை யெல்லாம் கையாண்டு பலன் பெருமல் போகும்போது மட்டும் இறுதிச் சாதனமாக உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வேண்டும். ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்வது என்பது உண்ணாவிரத விஷயத்தில் கிடையாது. ஆத்ம சக்தி யில்லாதவர் அதைப் பற்றிக் கனவு கூடக் காணக்கூடாது வெற்றியில் பற்றுடையவர் ஒருபோதும் அதைச் சிந்திக்கலாகாது. ஆனால் உள்ளத் துணிவுடன் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்துவிட்டால் பலன் கிடைக்குமோ கிடைக்காதோ உண்ணாவிரதத்தை நிறுத்தாமல் உறுதியாக நடந்து கொள்ளவேண்டும். இப்படிச் சொல்லுவதைக் கொண்டு, பலன் தராமலும் போகலாம் என்று எண்ணவேண்டாம். பலனை எண்ணி உண்ணாவிரத மிருப்பவர் பொதுவாக பலனை காணுமலே போகின்றனர். ஒரு சமயம் அவர் பலன் காண்பது போல் தோன்றினாலும் உண்மையான உண்ணாவிரதத்தால் உண்டாகும் உள்ளக் களிப்பை அடையாமல் போகிருர்.

பழச்சாறு சாப்பிடும் விஷயம் உண்ணாவிரத மிருப்பவருடைய உடல்பலத்தைப் பொறுத்ததாகும். பழச்சாறு சாப்பிடவேண்டி யிருந்தாலும் இன்றியமையாத அளவுக்கு அதிகமாகச் சாப்பிடலாகாது. தண்ணீரை மட்டும் சாப்பிடுபவர்க்கே அனேகமாக அதிகமான ஆத்ம சக்தி உண்டு.

சம்பள உயர்வு போன்ற சுயநல நோக்கத்தோடு உண்ணாவிரத மிருப்பது தவறு. சில குறிப்பிட்ட சமயங்களில் மட்டும் தம்முடைய இனத்தார்க்கு அதிகமான கூலி கிடைக்கவேண்டும் என்பதற்காக உண்ணாவிரத மிருக்கலாம்.

பரிகாரசம் செய்யக் கூடியதான உண்ணாவிரதங்களே பிளேக் நோய் போலப் பரவி தீமை செய்யும். ஆனால் உண்ணாவிரத மிருக்கவேண்டிய கடமை ஏற்படும்போது, இருந்துதான் ஆக வேண்டும். ஆதலால்தான் நான் அவசியம் என்று தோன்றும் பொழுதெல்லாம் உண்ணாவிரதத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் நிறுத்திவைக்காமல் மேற்கொண்டு வருகின்றேன். அப்படியிருக்க அதே போன்ற சந்தர்ப்பங்களில் பிறர் மேற்கொள்ளும் உண்ணாவிரதங்களை நான் தடுப்பது எப்படி? மிகச் சிறந்த காரியங்களையும் தவருக உபயோகித்து விடலாம் என்பது யாவரும் அறிந்ததே. இது தினந்தோறும் நிகழ்கின்ற விஷயமாகவே இருக்கின்றது.

# நிர்மாண வேலையும் அஹிம்சையும்

"கிறிஸ்தவ நண்பர்கள் வைத்திய உதவிச் சங்கம்" என்ற ஒரு சங்கம் இங்கிலாந்து நாட்டில் சென்ற யுத்த சமயம் 1914-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் நோக்கம் யுத்தகாலத்தில் உண்டாகும் கஷ்டங்களை நீக்கும் சேவையைச் செய்வதற்கு வேண்டிய வசதிகளை யுத்த எதிர்ப்புக் கொள்கையுடையவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும்.

அந்தச் சங்கத்தார் 1942-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு வந்து மிட்னப்பூரில் புயல்காற்றால் கஷ்டப்பட்ட மக்களுக்கும் பின்னால் 1943-ல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தால் கஷ்டப்பட்ட மக்களுக்கும் சேவை செய்தார்கள். அனாதைக் குழந்தைகளுக்கு ஆச்சிரமங்கள் அமைத்தார்கள். வைத்திய உதவி அளித்தார்கள். புயல்காற்றால் சேதமடைந்த பிரதேச மக்களுக்கு வேலை கொடுப்பதற்காகக் கைத்தொழில்களை ஏற்படுத்தினார்கள். மீன் பிடிப்போர்க்கும் விவசாயிகட்கும் நெசவாளர்கட்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபித்தார்கள். எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அது அவர்கள் இல்லாமலே நடக்கும்படியான நிலைமைக்கு வந்தால் தான் தங்கள் சேவை பயன் அடைந்ததாக எண்ணினார்கள்.

இப்பொழுது பஞ்சம் இந்தியா முழுவதும் ஏற்படும்போலிருப்பதால் அவர்கள் அது சம்பந்தமாக வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஹொரேஸ் அலக்ஸாண்டர் என்பவர் காந்தியடிகளிடம் வந்து,

"நாங்கள் சர்க்காரையும் ஜனங்களையும் இணைத்துவைப்பவர்களாக இருந்து வேலை செய்ய எண்ணுகிறோம். அரசாங்கம் எங்களிடம் சந்தேகம் கொள்ளவில்லை. நாங்களும் அவர்களுடைய கருத்துக்களைச் சந்தேகிப்பதில்லை என்று கூறியிருக்கிறோம். அத்துடன் ஜனங்கள் சர்க்காரைச் சந்தேகிக்கிறார்களேயன்றி எங்களைச் சந்தேகிக்காதிருக்கிறார்கள். ஆதலால் எங்கள் சேவை சரியானதாகத் தங்கட்குத் தோன்றினால், தாங்கள் எங்களைப் பற்றி ஒரு நல்ல வார்த்தை கூறினால், அது எங்களுக்கு உத்சாகமளிக்கும், இந்தியாவுக்குப் போதுமான உணவு அனுப்புமாறு செய்வதற்காக அமரிக்காவில் முயன்றுவரும் எங்கள் பிரதிநிதிகளுக்கு உதவியாகவு மிருக்கும்." என்று கூறினார்.

அதற்குக் காந்தியடிகள் :—

"ஆம், நீங்கள் சேவை செய்யலாம். ரூ ஆலி என்னும் நியூஜிலன்டு தேசத்தவரும் அவருடைய தோழர் ஜார்ஜ் ஹாக் என்பவரும் சைனாவில் "இன்டஸ்கோ" என்னும் ஒரு சங்கம் கண்டு சேவை செய்து வருகிறார்கள். அவர்கள் அன்னிய நாட்டாராக இருந்தபோதிலும் அவர்கள் சீனர்களிடையே தன்னம்பிக்கை உண்டாகும்படி செய்து விட்டார்கள். அதே மாதிரி

நீங்களும் இங்கே செய்யலாம். ஆனால், "அயல்நாட்டாரிடம் பிச்சை கேட்கும்" யோசனையை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். உணவு வரட்டும், நல்லதுதான். ஆனால் நாம் அதை நம்பி வாழ்தலாகாது. இந்த நாடே கீழ்நாட்டின் தான்யக் களஞ்சியம், அப்படியிருந்தும், இப்பொழுது உணவு வேண்டும் என்று அமரிக்கா முதலிய அயல்நாடுகளிடம் கையேந்தி நிற்கின்றது. இது எனக்குப் பிடிக்கவில்லை. எப்படியாயினும் பிறரை எதிர்பாராமல் காரியம் செய்துவந்தால் நமக்கு பலம் வரவே செய்யும். எங்கிருந்து வரும் என்று தெரியாது, ஆனால் வரும் என்பது மட்டும் நிச்சயம். அது ஆதிமூலத்தினின்றே வந்தாலும் வரும். அப்பொழுது ஜனங்கள் தாம் சாகவேண்டியதில்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள். மேலும், அயல்நாடுகளிலிருந்து உணவு வந்துவிட்டால் மட்டும் போதுமா? அதை எங்கே அவசியமோ அங்கே கிடைக்கும்படி செய்யவும் வேண்டும் அல்லவா? உண்மையிலேயே இப்பொழுது கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை உணவு வினியோகந்தான். அதைச் சரியான படி கவனியாவிட்டால் துறைமுகங்களில் உணவு கெட்டுப் போய்க்கொண்டிருக்கும். அதே சமயத்தில் கிராமங்களின் ஜனங்கள் செத்துப்போய்க்கொண்டிருப்பார்கள். தற்சமயம் எங்கு பார்த்தாலும் லஞ்சமயமாக இருப்பதால் இந்தப் பிரச்னையைச் சரியாக தீர்த்துவைப்பது முடியாத காரியம போலவே தோன்றுகிறது. துறைமுகங்களுக்கு வந்து சேரும் உணவு கிராமங்களுக்குப் போய்ச் சேர்வதற்கு இரண்டு மாதங்களாவது செல்லும் என்பதைக் குறித்து ஒரு சர்க்கார் உத்யோகஸ்தர் எழுதியிருக்கிறார். இந்த இரண்டு மாத காலத்தில் ஜனங்கள் என்ன செய்வது? அதனால்தான் நான் ஆழமாகக் கிணறுகளை வெட்டி ஆழத்திலுள்ள தண்ணீரை இறைத்துப் பயிர்செய்ய வேண்டும் என்று யோசனை கூறினேன். கோடிக் கணக்கான மக்கள் இந்த யோசனைப்படி நடந்தால் அயல்நாட்டிலிருந்து உணவு வந்து சேருமுன்னதாகவே தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய சக்தியுடையவர்களாக ஆகிவிடுவார்கள்."

அதன்பின் அலக்ஸாண்டர் தாங்கள் வங்காளத்திலுள்ள கிராமங்களின் வறுமையைப் போக்குவதற்காக நடத்திவரும் திட்டத்தைக் குறித்துக் கூறினார்.

**அலக்ஸாண்டர்:**—இந்த விஷயத்தைப் பண்டித நேருவிடம் கூறினோம். அவர் அதை இரண்டு காரணங்களுக்காக ஆதரிப்பதாகக் கூறினார். ஒன்று, தேசீய சர்க்கார் வந்தால் அநேகமான நன்மையுண்டாகும் என்று ஜனங்கள் நம்புவதால் அதற்கேற்ப பொருளாதார அபிவிர்த்தித் திட்டம் போட்டு வேலை செய்வதற்கு நாங்கள் ஒத்தாசையாக இருக்கலாம். இரண்டாவது ஜனங்களுக்குச் சேவை செய்யக்கூடிய மேனாட்டு மக்கள் இருந்துவந்தால், ஜனங்களுக்கு வெள்ளைக்காரர் மீது ஏற்பட்டுள்ள துவேஷம் சுதந்திரம் அடைந்த ஆனந்தத்தில் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்து விடாமல் தடுப்பதற்கு உபயோகமாக இருக்குமாம்."

காந்தியடிகள் :—ஆம் பண்டிதர் நேரு கூறுவது முழுவதையும் நான் ஒப்புக்கொள்கின்றேன். அத்தகைய சேவை செய்பவர்கள் எடைக்கிடை தங்கம் கொடுத்துப் பெறக் கூடியவர்கள் ஆவார்கள். ஆயினும் எனக்கும் பண்டிதர்க்கு ஏற்பட்ட சந்தேகம் ஏற்படவே செய்கின்றது. அவர் வரப்போகும் அபாயத்தைச் சுட்டிக் காட்டியது நல்லதே. அந்த அபாயம் அவர் கூறியதிலும் அதிக ஆழமாக வேரூன்றியிருப்பதாகவே எண்ணுகின்றேன். அதை நினைக்கும்பொழுதே பயங்கரமாக இருக்கின்றது. ஐரோப்பியர்க்கு விரோதமான உணர்ச்சி கீழ் நாடுகள் எல்லாவற்றிலுமே பொங்கி எழுந்துகொண்டிருக்கின்றது. பொது ஜனங்களுடைய மனத்தைப் பாதித்துக்கொண்டிருக்கும் விஷயங்கள் ஒன்றிரண்டல்ல, பலவாகும். அந்தப் புயல் காற்று தோன்றுமானால் உங்கள் சங்கத்தார் கஷ்டப்படவேண்டியிருக்கும். நீங்கள் அந்தத் தியாகத்துக்கு தயாராக இருக்கவேண்டும். அப்படி அபாயத்துக்குத் தயாராக இருந்தபோதிலும் இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடியும் என்று நான் நம்புவதுபோலவே நீங்களும் நம்பலாம். அபாயத்தை முன்கூட்டி அறிந்துகொள்வதும் அது வரும் சமயம் ஆண்டவன் அருளை நம்பி அசையாதிருப்பதுமே உண்மையான அறிவுடைமையாகும்.

## மெஷின்கள்

கேள்வி :—குஜராத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்களில் மாவு திரிக்கும் மெஷின்களை எஞ்சின்களைக் கொண்டு ஓட்டுகிறார்கள். அந்த எஞ்சின்களை நிலங்களுக்கு நீர்பாய்ச்ச நதிகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் கிணறுகளிலிருந்தும் நீர் இறைப்பதற்கு வெகு எளிதாக உபயோகிக்கலாம். இப்படி எஞ்சின்களை மாவு திரிக்க உபயோகிப்பதோடு நீர் இறைக்கும் இந்த உபயோகமான வேலையைச் செய்வதற்கும் உபயோகிக்குமாறு சர்க்காரையும் ஜனங்களையும் கேட்டுக் கொள்ளக் கூடாதா ?

பதில் :—ஆயிரக்கணக்கான கிராமங்களில் மாவு திரிப்பதற்கு எஞ்சின்களை உபயோகிப்பது நாம் தாழ்ந்த நிலைமையின் ஆழத்தை எட்டிவிட்டோம் என்பதைக் காட்டுகின்றது. நிருபர் கூறுவது தவறாக இருக்கவேணுமே; இந்தியா முழுவதிலும் ஆயிரக்கணக்கான எஞ்சின்கள் ஓடாமலிருக்க வேணுமே என்று என் மனம் ஆசைப்படுகிறது. அவர் கூறுவது உண்மையாயிருக்குமானால், அது நம்முடைய ஜனங்களைச் சோம்பலானது எவ்வளவு தூரம் ஆட்கொண்டுவிட்டது என்பதன் அறிகுறியேயாகும். அத்தகைய மெஷின்களையும் எஞ்சின்களையும் அவ்வளவு அதிகமாகக் கிராமங்களில் கொண்டுபோய்க் குவிப்பது பேராசையின் சின்னமுமாகும். இந்த மாதிரி ஏழைகளைக் கெடுத்துப் பணம் சம்பாதிப்பது சரியாகுமா? அத்தகைய மெஷின்களில் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான கைத்திரிகைகளை வேலை செய்யாமல் ஆக்கி திரிகைகளை உபயோகிக்கும் பெண்களையும் திரிகை

களை உண்டாக்கும் கல் தச்சர்களையும், ஆயிரக்கணக்கில் வேலையில்லாமல் திண்டாடும்படி செய்து விடுகின்றது. அத்துடன் இது தொத்துநோய்போல் கிராமத்தில் நடக்கும் சகல கைத்தொழில்களையும் பீடித்துக் கொள்கின்றது. கைத்தொழில்கள் அழிந்து போகும். கலையும் அழிந்து போகும். பழைய கலை போய்ப் புதுக்கலை வருவதானால் அவ்வளவாக நாம் மெஷின்களை எதிர்க்கவேண்டி வராது. ஆனால் அந்த மாதிரி எதுவும் நடக்கக் காணோம். எஞ்சினால் ஓடும் மெஷின்கள் உள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களிலும் இதற்குமுன் அதிகாலையில் கையால் திரிக்கும்போது உண்டாகும் இனிய இசை இப்போது உண்டாகக் காணோம்.

இப்படி நாம் எஞ்சின்களை இப்போது தவறாக உபயோகிக்கப் படுவதாக எண்ணிய போதிலும், மாவு திரிக்க உபயோகப்படுவது போலவே நீர் இறைக்கவும் உபயோகப்படுமானால் ஒருவாறு திருப்திபடுவேன். இதற்குச் சர்க்கார் உதவி தேவை என்று எண்ணுகிறார் கிருபர். அப்படி அது அவசியம் தேவைதானா? எஞ்சின்கள் வைத்திருப்பவர்கள் தாங்களாகவே அவைகளை இந்த அவசியமானதும் உபயோகமானதுமான காரியத்துக்குப் பயன்படுத்தக் கூடாதா? எதையும் சர்க்கார் நிர்ப்பந்தமில்லாமல் செய்ய மாட்டோம் என்ற இழி நிலைக்கு வந்துவிட்டோமா? அது எதுவாயிருப்பினும், நான் உறுதியாக எண்ணுவது யாதெனில், ஜனங்களை நோக்கி நிற்கும் பயங்கரமான நிலைமையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக எத்தகை சக்திகள் நம்மிடம் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் உபயோகிக்க வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்ய வேண்டும் என்பதேயாகும்.

## கதர் எதற்கு?

### உடுத்தவா? விற்கவா?

இந்தக் கேள்வி எழுந்ததற்கு நாம் தானே பொறுப்பாளி. நாம் கதரின் தத்துவத்தை நன்றாக அறிந்து கொள்ளாததுதான் காரணம். இப்போதுங்கூட அதை நன்றாக அறிந்துவிட்டதாகக் கூறமுடியாது. அதனால்தான் குழந்தைகள் எப்படி விழுந்து விழுந்து நடக்கக் கற்றுக் கொள்ளுகின்றார்களோ அப்படியே நாமும் திரும்பத் திரும்பத் தவறு செய்துதான் கதர் விஷயத்தை அறிந்து வருகிறோம். குழந்தைகள் விழாமலிருப்பதற்காகக் கைபிடி வண்டியை உபயோகிப்பதுபோலவே நாமும் உபயோகித்து வருகிறோம். இந்த விஷயத்தை உணர்ந்துதான் அகில பாரத சர்க்கா சங்கமானது தான் இருக்கவேண்டிய அவசியத்தை நிரூபிக்கவும் அது முடியாமற் போனால் இறந்து போகவும் பெருமுயற்சி செய்து வருகின்றது. அகில பாரத சர்க்கா சங்கம் என்பதில் நூல் நூற்பவர் உள்பட சகல கதர் ஊழியர்களும் அடங்குவார்கள். நூல் நூற்பவர்கள் பிறரைச் சாராமல் வாழும்படி செய்வதும் அவர்களுடைய வேலையின் மூலம் இந்தியாவிற்குச் சுதந்திரத்தை

அடைவதுமே சர்க்கா சங்கத்தின் நோக்கம். இன்னும் அந்த நோக்கம் நிறைவேறவில்லையே என்று அனாவசியமாகக் கவலை கொள்ளவேண்டியதில்லை. அது தான் சரியான லட்சியம் என்பதை அறிந்து கொண்டு அதை அடைய முயலும்பொழுது இடையில் ஏற்படும் தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னேறி வந்தால் போதுமானது. அதுதான் விஞ்ஞான முறையின் சாரமாகும். எந்த விஞ்ஞானமும் எவ்விதக் குறையுமின்றிப் பரிபூரணமான நிலைமையில் வானிலிருந்து வந்துவிடவில்லை. சகல விஞ்ஞானங்களும் அனுபவத்தின் மூலமாகவே அபிவிருத்தி அடைந்து வருகின்றன. பரிபூரணம் என்னும் லட்சணம் விஞ்ஞானத்துக்குக் கிடையாது. பரிபூரணம் என்பது மனிதனுக்கும் சாத்தியமில்லை, மனிதன் சிருஷ்டிக்கும் விஞ்ஞானத்துக்கும் சாத்தியமில்லை. உதாரணமாக, வான சாஸ்திரம் இடைவிடாமல் வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறது. பலதவறுகள் உண்டாயின. அவைகள் திருத்தப்பட்டு வளர்ந்து வருகிறது. அந்த மாதிரியில் தான் கதர் விஞ்ஞானமும் வளர்ந்து வருவதாகக் கூறலாம்.

இந்த உண்மையைத் தெளிவாக அறிந்துகொண்டு அச்சமில்லாமல் அனுஷ்டித்து வந்தால் கதர் சம்பந்தமாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் வெகு எளிதாக பதில் கூறிவிடலாம். நூல் நூற்பவர்கள் பருத்தியைச் சுத்தம் செய்தல் முதல் நெசவு செய்தல் வரையுள்ள முறைகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதில் தான் சுயராஜ்யம் அடைவதற்கான மார்க்கம் அடங்கியிருக்கிறது. இதுவரை நாம் தெரிந்தோ தெரியாமலோ விற்பனைக்காக மட்டுமே கதரை உற்பத்தி செய்து வந்தோம். ஆயினும் அது சுயராஜ்ய லட்சியத்துடன் இணைந்தே இருந்து வந்தது. அப்படியில்லாவிட்டால் வியாபாரத்துக்காகக் கதரை உற்பத்தி செய்வதும் இடையில் நின்று போயிருக்கவே செய்யும். கதர் மூலம் சுயராஜ்யம் அடைவது என்ற லட்சியம் வெறும் கனவாகவே போயிருக்கும்.

வியாபாரத்துக்காகக் கதர் உற்பத்தி செய்வதுதான் நம்முடைய கைப்பிடி வண்டியாக இருந்தது. இப்பொழுதும் அப்படியே தான் இருந்து வருகிறது. நூல் நூற்பவர்கள் பஞ்சை வெட்டித் திரிபோட்டுக் கொடுப்பதற்குப் பிறரையே எதிர்பார்த்து வருகிறார்கள். ஆனால் இப்படிப் பிறரை எதிர்பார்ப்பதைப் படிப்படியாக நிறுத்தி வந்தால் தான் கதர் மூலம் சுயராஜ்யம் என்ற லட்சியத்தை அடைய முடியும். ஆதலால் விற்பனைக் காகக் கதர் உற்பத்தி செய்வதையும் பஞ்சை வெட்டும் தொழில் மட்டும் தனியாக நடப்பதையும் நிறுத்திவிட வேண்டும். ஆனால் அதை நினைத்த மாத்திரத்தில் நிறுத்திவிட முடியாது. ஆதலால் எவ்வளவு சீக்கிரமாக நிறுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நிறுத்த வேண்டியதாகும். இது விஷயத்தில் போதிய ஞானமும் நம்பிக்கையும் உடையவர்களே முதன் முதலாக இப்படிச் செய்வார்கள். உண்மையான ஆவலுடன் முயற்சி செய்யப்பட்டால் போட்டி என்ற பிரச்னை எழமாட்டாது.

இப்பொழுதுள்ள நிலைமையில் ஒரு அம்சத்தைக் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஜீவனத்துக்காக நூற்பவர்கள் அதிகமாகச் சம்பாதிக்க முடியும் என்ற காரணத்தால் இந்தப் புது முறைகளை எல்லாம் சந்தோஷமாகக் கற்றுக் கொள்வார்கள். ஆனால் எளிதாகச் சம்பாதிக்கக் கூடிய இதர வழிகள் ஏற்பட்டு வருவதால் இப்பொழுது நூல் நூற்பவர்களுடைய தொகை குறைந்து வருகிறது. அவர்கள் இது சரியா தப்பா என்று யோசித்துச் செய்பவர்கள் அல்லர். அவர்கள் எது எளிதோ அதையே தான் செய்வார்கள். உதாரணமாக, பீடி செய்வதற்குரிய இலைகளைச் சேகரிப்பது எளிதாயிருப்பதால் அதை மேற்கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்களுக்கு உண்மையான அறிவைப் புகட்டுவதும் சுயராஜ்ய சிகரத்துக்குச் செல்லும் செங்குத்தான பாதையில் ஏறிச் செல்வதற்கு அவர்களுக்கு துணை செய்வதும் ஏறிச் செல்வதன்மூலம் அவர்களுக்கு ஆரோக்கியமும் ஆற்றலும் பெருகும்படி செய்வதும் நமது கடன். இதைச் செய்ய முடியாமற் போகுமானால் நம்முடைய சங்கத்தைக் கலைத்து விடுவதே நியாயமாகும். ஆதலால் மேற்கூறிய விஷயத்தை அறிந்து நூற்கும் ஆண் பெண்களைக் கொண்டுதான் நாம் சங்கத்தை நடத்தவேண்டும்.

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய மற்றொரு விஷயம் யாதெனில் நூல் நூற்றல் என்பது ஜனங்கள் செய்யக்கூடிய தொழில்களில் ஒன்று என்று ஆகிவிட்டபடியால் அது இடையில் நின்று போகாது நடந்துவரும் என்பதேயாகும். ஆதலால் விற்பனைக்காகக் கதர் உற்பத்தியாகாமல் நின்றுவிடுமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. நான் சொன்ன விஷயத்தில் எந்தவிதமானக் கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் வேலை செய்வது ஊழியர்களின் கடமையாகும். இதைச் செய்யலாமா இதைச் செய்யக் கூடாதா என்று சதா பிறரைக் கேட்டுக் கொண்டிருப்பது அறியாமையையும் சோம்பலையுமே காட்டும். மூல விதியிலிருந்து உபவிதிகளைத் தாமாக அறிந்துகொள்ள முடியாதவர்களை க்ஷேத்திர கணிதம் அறிந்தவர்களாகக் கூறமுடியாது. இதே உண்மை தான் சகல விஞ்ஞானங்களுக்கும் பொருந்துவதாகும்.

## கதர்ப் பட்டு

**ப**ருத்தி நூலால் செய்யப்படும் கதரை வாங்குவதற்கு நூல் கொடுக்க வேண்டுமானால் பட்டு நூலால் செய்யப்படும் கதரை வாங்குவதற்கும் நூல் கொடுக்க வேண்டாமோ?

இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில்தான் உண்டு. பட்டுநூல்க் கதரும் கதர்தான். அதனால் அதை வாங்கவும் நூல் கொடுக்க வேண்டியதுதான்.

## ஏன் நூலுக்குமட்டும்?

ஏன் நூலுக்குமட்டும் இந்த முதன்மை? நூல் நூற்றல் நிர்மாணத் திட்டத்தில் மற்ற அம்சங்களைப் போல் ஒரு அம்சம் தானே? மற்ற அம்சங்களை நிறைவேற்றிவைக்கும் ஊழியர்கள் கதர் வாங்க நூல் கொடுக்க வேண்டாம் என்று ஏற்படுத்தினால் என்ன என்று கேட்கிறார்கள்.

நன்றாய்ச் சிந்தித்துப் பார்க்காததினாலேயே இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். கதர் வாங்கும்போது விலையில் ஒரு பகுதியை நூலாகக் கொடுக்கும்படி செய்திருப்பதற்குக் காரணம் அதற்கு அதற்குரிய உயர்ந்த ஸ்தானத்தை அளிப்பதற்காகவும் காலக் கிரமத்தில் நாணயத்துக்குப் பதிலாக நூலையே செலாவணியாகச் செய்வதற்காகவுமே யாகும். நூல் நூற்றல் நிர்மாணத் திட்டத்தில் ஒரு அம்சமா யிருப்பதற்கும் இந்தப் பிரச்னைக்கும் சம்பந்தம் கிடையாது. சூரியனைச் சுற்றி கிரகங்கள் சுற்றி வருவதுபோல கை ராட்டினத்தைச் சுற்றியே நிர்மாணத் திட்டத்தின் பிற அம்சங்கள் எல்லாம் நடைபெறுகின்றன என்ற விஷயத்தைக்கூட இப்பொழுது கவனிக்க வேண்டாம். சுயராஜ்யம் கை ராட்டின நூலாலேயே கிடைக்கும் என்பதை மட்டும் நம்புவோமானால் நூலின் மதிப்பானது தங்கம் வெள்ளி நாணயங்களின் மதிப்பைவிடப் பன்மடங்கு அதிகமாகும் என்பதைக் கண்டுகொள்ளலாம். நிர்மாணத் திட்டத்தில் எந்த அம்சத்தை நிறைவேற்றுகிறவரா யிருந்தாலும் அவரும் கட்டாயமாக நூல் நூற்க வேண்டியவரே. யக்ஞம் செய்யவேண்டிய கடமையிலிருந்து யாருக்கேனும் விலக்கு ஏற்படுத்த இயலுமோ? நூல் நூற்றல் என்பது எல்லோரும் செய்து தீரவேண்டிய இன்றியமையாத யக்ஞம் ஆகும்.

## உண்மைதானா?

**கேள்வி.**—சென்ற வாரம் நடந்த பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றின் இறுதியில், தாங்கள் மற்றத் துணிகளை எல்லாம் ஒதுக்கி விட்டுக் கதரையே அணியுமாறு வற்புறுத்தினீர்கள். கதரைத் தொடுவதுகூட எனக்கு ஆனந்தமா யிருக்கிறது, அது என்னுடைய இதயத்தை ஏழைச் சகோதர சகோதரிகளுடன் பிணைத்து விடுகிறது. அதைச் சுகாதாரம், அழகு, அன்பு, ஒழுக்கம், ஆன்ம ஐக்கியம் போன்ற பல காரணங்களைக் கொண்டும் போற்றுகின்றேன். ஆனால் கைராட்டினத்தின் இசை மனத்திற்குச் சாந்தி யளிப்பதாக யிருந்தபோதிலும் அ[illegible]னும் நான் உபயோகிக்க ஆரம்பிக்க முடியாதவனாயிரு[illegible]றன். நம்முடைய கல்வி முறையின் பயனாக என்னுடைய கைகள் இந்த வயதில் நூல் நூற்கக் கற்றுக்கொள்ளத் தகுதியும் திறமையு மற்றதாக இருக்கின்றன. ஆதலால் நூல் கொடுத்துக் கதர்வாங்க முடியவில்லை. மில் துணி வாங்குவதற்கு மனமுமில்லை.

பதில் :—ஒழுக்கம் ஆன்மநிலை போன்ற உயர்ந்த அம்சங்களுக்காகவும் கதரைப் போற்றுவதாயிருந்தால் இந்த வயதிலும் நூல் நூற்கக் கற்றுக்கொள்வது எள்ளளவும் சிரமமான காரியமாகாது பண்டித மோதிலால் நேரு ஐம்பது வயதுக்குக் பிறகே தால் நூற்கக் கற்றுக்கொண்டார். அலி சகோதரர்கள் ஒழுங்காகச் செய்யாவிட்டாலும் நூல் நூற்கவே செய்தார்கள். இந்த மூவரும் தேசிய நன்மையை உத்தேசித்தே செய்து வந்தார்கள். அநேக ஊழியர்கள் வயதான பிறகேதான் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதலால் இந்த நண்பரும் கால தாமதமின்றிக் கற்றுக்கொள்ள வேண்டியதே. அவருடைய விரல்களில் யாதொரு குறையுமில்லை எழுதக்கூடியவர்கள் நூற்கவும் முடியும். சுயராஜ்யத்துக்காக நூல் நூற்பது என்பது எந்தக் காலத்திலும் எழுவதை விட ஏற்றமானதேயாகும்.

இந்த நண்பரைப் போன்றவர்கள், தாம் நூற்ற நூலைக் கொடுத்துக் கதர் வாங்குவதுதான் நியாயமாகும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆயினும் எந்தக் காரணத்தாலேனும் அது சாத்தியப் படாவிட்டால், தமக்கு வேண்டிய நூலைத் தம்முடைய உற்றார் உறவினரிடமிருந்து பெற்றுக் கொள்ளுவதில் தவறு எதுவும் கிடையாது.

ஏழைகள் நியாயமான வழியில் ஜீவனம் தேடிக் கொள்ளுவதற்கு கதர் மிகவும் நல்ல சாதனம். ஆனால் அத்துடன் அது அஹிம்சா முறையில் சுயராஜ்யம் தேடுவதற்கான சாதனமாகவும் அமைந்திருக்கிறது. இந்த நண்பரைப் போன்றவர்கள் இத்தகைய உயர்ந்த கருத்துக்களை அழகாக எழுதுவதோடு நிற்காமல் அவற்றின் தாத்பரியங்களையும் நன்றாக உணர்ந்து நடக்கவேண்டியது அவசியமாகும்.

## இந்த அலட்சியம் ஏன்?

கேள்வி:—நீங்கள் நெல்லூரில் ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அளிப்பதுபற்றிக் கூறியதை அறிந்து மகிழ்கின்றேன். அது காங்கிரஸ்காரர் பலருடைய கண்களைத் திறந்துவிடும் என்று நம்புகிறேன். ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டால் தேர்தலில் காங்கிரஸுக்கு வெற்றி கிடையாமற் போகலாம் என்பதையே ஆலயத்தைத் திறவாமலிருப்பதற்கு காரணமாகக் கூறுகிறார்கள்.

பதில் :—இதுவே எல்லோருடைய அபிப்பிராயமாக இருக்குமானால் அது காங்கிரஸுக்கு நல்லதாகத் தோன்றவில்லை. காங்கிரஸைப் போல் அகில இந்தியாவிலும் பரவி நின்று, பொது ஜனங்களுடைய ஆதரவைப்பெற்று நடைபெறும் ஜனநாயக ஸ்தாபனம் எதுவும் தீண்டாமையை வேரோடு பிடுங்கி எறிவது என்னும்

தன்னுடைய கொள்கைக்கு விரோதமாக நடக்க முடியாது. நான் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பிய 1915ம் வருஷம் முதல் காங்கிரஸிடம் நெருங்கிய தொடர்புடையவனாக இருந்து வருகிறேன். அந்தக் கால முழுவதிலும் நான் கண்டது யாதெனில் எவ்வளவுக் கெவ்வளவு காங்கிரஸ் தன்னுடைய கொள்கையில் வைராக்கியமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அது பொது ஜன ஆதரவைப் பெற்று வருகின்றது என்பதேயாகும். ஜன நாயக ஸ்தாபனமாயிருப்பது எத்தகையக் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் நியாயப்படி நடக்கும்படியான துணிவு உடையதாகவே இருத்தல் வேண்டும். ஜனங்கள் தவறு செய்தால் தட்டிச் சொல்லாமல் தாட்சண்யம் காட்டிச் சந்தோஷப் படுத்துபவர் தம்மையும் ஜனங்களையும் தாழ்ந்த நிலைமையை அடையும்படி செய்வதோடு கட்டுப்பாடுள்ள ஜனநாயக ஆட்சியை உண்டாக்காமல் கட்டுப்பாடில்லாத கும்பல் ஆட்சியையே உண்டாக்குவார்கள். இரண்டு ஆட்சிகளுக்குமுள்ள வித்தியாசம் கண்ணுக்குச் சிறியதாயினும் உண்மையில் பெரியதும் அகற்ற முடியாத அளவு உரமுடையது மாகும். ஜன ஆட்சி முன்னேற்றம் தரும், கும்பல் ஆட்சி குழப்பமே உண்டாக்கும். கடைசியாக ஆராய்ந்து பார்க்கும்போது நம்முடைய வீழ்ச்சிக்குக் காரணம் அகத்தில் காணவேண்டுமேயன்றி புறத்திலன்று என்பது தெரியவரும். நம்முடைய சமுதாயம்மட்டும் தர்ம நீதிப்படியே நடந்து வந்திருந்தால் உலகிலுள்ள சகல சாம்ராஜ்யங்களும் வந்திருந்தாலும் நம்மை ஜெயித்திருக்க முடியாது. இது வெறும் அர்த்தமற்ற கூற்றன்று. அடிப்படையான உண்மைகளை மட்டும் அறிந்துகொண்டு விட்டால் நாம் அகத்திலிருந்தோ புறத்திலிருந்தோ எவ்வித துன்பங்கள் வந்தாலும் அவைகளைப் பொறுமையுடன் சமாளித்துக் கொள்ளக்கூடிய சக்தியுடையவர்களாக ஆகிவிடுவோம். தேர்தலில் தோற்றாலும் பாதகமில்லை, கொள்கையைத் தியாகம் செய்துவிட மாட்டேன் என்ற மனவுறுதியுடன் நடப்பதே தேர்தல்களில் எல்லாம் வெற்றியடைவதற்குரிய மார்க்கமாகும். காங்கிரஸ் மகா சபை 1920-ம் வருஷத்தில் ஏற்றுக்கொண்ட கொள்கையின் அடிப்படைத் தத்துவங்களுக்கு முரணின்றி நடக்குமளவே வெற்றிக்கு வெற்றியாக ஜெயம் பெற்று வந்திருப்பதை அது இதுவரை அடைந்துள்ள வெற்றிகளே கூறுகின்றன. இந்தியாவானது உலகில் பெரிய ஜன சமூகமாக வாழ்ந்து சீரும் சிறப்பும் அடைய வேண்டுமானால் தீண்டாமை என்பது அறவே போய்விட வேண்டியதே.

## ஹரிஜனச் சேரிவாசம்

**கா**ந்தியடிகள் பம்பாயிலும் டில்லியிலும் ஹரிஜனச் சேரியிலேயே தங்குவதாகத் தீர்மானித்தார்.

இந்தத் தீர்மானத்தைத் தக்கர் பாபாவுக்குக் கீழ்கண்டவாறு தெரிவித்தார் :—

"கண்விழிக்கும் பொழுதுதான் காலை நேரம் ஆரம்பமாவதாகச் சொல்லுவார்கள். என்னுடைய கண்கள் இப்பொழுதுதான் விழித்துக்கொண்டிருக்கின்றன. இனிமேல என்னுல் சும்மாயிருக்க முடியாது. வட்டமேஜை மகாநாட்டுக்காக லண்டனுக்குச் சென்றிருந்தபொழுது நான் அந்த நகரத்தின் கீழ்பாகத்திலேயே தங்கியிருந்தேன் என்பதை அறிவீர்கள். அந்த பாகத்தை அந்த நகரத்திலுள்ள ஹரிஜனச் சேரியாகக் கூறலாமல்லவா? நான் தங்கியிருந்த அறையில் இரண்டுபேர் தங்க இடம் கிடையாது. அதில் மேஜையும் நாற்காலியும் கிடையாது. உடை வைத்துக்கொள்வதற்கான பீரோல் ஒன்றுதான் இருந்தது. படுப்பதற்குக் கட்டில் கிடையாது. தளத்தில்தான் படுத்துக்கொள்ள வேண்டும். அந்த இடத்தைச் சுற்றி ஏழை-மக்களின் குடில்கள். அப்படியிருந்தும் நான் தங்கியிருந்த கிங்ஸ்லிஹால் என்னும் இடம் வெகு சுத்தமாகவே காணப்பட்டது."

அதற்குக் காந்தியடிகளைப் போலவே ஹரிஜனாக இருக்கும் தக்கர்பாபா அதுதான் சரி, அப்படியே நானும் ஹரிஜனச் சேரியில் தான் இனிமேல் தங்குவேன் என்று பதில் எழுதினுர்.

ஆனுல் சர்தார் படேல் :—"தங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். ஆனுல் பம்பாயில் இப்பொழுது பிணங்களைப் புதைக்கக்கூட இடமில்லாதிருக்கும்போது உயிரோடிருப்பவர்களுக்குப் புதிதாக இடம் அமைக்கும்படி சொல்லுகிறீர்களே—" என்று எழுதினுர்.

தேவதாஸ் காந்தி :—"இந்தச் சமயம் நீங்கள் பம்பாய்க்கும் டில்லிக்கும் வருவது ஒரு விசேஷமான காரியத்துக்காக இருப்பதால் எப்பொழுதும்போல் பிர்லா மாளிகையில் தங்கிஞல் நல்லதல்லவா?" என்று டில்லியிலிருந்து எழுதினுர்.

ஆனுல் காந்தியடிகளோ "அது முடியாது. நான் வரும் காரியங்கூட என்னுடைய ஹரிஜனச் சேரி வாசத்தால் அதிகமான நன்மையே பெறும். நாம் பிரிட்டிஷாருக்கு அடிமை ஆகி இருநூறு வருஷங்கள்தான் ஆகின்றன. அப்படியிருந்தும் சுதந்திரத்துக்குத் துடியாகத் துடிக்கின்ருேம். இந்த நிமிஷமே அடிமைத்தனம் இல்லாமற் போய்விட வேண்டும் என்று ஆத்திரப்படுகின்ருேம். அப்படியிருக்கச் சுயராஜ்யம் வாசற்படியில் வந்து நிற்கும் இந்தச் சமயத்திலுங்கூட நாம் ஹரிஜனங்களை அவர்களுடைய விமோசனத்துக்காகக் காத்திருக்கும்படி சொல்வது எப்படி? ஹரிஜனங்களுடைய விமோசனம் இனிமேலுங் காத்

திருக்க முடியாது. இன்று ஏற்பட வேண்டும், இல்லையெனில் என்றும் ஏற்படப்போவதில்லை. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும் அவர்கள் அடிமைகளாகவே இருப்பார்களானால் நான் அவர்களுடனேயே சேர்ந்திருப்பேன்'' என்று கூறினார்.

## ஹரிஜனங்களுடன் உண்ணல்

**கேள்வி:**—எப்படி மாமிசம் உண்ணாத ஜாதிஹிந்து ஒருவர் மாமிசம் உண்ணும் ஹரிஜனர் ஒருவருடைய வீட்டில் அவருடன் உட்கார்ந்து உண்ண முடியும்?

**பதில்:**—மாமிசம் உண்ணாத ஜாதிஹிந்து மாமிசம் உண்ணும் ஹரிஜனருடைய வீட்டில் அவருடன் உட்கார்ந்து சைவ உணவை உண்ணலாம். ''உடன் உண்ணல்'' என்பதற்குப் பரிமாறுவதை எல்லாம் உண்ண வேண்டும் என்ற பொருள் கிடையாது. உணவு உண்ணும் கலங்களும் சமைத்தவர்களும் சுத்தமாயிருந்தால் போதுமானது. அதுபோலவே தண்ணீரும் சுத்தமாயிருத்தல் அவசியம். ஒரே கலத்திலிருந்து உண்ணவேண்டியது மில்லை, ஒரே பாத்திரத்திலிருந்து பருகவேண்டியது மில்லை. சுகாதார விதிகளை மீறவே கூடாது.

## ஹரிஜனச் சேரி வாசம்

காந்தியடிகள் டில்லிக்குச் சென்றபொழுது ஹரிஜனச் சேரியிலேயே தங்கி யிருந்தார். அவர் அங்கு போய்ச் சேர்ந்த தினத்தன்று நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:—

'' ஹிந்துக்கள் பெயரளவில் மாத்திர மில்லாமல் மனம்மொழி மெய் மூன்றிலும் ஹரிஜனங்கள் ஆகிவிட வேண்டும் என்று சில காலமாகச் சொல்லி வருகின்றேன். அப்படி ஆவதற்குத் தோட்டி வேலை செய்தால் மட்டும் போதாது. அதனால்தான் நான் ஹரிஜனச் சேரியில் ஹரிஜனங்களுடனேயே தங்கி யிருப்பது என்று தீர்மானித்திருக்கிறேன்.

இங்கே தங்கிவிட்டதாலேயே இவர்களைப் போல வாழ ஆரம்பித்து விட்டதாகக் கூற முடியாது என்பதை அறிவேன். நான் பல ஊர்களில் ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறேன். அவர்கள் அழுக்கும் அசுத்தமும் அசங்கியமும் நிறைந்துள்ள இடத்திலேயே வசித்து வருகிறார்கள். இப்பொழுது நான் வருவதை முன்னிட்டு இந்த இடத்தை அழகாகச் செய்திருக்கிறார்கள் என்பதை அறிவேன். இங்கே எனக்கும் என்னுடைய பரிவாரத்தார்க்கும் சேத் பிர்லா செய்திருக்கும் வசதிகளைக் காண எனக்கு வெட்கமா யிருக்கிறது. நான் ஹரிஜன் ஆவதற்கு, இங்கு வந்திருப்பது முதற்படியே யன்றி இறுதிப்படி யன்று. என்று

நான் ஹரிஜன் குடிசையில் போய் தங்கவும் அவர்கள் தரும் உணவை உண்ணவும் செய்கிறேனே அன்றுதான் எனக்கு நன்னுள். அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டும் அதற்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்து கொண்டுமிருக்கிறேன். அதுவரை ஹரிஜனங்களுடைய குடிசைகளுக்கு மத்தியில் இந்த தர்மசாலையில் தங்கக் கிடைத்ததற்காகச் சந்தோஷமடைகின்றேன்.''

அதன்பின் காந்தியடிகள் வந்த சமயத்தில் ஹரிஜனங்களில் சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்ததுபற்றி அவர் கூறியது :-

''நான் எப்படி அவர்களிடம் கோபங்கொள்ள முடியும்? சவர்ணர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் நடத்தி வந்த விதத்தால் அவர்கட்கு ஏற்பட்ட கோபத்தை அவர்களால் எப்படி அடக்கி வைத்துக்கொள்ள இயலும்? அவர்கள் பழிக்குப்பழி வாங்கக்கூட விரும்பலாம். அவ்வளவு தூரம் நாம் செய்வது சொல்வதற்கு மாருக இருந்து வருகிறது. ஆத்திரப்படுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. கொஞ்சம் பொறுத்திருங்கள் என்று நான் வேண்டிக்கொள்ள மட்டுமே செய்வேன். ஆயிரக் கணக்கான வருஷகாலம் நடைபெற்று வந்த கெட்ட வழக்கத்தை ஒரே நாளில் ஒழித்துவிட முடியாது. அது ஒழியா விட்டால் ஹிந்து மதம் ஒழிந்து போய்விடும் என்பதை அறிவேன். அது ஒழியும் வரை நாம் செய்யக்கூடிய குறைந்த பட்சப் பிராயச்சித்தம் யாதெனில், ஹரிஜனங்களுக்குக் கிடையாத வசதிகளை அனுபவியாம லிருப்பதும் அவர்களுக்கு உண்டாகும் கஷ்டங்களை அனுபவிப்பதுமே யாகும். அவர்கள் வசிக்கும் நிலைமையை எந்த நியாய புத்தியுள்ளவனும் ஒருநாள் கூடச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. என்னைப் போன்றவர்கள் எவ்வித அருவருப்புமின்றி ஹரிஜனச் சேரியில் போய் வசிக்குமளவு அந்தச் சேரி சுத்தமாக ஆகும் காலம் அதிசீக்கிரமாக வரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.''

## எந்தப் பெயரானுல் என்ன ?

**கேள்வி** :—'ஹரிஜன்' என்ற பெயர் எவ்வளவு புனிதத்தன்மை வாய்ந்ததாக இருந்தபோதிலும் அந்தப் பெயர் ஹரிஜனங்களுடைய மனத்தில் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சியையே ஊட்டிவிடுவதாக இருக்கின்றது. அவர்கள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தவரா யிருந்தபோதிலும், அந்த உணர்ச்சியை அவர்களிடமிருந்து நீக்கிவிடுவது என்பது கஷ்டமான காரியமாகும். அதுபோலவே ஹரிஜன் என்று யாரிடமேனும் கேட்டால் போதும். உடனே அவர் தீண்டாமையைப் பற்றியும் தாழ்த்தப்பட்டோரைப் பற்றியுமே பேச ஆரம்பித்து விடுகிருர். இந்தமாதிரி அவர்களிடம் உண்டாகிவரும் தாழ்வு உணர்ச்சியையும் பிற ஜனங்களிடம் உண்டாகிவரும் உயர்வு உணர்ச்சியையும்

உண்டாகாமல் தடுக்க முடியாதா? மற்ற மதத்தாரையும்கூடச் சேர்த்துக் கொள்ளக் கூடியதான ஒரு பெயரைச் சிருஷ்டிப்பது நல்லதல்லவா?

பதில் :—இந்த விஷயத்தைக் குறித்து ஏற்கனவே பலமுறை "யங் இந்தியா"ப் பத்திரிகையில் எழுதி யிருக்கின்றேன். ஹரிஜன் என்னும் மொழி உயர்ந்த நோக்கங்களை அறிவிப்பதாகும். தீண்டாதவர்கள் என்று கூறப்பெறுவோராகிய தோட்டிகள், செம்மார்கள், பறையர்கள் முதலியவர்களைக் குறிப்பதற்கு இந்தப் பதத்தை உபயோகிக்கலாம் என்று ஹரிஜனர் ஒருவர்தான் எனக்கு யோசனை கூறினார். சர்க்கார் உத்யோகஸ்தர்கள் இவர்களை ஒரு ஜாப்தாவில் சேர்த்தார்கள். அதனால் அவர்களை ஜாப்தா வகுப்பினர் என்று கூறுகிறார்கள். தீண்டாதவராக இல்லாதவர்களை ஜாப்தாவில் சேர்த்தும் தீண்டாதவராக உள்ளவரை ஜாப்தாவில் சேர்க்காமலும் முன்னிருந்த குழப்பத்தை முற்றிலும் குழப்பமாகச் செய்திருக்கிறார்கள். ஜாப்தாவில் சேர்க்கப்பட ஆசைப்படும் நிலைமைக்கு இப்பொழுது வந்துள்ளோம். தேர்தல் முறையுள்ள சகல ஸ்தாபனங்கள் விஷயத்திலும் தனித்தொகுதியைச் சர்க்கார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். உண்மையாகவே யோக்கியதை உள்ளவர்கள் அந்த ஸ்தானங்களைப் பெற ஆசைக்கொள்வதை நான் ஆட்சேபிக்க மாட்டேன். ஆனால் யோக்கியதையில்லாமலேயே ஆசைப்படுவது என்பது நிச்சயமாகக் கேடே விளைவிக்கும் உயர்ந்த உத்யோகம் பெறுவதற்கு வேண்டிய கல்வியைப் பெற விரும்பும் ஆசை ஆதரிக்கத்தக்கதே. ஆனால் இன்ன ஜாதியில் பிறந்தவன், எனக்கு உத்யோகம் கொடுங்கள் என்று கேட்பது கண்டிக்கத் தக்கதாகும்.

உண்மையான பரிகாரம் இது என்று நான் ஏற்கனவே யோசனை கூறியிருக்கிறேன். தாழ்வு உணர்ச்சிபோய்த் தீர வேண்டும். அது போய்க்கொண்டுதா னிருக்கிறது. ஆனால் மிக மிக மெதுவாகவே போய்க்கொண் டிருக்கிறது. ஹிந்துக்கள் ஒவ்வொருவரும் உயர்வு எண்ணத்தைத் துறந்துவிட்டு உண்மையிலேயே ஹரிஜனர்களாகவோ அல்லது அவர்களில் அடிப் படியிலுள்ள தோட்டிகளாகவோ ஆகிவிட்டால் அவர்களிடமுள்ள தாழ்வு உணர்ச்சி வெகு சீக்கிரத்தில் மறைந்து போய்விடும். அப்படி மறைந்துபோய் விடுமானால் அப்பொழுது நாம் அனைவரும் ஹரிஜனங்கள் அதாவது கடவுளுடைய குழந்தைகள் ஆய்விடுவோம். அது நடைபெறும்வரை "தீண்டாதவர்கள்" என்று பொருள்தரும் எந்தப் பெயரை வைத்துக்கொண்டாலும் தாழ்வு உணர்ச்சியேதான் உண்டாகும். தீண்டாமை என்பது துளிக்கூட இல்லாமல் செய்துவிட வேண்டும், அந்தச் சந்தோஷகரமான நாள் உதயமாகும்பொழுது, எந்த இடமும் ஹரிஜனச் சேரியாகவே ஆய்விடும். எந்த இடத்திலும் அசுத்தமான வீடும் உள்ளமும் காணப்படமாட்டா.

# தோட்டிகளின் வேலை நிறுத்தம்

வேலை நிறுத்தம் செய்யக்கூடாத சில விஷயங்கள் உண்டு. தோட்டிகளின் குறைகள் அந்த இனத்தைச் சேர்ந்தன வாகும். மற்றவைகளைக் குறித்து இப்பொழுது ஆராய விரும்ப வில்லை. தோட்டிகள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்ற அபிப்பிராயத்தை 1897-ம் வருஷத்தில் நான் டர்பன் நகரத்தில் இருந்தது முதல் கூறிவருகிறேன் அப்பொழுது பொது வேலை நிறுத்தம் செய்யும் பிரச்னை எழுந்தது. தோட்டிகளும் அதில் கலந்துகொள்ளலாமா என்று கேட்டபொழுது நான் கூடாது என்று கூறினேன். எப்படி மனிதன் காற்றில்லாமல் உயிர்வாழ முடியாதோ அப்படியே தன்னுடைய வீடும் சுற்றுப்புறமும் சுத்தம் செய்யப்படாமல் அதிக நாள் வாழ முடியாது. சாதாரண மாகவே அசுத்தமுள்ள இடத்தில் தொதது நோய்கள் உண்டா வது இயல்பு. அதிலும் தற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சாக்கடை முறை அப்போதைக் கப்போது சுத்தம் செய்யப் படாமலிருந்தால் தொத்து நோய்கள் உண்டாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆதலால் பம்பாயில் தோட்டிகள் வேலை நிறுத்தம் செய் துள்ளனர் என்ற விஷயத்தைப் பத்திரிகையில் படித்ததும் மனக் கலக்கம் அடைந்துவிட்டேன். அதிர்ஷ்டவசமாக அது முடி வடைந்து விட்டது. ஆயினும் தோட்டிகள் ஆண்களும் பெண் களும் தங்கள் விஷயத்தை மத்யஸ்தத்துக்கு விட மறுத்து விட்டார்கள் என்று அறிகிறேன்.

நான் தோட்டிகளுடன் அதிக நெருக்கமாகப் பழகி வந்த போதிலும், அதே காரணத்தினலேயே அவர்கள் கையாண்ட தாகச் சொல்லப்படும் நிர்ப்பந்த முறைகளைப் பலமாகக் கண்டிக் கின்றேன். அந்த முறைகளைக் கையாள்வதால் அவர்களுக்கு இறுதியில் நஷ்டமே உண்டாகும். நகரவாசிகளை எல்லாச் சமயங் களிலும் பயமுறுத்திவிட முடியாது. அப்படி பயமுறுத்தக் கூடியதாக இருக்குமானல், முனிசிபல் நிர்வாகம் அடியோடு குலைந்துபோகும். நிர்ப்பந்த முறையானது குழப்பத்தில் கொண்டுபோய் விடாமல் இருக்க முடியாது. எப்பொழுதும் பாரபட்சமற்ற மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ள மறுப்பது மறுப்பவருடைய பல வீனத்தையே காட்டும். தோட்டிகள் ஒரு நாளும் வேலை நிறுத்தம் செய்யலாகாது. அவர்களுக்கு நியாயம் பெற வேறு பல வழிகள் இருக்கவே செய்கின்றன.

நகர மக்கள் செய்யவேண்டியது யாதெனில், தீண்டாமை என்பதை அடியோடு மறந்துவிட்டு, தங்கள் சாக்கடைகளையும் தங்கள் நகரத்தின் சாக்கடைகளையும் தாங்களே சுத்தம் செய்யும் வித்தையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. அப்படிக் கற்றுக்கொண்டால், இத்தமாதிரி வேலை நிறுத்தம் ஏற்படும்

பொழுது, என்ன செய்வது என்று திகைத்து நிற்காமல் வேண்டிய ஊழியத்தைச் செய்யக் கூடியவர்களா யிருப்பார்கள். நிர்ப்பந்த முறைகளைக் கண்டு அஞ்சவுமாட்டார்கள். இந்த மாதிரியான அவசர சந்தர்ப்பங்களில் இராணுவ வீரர்களை யும் உபயோகப் படுத்தலாம் என்றுகூடக் கூறுவேன். சுயராஜ்யம் எட்டிப் பார்க்கும் இந்தச் சமயத்தில் ராணுவத்தை நம்முடையதாகவே எண்ணி இயன்றவளவு அவர்களை நிர்மாண வேலைகளுக்கு உபயோகித்துக் கொள்ளத் தயங்க வேண்டிய தில்லை. இதுவரை அவர்கள் நம்மீது காரணமின்றிச் சுடுவதற்கே உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றனர். இன்று அவர்கள் நிலத்தை உழவும், கிணறு வெட்டவும், சாக்கடை சுத்தம் செய்ய வும், தங்களாலியன்ற மற்ற நிர்மாண வேலைகளைச் செய்யவும் வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் தங்களிடம் ஜனங்க ளுக்குள்ள துவேஷத்தை அன்பாக மாற்றிக்கொள்ள முடியும்.

இப்பொழுது வேலை நிறுத்தம் நின்றுவிட்ட படியால், தோட்டிகளிடம் தோழமை கொள்ளவும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும், தக்க வீட்டு வசதியைச் செய்து கொடுக்கவும், எல்லோரையும்போல் இஷ்டமான இடத்தில் வசிக்க அனுமதி தரவும், நியாயமான கூலி கிடைக்கும்படி செய்யவும், அவர்கள் கேளாமலே அவர்களுக்கு நியாயம் வழங்கும்படி செய்யவும் வேண்டும். இதுதான் ஒவ்வொருவருடைய கடமையாகும். இந்தமாதிரி இந்தியா முழுவதும் நடைபெறுமானல் நாம் சுயராஜ் யத்துக்குத் தகுதியுடையவர்கள் என்று நிரூபிப்பதோடு அதைச் சரிவர நிர்வகிக்கும் ஆற்றலுடையவர்களுமாவோம்.

## பெண் பிரதிநிதிகள்

கேள்வி :—காங்கிரஸ் மகா சபையானது பொது ஸ்தாபனங்க ளுக்குப் பிரதி நிதிகளாகப் பெண்களை அதிகமாகத் தேர்தல் செய்ய விரும்பவில்லை என்று தோன்றுகிறது. ஆனல் அதிகமான பெண்களை அந்த ஸ்தாபனங்களில் சேர்த்துக் கொள்வது அவசிய மும் நியாயமும் ஆகும். அது சம்பந்தமாகத் தங்கள் கருத்து யாதோ ?

பதில் ;—அத்தகைய விஷயங்களில் சமத்துவமோ பங்கீடோ செய்யும் விஷயத்தில் எனக்கு எவ்வித நோக்கமும் கிடையாது. திறமையை பொறுத்துத்தான் தேர்தல் செய்ய வேண்டும். இது வரை நாம் பெண்களை இழிவாக எண்ணி வந்திருக்கிற காரணத் தால் நாம் இப்பொழுது திறமையான பெண்கள் கிடைக்குமிடங் களில் எல்லாம் ஆண்களுக்குப் பதிலாக அவர்களைத் தேர்தல் செய்ய வேண்டியதே முறையாகும். ஆனல் பெண் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு உரிமை கொண்டாடுவது அபாயகர மானதாகும். பெண்கள் மட்டுமன்று, எந்த வகுப்பாரும் பிறரு டைய தயவை எதிர்பார்த்து நிற்பது என்பது ஒருநாளும் கூடாது.

அவர்கள் நியாயத்தைக் கேட்க வேண்டுமேயன்றி தாட்சண்யத்தைக் கேட்கக்கூடாது. ஆதலால் செய்ய வேண்டியது யாதெனில் ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் இங்கிலீஷ் கல்வியோ மேனாட்டுக் கல்வியோ கொடாமல் மாகாண மொழி மூலமாகப் பொது விதமான கல்வி கொடுத்துத் தேசத்துக்குத் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்குத் தகுந்த திறமையை உண்டாக்குவதேயாகும். அதிகத் தேவையான இந்தச் சீர்திருத்தத்தை ஆண்கள் செய்ய வேண்டியது அவசரமான அவசியமாகும். இப்படி அவர்கள் செய்வது பெண்களுக்குத் தயவு செய்வதன்று, வெகு காலமாகச் செய்யத் தவறிவிட்ட நியாயத்தைச் செய்வதேயாகும்.

## பெண்களும் தேர்தலும்

“போதுமான அளவு பெண்களை அபேட்சகர்களாக நிறுத்தவுமில்லை, உத்யோகங்களுக்கு நியமிக்கவுமில்லை என்ற முறையீட்டிற்குத் தாங்கள் எழுதியுள்ள பதிலைக்கண்டு மகிழ்கின்றேன். அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களுடைய தகுதியொன்றே அளவுகோல் என்று கூறுகிறீர்கள். தங்கள் கூற்று முற்றிலும் சரியே. விஷயத்தை அலசிப் பார்ப்போர் எல்லோரும் அதை ஏற்றுக் கொள்வார்கள். “போற்றற் குரியது வயதுமன்று இனமுமன்று தகுதியொன்றே” என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் அநுபவம் அதற்கு மாறாகவே இருந்து வருகிறது. எங்கு பார்ததாலும் அந்த விதி மீறப்பட்டு வருவது தங்களுக்குத் தெரியாததன்று. மந்திரி சபைகள், சட்ட சபைகள். ஸ்தல ஸ்தாபனங்கள் எவற்றிலும் அபேட்சகர் தேர்தல் செய்யும் விஷயத்தில் தகுதிக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப் படக் காணோம். ஜாதி, இனம், மாகாணம் ஆகிய விஷயங்களை வைத்தே தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இப்படிச் செய்யலாமா என்று கேட்டால் இந்த விஷயங்களை அலட்சியம் செய்வது எப்படி என்று கூறப்படுகிறது. அப்படியானால் பெண்கள் நலனுக்கும் இடம் அளிக்க வேண்டுமல்லவா? இந்த நிலைமையில் தேர்தல் முறை தெளிவாக்கப்பட வேண்டியிருக்கிறதல்லவா?”

இது மதிப்பிற்குரிய ஒரு சகோதரி எழுதியுள்ள கடிதத்தின் ஒரு பகுதி. சகோதரி கூறும் வாதத்தின் சாரமானது, எல்லாம் தவறாக நடக்கும்போது இந்தத் தவறும் நடந்தால் என்ன என்பதாகும். ஆனால் இப்படியே தவறுகளைச் செய்து கொண்டு போனால் தீமை அளவுக்கு மீறி வளர்ந்து, இறுதியில் நாம் அதிலிருந்து விடுதலைபெற முடியாதபடி அகப்பட்டுக் கொள்வோம். ஆதலால் நான் பெண்களிடம் வேண்டிக் கொள்வது யாதென்றால் அவர்கள் அறிவு பூர்வமான துறவுக்கு உருவமாக ஆகி, அதன் காரணமாகத் தங்கள் பெண் குலத்தையும் தேசததையும் அலங்கரிப்பதோடு உயர்த்திவிடவும் வேண்டும் என்பதேயாகும்.

ஜாதியும் இனமும் நம் மனத்தைவிட்டு அகலாமல் நம்முடைய தேர்தல்களை ஆட்கொள்ளும் வரை, பெண்கள் அவைகளில் கலந்து கொள்ளாமல் விலகி நின்று அதன் மூலம் தங்கள் கௌரவத்தை வளர்த்து வருவதே நல்ல யோசனையாகும். இதைச் செய்வதற்குரிய இணையற்ற மார்க்கம் யாது? இன்று பெண்களில் சிலரே அரசியலில் கலந்து கொள்கிறார்கள். அப்படிக் கலந்து கொள்பவரிலும் பெரும்பாலோர் தாமாக எதையும் சிந்தித்துச் செய்யாமல் தம்முடைய பெற்றோருடைய விருப்பப்படியோ அல்லது கணவருடைய விருப்பப்படியோ தான் நடந்து வருகிறார்கள். அப்படிப் பிறரைச் சார்ந்து நிற்பதை உணர்ந்து தான் அவர்கள் இப்படிப் பெண்கள் உரிமைகள் என்று வாதாடுகின்றனர். இதற்குப் பதிலாக அவர்கள் பெண்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யவும், எதையும் தாமாகச் சிந்திக்குமாறு அவர்கட்குக் கற்பிக்கவும், அவர்களைப் பிணித்துள்ள ஜாதி விலங்குகளிலிருந்து விடுவிக்கவும் வேண்டும். அப்படிச் செய்தால் அப்போது பெண்களிடம் ஏற்படும் மாற்றமானது, ஆண்கள் பெண்களுடைய தியாகம் செய்வதற்குரிய ஆற்றலையும் திறமையையும் உணர்ந்து அவர்களுக்கு கௌரவமான பதவிகளை அளிக்கும்படி செய்துவிடும். பெண்கள் இந்த விதமாக நடந்து கொண்டால் இப்பொழுது காணப்படும் அதர்மமான சூழ்நிலை தூய்மை அடைந்துவிடும். இவ்வளவும் பெண்களுக்கு நான் கூறும் யோசனை.

ஆண்களுக்குக் கூறுவது யாதெனில், அவர்கள் தூய்மையற்ற சூழ்நிலை காணப்படும் பொழுதெல்லாம் அதைவிட்டு வெளியேறுவதே கடமை என்று உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே. ஜாதி, இனம் ஆகியவைகளை மனத்தினின்று தூரத்திவிட்டால் அவைகளை வைத்து எதுவும் செய்யமாட்டோம். அதற்குச் சிறந்ததும் எளியதுமான வழி ஆண்களும் பெண்களும் ஹரிஜனங்களிலும் ஹரிஜனங்களான தோட்டிகளாக ஆவதே யாகும்.

திறமையுள்ள பெண்கள் தேர்ந்தெடுக்கப் படாமலிருந்தால், ஆண்கள் அதற்குத் தக்க ஈடு செய்யவேண்டும். அத்துடன் ஆண்களை விட அதிகமாக விளங்குமாறு பெண்களுக்கு உதவி செய்யவும் வேண்டும். இந்த விதமாக இரு பாலரும் நடந்து கொண்டால் இப்பொழுதுள்ள நிலைமை சீக்கிரத்தில் திருந்திவிடும். ஆண்கள் அப்படி நடந்தாலும் நடக்காவிட்டாலும் பெண்களுடைய கடமை இதுதான் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.

## ஹிந்துஸ்தானி

ஹிந்தியும் உருதுவும் சரியான அளவில் கலந்தமைந்த இந்துஸ்தானி பாஷை. அதுதான் நமக்குத் தேசிய பாஷை என்பது எனக்குச் சந்தேகமேயில்லை. ஆயினும் அதை நான் என்னுடைய பேச்சிலும் எழுத்திலும் அனுஷ்டித்துக் காட்டமுடியவில்லை. அதைக் கண்டு 'ஹரிஜன சேவக்' வாசகர்கள் எரிச்சலடைய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய பாஷையை சிருஷ்டிக்கும் வேலை நிபுணனாக இல்லாதவன் கையில் வந்து சேர்ந்திருப்பது கூட நல்லதோ என்று எண்ணுகிறேன். இறுதியாகப் பார்த்தால் பொது ஜனங்களில் பெரும் பாலாரும் இந்த வகுப்பில்தான் வந்து சேர்வார்கள். அத்தகையோர் அனைவருடைய முயற்சியின் பயனாகத்தான் பாஷா பண்டிதர்கள் பாமரருக்கு அர்த்தமாகக் கூடிய விதத்தில் ஹிந்தியையும் உருதுவையும் கலந்து ஹிந்துஸ்தானியைச் சிருஷ்டிக்க முடியும். 'ஹரிஜன சேவக்' வாசகர்கள் அதில் காணப்படும் பாஷைத் தவறுகளை எடுத்துக் காட்டிக் கொண்டேயிருந்தால், அது நல்ல பாஷை நடை உண்டாவதற்கு வழியாக இருக்கும். ஹிந்துஸ்தானிபாஷையை காதுக்கு இனிமையாகவும் சகலர்க்கும் எளிதில் விளங்குவதாகவும் செய்யவேண்டும் என்பதே "ஹரிஜன சேவக்" பத்திரிகையின் நோக்கமாகும். எல்லோர்க்கும் விளங்காத பாஷையால் எவ்வித பயனும் கிடையாது. உபயோகமில்லாத பாஷை உருப்படாது. உபயோகமில்லாத பாஷையைக் கொண்டு வந்து திணிக்கும் முயற்சிகள் எல்லாம் வீணாகவே போகும்.

## உருது பாஷைக்கு ரோமன் லிபி

உருது பாஷைக்கு ரோமன் லிபியைக் கையாளுவதுபோல் ஹிந்தி பாஷைக்கு ரோமன் லிபியைக் கையாண்டால் என்ன? அதைச் செய்து விட்டால் அடுத்தபடியாக இந்தியாவிலுள்ள சகல பாஷைகளுக்கும் ரோமன் லிபியைக் கையாள வேண்டியது தான். இதுவரை நெடுங் கணக்கு இல்லாதிருந்த துளு பாஷைக்கு ரோமன் லிபியை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தியாவில் மேற்கொள்ளும் இந்த முயற்சியானது உலக முழுவதிலும் 'எஸ்பரான்டோ' என்னும் பாஷையைத் திணிக்க நடக்கும் முயற்சி போன்றதேயாகும். அது சமீப காலத்தில் நடைபெறப் போவதில்லை. இந்தியாவிலுள்ள சகல பாஷைகளுக்கும் ரோமன் லிபியை ஏற்படுத்த விரும்புவோரை ஒரு சிலர் ஆதரிக்கலாம். ஆனால் அது ஒரு நாளும் பொது ஜனங்களிடையே செல்வாக்குப் பெற முடியாது ; பெறவுங் கூடாது. கோடிக்கணக்கான மக்கள் தங்கள் தங்கள் பாஷா லிபியைக் கற்றுக்கொள்ள முடியாத அளவு சோம்பலடைய வேண்டியதில்லை. இப்போதுள்ள லிபிகளை விலக்காமல் அவற்றோடு நாகரி லிபியைக் கற்றுக்கொள்ளச் செய்யும் முயற்சியும் நடக்கிறது. அது போற்றத் தக்கதே. அந்த முயற்சி

யால் நாளடைவில் ஜனங்கள் எல்லோரும் இந்திய பாஷைகளையெல்லாம் நாகரி லிபியில் வாசிக்கக் கற்றுக் கொள்வார்கள். உருது லிபிக்குப் பதிலாக நாகரி லிபியை ஏற்படுத்த முடியாதென்பதற்குரிய காரணங்களை எல்லோரும் அறிவார்கள். ஆதலால், தேச பக்தர்கள் அனைவரும் உருது லிபியை ஒரு பாரமாகக் கருதாமல் கற்றுக்கொள்ள வேண்டிய தவசியம். இந்த முயற்சிகள் எல்லாம் எனக்குப் போற்றத் தக்கவைகளாகத் தோற்றுகின்றன.

நான் புதுக்கருத்துகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றேன். ஆயினும் நாகரி லிபியையோ உருது லிபியையோ நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக ரோமன் லிபியைப் பரவச் செய்யவேண்டுமென்பதற்குத் தகுந்த காரணம் எதுவும் எனக்குப் புலப்படவில்லை. அது இந்தியச் சேனை வீரர்களிடையே அதிகமாகப் பரப்பப்பட்டிருக்கிறது என்பது உண்மையே. ஆனால் இந்தியப் போர் வீரர்களும் தேசிய உணர்ச்சி ததும்பப் பெறுவார்களானால் நாகரி லிபியையும் உருது லிபியையும் கற்றுக் கொள்ளப் பின்வாங்க மாட்டார்கள் என்றே எண்ணுகின்றேன். அவர்கள் பின் வாங்கினாலும் அந்த வீரர்கள் இந்திய ஜன சமுத்திரத்தில் ஒரு துளி மாத்திரமே யாவார்கள். அவர்களுக்கு ரோமன் லிபியைக் கற்றுக்கொடுத்ததற்குக் காரணம் அப்படிக் கற்றுக் கொடுத்த ஆங்கில உத்தியோகஸ்தர் உருது லிபியையும் நாகரி லிபியையும் கற்றுக்கொள்ளச் சோம்பலாகி விட்டதேயாகும்.

## இந்தியாவை விட்டு வெளியேறுக

அஹிம்சா தர்ம ரீதியாக ஆராய்ந்தால், "இந்தியாவை விட்டு வெளியேறுக" என்பது ஆன்மாவுக்கு உகந்ததும் ஆற்றல் நிறைந்ததுமான கோஷமாகும். அது வெறும் அர்த்தமற்ற கூச்சலன்று. உண்மையினின்றும் அஹிம்சையினின்றும் அணுவளவு கூடப் பிறழாமல் அன்னிய ஆட்சியையும் ஆதிக்கத்தையும் அடியோடு ஒழித்துவிடுவதே அதன் பொருள். அன்னியரை அழிப்பதன்று அதன் பொருள். அவரை இந்திய தேசபக்தராக மாற்றுவதே அதன் பொருள். இந்த விதமான திட்டத்தில் அன்னியரைத் துவேஷிப்பது என்பதற்கு இடமே கிடையாது. அவரும் நம்மைப்போல் மனிதரேயாவர். அவரைக் கண்டு அஞ்சுவதாலேயே அவரிடம் துவேஷம் கொள்கின்றோம். அச்சம் அகன்றுவிட்டால் துவேஷம் உண்டாகமாட்டாது.

அதனால் அவர் மனமாற்றமடைய வேண்டுமானால் நாமும் மனமாற்றம் அடையவேண்டும். நாம் அடிமையாயிருக்க மறுத்துவிட்டால் அவர் ஆண்டவராக இருக்கமுடியாது. அவருடைய ஆயுதங்களும் வெடிமருந்துகளும் அவற்றின் சிகரமாகிய அணுகுண்டும் நம்மைப் பயமுறுத்த விடக் கூடாது. அப்படிச் செய்தால் அவர்களை நாமும் யெதிர்த்துக்கொள்ளவேண்டும என்றஆசை உண்டாகமாட்டாது. எதையும் அடைந்துவிட்டால்தான் அது-

வேண்டுமென்ற ஆசை உண்டாகாது என்று நாம் அடிக்கடி தவறாக எண்ணிவருகின்றோம். நம்மை மயக்கும் இந்த வாதம்தான் நம்முடைய வேதனையை இன்னும் போகவொட்டாமல் நீடித்துக் கொண்டிருக்கிறது. தீமையை விட்டு விலகக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் அதை எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவு செய்து பார்த்துவிடவேண்டுமோ? தீமையை விட்டு விலகுவதற்கு தீமை என்று அறிந்துகொண்டால் மட்டும் போதாதோ? அது போதாது என்றால் தீமையை விட்டு எப்படி விலகுவேன், அதிலுள்ள ஆசை எனக்கு அதிகமாயிற்றே என்று தைரியமாக ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம்.

அன்னிய ஆட்சி முடிந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது அன்னியர் செய்யவேண்டியது யாது? அவரும் கூட இதுவரை பிரிட்டிஷ் பீரங்கிகளின் பாதுகாப்பிலேயே இருந்து வந்ததால் சுதந்திரமாயிருந்தவராகக் கூறமுடியாது. அன்னிய ஆட்சி போனவுடன் அவரும் சுதந்திரம் அடைந்துவிடுகிறார். கோடிக்கணக்கான இந்திய மக்கள் அனுபவிக்க முடியாத விசேஷ நலங்களைத் தாம் மட்டும் அனுபவித்து வந்தது தவறு என்று உணர்ந்துகொள்வார். அதனால் பாரதத்தாயின் மக்களைப் போலவே தாமும் தம்முடைய கடமையைச் செய்துகொண்டு வாழ்வார். இந்தியாவின் செலவில் வாழமாட்டார். அதற்கு மாறாக அவர் தம்முடைய சக்திகளை எல்லாம் இந்தியாவின் நலனுக்காகவே பயன்படுத்துவார். தம்முடைய ஸ்வீகார தேசத்தார் தம்மை இவர் நமக்கு கட்டாயமாக தேவை என்று கூறும்படியாகச் சேவை செய்வார்.

இந்தமாதிரியாக ஐரோப்பியரே நடப்பார்களானால் விசேஷமான சலுகை கிடைக்கும் என்பதற்காக ஐரோப்பியர் என்று சொல்லிக்கொண்டு ஐரோப்பிய நடையுடை பாவனைகளை மேற்கொண்டுள்ள ஆங்கிலோ இந்தியர்களும் நடப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அத்தகையோர் அனைவரும் இதுவரை விசேஷ சலுகை அனுபவித்து வந்தது போலவே இனிமேலும் அனுபவித்துவர சங்கோசப்படுவார்கள். அந்தமாதிரியாகச் சலுகைகளை அனுபவிக்க அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அது அவருடைய கௌரவத்திற்கு இழிவானதுங்கூட. ஆதலால் அந்த பாரம் நீங்குவதற்காக அவர்கள் நன்றி செலுத்துபவர்களாகவே இருப்பார்கள்.

ஆள்வோர் ஆளப்படுவோர் அனைவரும் இயற்கைக்கு விரோதமானதும் மனித சக்திகளை அடக்கிவைப்பதுமான சூழ்நிலையிலேயே இதுவரை இருந்துவந்திருப்பதால், சாதாரணமான பிராண வாயுவைவிட அதிக ஆற்றல் வாய்ந்த ''ஓஜோன்'' போன்றதும் நாட்டிற்குப் புத்துயிர் அளிப்பதுமான சுதந்திர வாயுவைச் சுவாசிப்பதற்கு ஏற்ற சுவாசப்பைகள் இல்லாதது போலிருப்போம். ஆனால் இரு கட்சியாரும் இந்திய சுதந்திரம் பெறுவதே நியாயமான காரியம் என்று உணர்ந்துவிட்டால் அப்போது அது

அஹிம்சா முறையில் ஒழுங்காக அமைக்கப்படும். அப்பொழுது உலக முழுவதும், இப்படியும் ஒருமுறை இருக்கிறதா, என்று ஆச்சரியப்படும்.

## நிறத் துவேஷம்

காந்தியடிகள் ஸேவாக்ப்பூரில் தங்கியிருந்தபொழுது ஆங்கில நண்பர் ஒருவர் அவரைப் பார்க்க வந்தார். பல பேச்சுகளுக் கிடையே தென் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துவரும் நிறத் துவேஷத்தைப் பற்றியும் பேசினார்கள்.

காந்தியடிகள் :—தென் ஆப்பிரிக்காவில் போலவே அமெரிக்காவிலும் இந்தவிதமான துவேஷம் காணப்படுகின்றது. ஜாதித் தூய்மையையும் பொருளாதார க்ஷேமத்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற தவறான கருத்தே தான் இரண்டுக்கும் பொதுவான காரணமாகும். ஏதேனும் வித்தியாசமிருந்தால் அது அளவைமட்டுமே பொறுத்ததாகும். நிறத் துவேஷம் உண்டாயுள்ள வழக்குகளைத் தனித் தனியாக ஆராய்ந்து பார்த்தால் அவைகளிடை காணப்படும் வித்தியாசம் ஆறுக்கும் அறை ஜடனுக்குமுள்ள வித்தியாசம்தான். அந்த இரண்டு நாடுகளிலும் காணப்படும் நிறத் துவேஷம் இந்த நாட்டிலும் உண்டு.''

நண்பர் :—அது எப்படி? இங்கே மிகக் குறைவல்லவா?

காந்தியடிகள் :—ஆம், அதற்குக் காரணம் ஜனத்தொகை மிகப் பெரியதாக இருப்பதேயாகும். ஆயினும் அந்தத் துவேஷம் காரணமாக அல்லற்படும் ஒருவருடைய விஷயத்தைக் கவனித்தால் அவர் படும் பாட்டுக்கும் அந்த இரண்டு நாட்டிலுமுள்ள கறுப்பு மக்கள் படும் பாட்டுக்கும் வித்தியாசமே கிடையாது. நண்பர் ஆம் என்று ஒப்புக்கொண்டு "ஆனால் நாங்கள் ஆங்கிலேயர்கள் அந்த விஷயத்தை மறந்து விடுகிறோம்."

காந்தியடிகள் :—ஆம், பழகிப் பழகி பிறவிக் குணம்போல் ஆய்விட்டது. நீங்கள் வேண்டுமென்று மறந்திருக்கமாட்டீர்கள்.

நண்பர் :—ஜாதிகள் என்பன பஞ்சாபிலும் டில்லியிலும் இதர இடங்களில் கலப்பதைவிட அதிக தாராளமாகக் கலந்து வருகின்றனவே, அதற்குக் காரணம் இரண்டு இனங்களின் தொகைகள் ஒன்றுக்கொன்று அதிக ஏற்றக் குறைவாக இல்லாதது தானே?

காந்தியடிகள் :—நிறத் துவேஷம் பஞ்சாபிலும் டில்லியிலும் உள்ளதைவிட வங்காளத்தில் அதிகமாக இருப்பதற்குக் காரணம் அங்கே ஹிம்சைமுறை அதிகமாக அனுஷ்டிக்கப்படுவதே என்று எண்ணுகிறேன். பஞ்சாபிலும் ஹிம்சை முறை தலைகாட்டியதுண்டு, ஆனால் வங்காளத்திலே அது தங்கியே வருகின்றது. பாருங்கள், சிட்டகாங்கில் வெடிமருந்துச் சாலையைக் கைப்பற்ற முயற்சி நடந்ததே, அதுபோல் வேறு எங்கேனும் நடந்ததா?

நண்பர் :—ஆம், அதைப்பற்றி நான் பலமுறை சிந்தித்து வந்துளேன் ஆயினும் சாந்த சுபாவமுள்ள வங்காள இளைஞர்கள் எப்படித்தான் இந்தமாதிரி ஹிம்சை முறையில் இறங்கி விட்டார்களோ, எவ்வளவுதூரம் யோசித்துப் பார்த்தாலும் எனக்கு விளங்கவேயில்லை.

காந்தியடிகள் :—உங்களுக்கு விளங்கவில்லையா? எனக்கு விளங்கிவிட்டது. ஆங்கிலேயர் தங்களை இழிவாகப் பேசிவிட்டதாக எண்ணுகிறார்கள். வங்காளிகளிடம் வீரம் கிடையாது என்று கர்ஸன் பிரபு பிதற்றிக்கொண்டேயிருந்தார். அது அவர்களுடைய சாந்த குணத்தை அழித்து விட்டது. அப்படியா கூறுகிறீர்கள், நாங்கள் சூரர்களாக இல்லாமலிருக்கலாம், ஆனால் ஒருநாளும் நாங்கள் கோழைகள் அல்லர் என்று கூறுகிறார்கள். அதனால்தான் அவர்கள் இந்தத் தவறான முறையைக் கையாண்டு துணிகரமான செயல்கள் செய்வதில் இதர மாகாணங்களை யெல்லாம் தோற்கடித்துவிட்டார்கள். மரணமா, வறுமையா பொதுஜன அபிப்பிராயமா எதையும் வகைவைப்பதில்லை. அத்தகைய பயங்கர இயக்கத்தினர் அநேகருடன் இந்த விஷயத்தை அலசி அலசி விவாதித்துள்ளேன். ஆரியர் கையாண்டாலும் யூதர் கையாண்டாலும் அது தவறானதே, இந்த ஹிம்சைமுறை பாமர மக்களுடைய இதயத்தில் இடம் பெற்று விடுமானால் அப்புறம் இந்த உலகத்துக்கு விமோசனமே கிடையாது. உலகம் முழுவதும் அழிந்தே போகும்.''

நண்பர் :—அது சென்ற இரண்டு மூன்று வருடங்களாக உலக முழுவதிலும் பரவித்தானே வருகின்றது.

காந்தியடிகள் :—ஜெனரல் மக்கார்தர் சமீபத்தில் போட்டிருக்கும் உத்தரவைப் பாருங்கள். அவர் ஜப்பானிய சமூகத்தார் அனைவரையும் யுத்தக் குற்றவாளிகள் என்றும் யுத்தக் குற்றவாளிகளல்லாதவர் என்றும் இரண்டு வகுப்பாகப் பிரிக்கின்றார். அதைப் படித்ததும் என் மனதில் தோன்றியது யாதெனில், சுயமரியாதையும் சுருக்கென்று தைக்கும் மனமும், மேனாட்டார்போல் கட்டுப்பாடுமுள்ள ஜப்பானிய சமூகத்தாரிடையே ஜனநாயக முறையை ஏற்படுத்துவதற்குரிய சிறந்த மார்க்கம் இதுவன்று என்பதே யாகும், அவர்கள் இத்தாலியர் கரிபால்டி காலத்தில் நடந்து கொண்ட மாதிரியும் அதைவிடப் பெரிய அளவிலும் நடந்து கொள்வார்கள். மனித சமூகத்தை நடத்த வேண்டியமுறை இதுவன்று. உலகத்தில் ஒருபகுதியில் நடப்பது மற்றப் பகுதிகளையும் பாதிக்கும் உலகம் அவ்வளவு சிறியதாக சுருங்கிப் போயிருக்கின்றது.

### உலகம் பின்போகின்றதா ?

நண்பர் :—அப்படியா, எண்ணுகிறீர்கள். அந்தமாதிரி உலகம் கெட்டுப் போய்விட்டதாகத் தோன்றவில்லை. சென்ற மூன்று வருஷங்களாக இந்தோனேஷியா முதலிய இடங்களில்

துன்பமும் துயரமும் அளவுக்கு அதிகமாகக் காணப்படுவது உண்மைதான். ஆயினும் அந்த அளவுக்கு மனிதனுடைய மன மானது இன்னும் கெட்டுப்போக வில்லை என்றே தோன்றுகிறது"

காந்தியடிகள்:—ஆம், அதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆகா கான் மாளிகை யிலிருந்த காலத்தில் எனக்குப் படிக்கவும் சிந்திக் கவும் அதிகமான சமயம் கிடைத்திருந்தது. என்னுடைய மனதில் பட்டது யாதெனில் உலகத்தில் நடக்கும் காரியங்களைப் பார்த்தால் மனிதன் கெட்டுவருவது போலவேதான் தோன்றுகிறன் என்பதும் ஆனாலும் அவனுடைய மனமானது நாளுக்கு நாள் அதிகமாக முன்னேறி வருவதாகவே தோன்றுகிறது என்ப துமே யாகும். மனத்தின் வளர்ச்சிக்குத் தக்கவாறு நடைபெற வில்லை மனிதனுடைய அனுஷ்டானம். முன்னால் சரி என்று விவா தித்து வந்த தன்னுடைய நடத்தையையும் அக்கம் பக்கத்தார் நடத்தையையும் இப்பொழுது அதேமாதிரி சரி என்று விவாதிப்ப தில்லை. பிழையைத திருத்தவே விரும்புகிறன். ஆயினும் அவனுக்குத்தான் செய்வது தவறு என்று தெரியவில்லை எண் ணம் ஒருமாதிரியாகவும் நடத்தை ஒருமாதிரியாகவும் இருந்து வருகிறது. ஆராய்ந்து எதையும் செய்வதில்லை. ஆயினும் இறு தியில் அஹிம்சா தர்மமே அனுஷ்டிக்கபடும் என்று உறுதியாக ஜோசியம் கூறுகின்றேன். எப்படியும் இறுதியில் ஜெயமே என் னும் என் சித்தாந்தத்தை அதுவேதான் உயிருட னிருக்கும் படி செய்துவருகின்றது. அஹிம்சை தானகவே வெற்றி பெற்று விடும் என்னும் என்னுடைய நம்பிக்கையை என் நீண்டநாள் அனுபவம் ஊர்ஜிதம் செய்கின்றது' அஹிம்சையை யாரும் தடுக்க முடியாது. யார் அனுஷ்டித்தாலும் சரி அது சகல விதத் தடை களையும் தூக்கி எறிந்துவிடும். நாம் எந்தவழியில் இந்த முடிவுக்கு வந்தாலும் சரி, அதுதான் நம்மை மனச்சோர்வு அடையாமல் உற்சாகமாக இருக்கச் செய்துகொண் டிருக்கிறது.

## மந்திரிகள் சம்பளம்

மந்திரிகளும் மாகாணச் சட்டசபைகளிலுள்ள அங்கத்தினர் களும் சகல விதங்களிலும் ஜனங்களுடைய ஊழியர்கள் என்ற நிலைமையிலேயே தத்தம் பதவிகளை வகித்து வருகிறார்கள். அதனல் அவர்கள் பிரிட்டிஷ் சம்பள விகிதப்படியே சம்பளம் பெறுவ தானல் அதனல் ஜனங்களுக்கே நஷ்டம் சட்டப்படி சம்பள விகிதம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவர்கள் அந்த விகிதப் படியே சம்பளம் பெற்றுத் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடை யாது. எவ்வளவு பணம் சம்பளம் என்று சட்டம் கூறுகிறது. ஆனல் பணமுடையவர்கள் சம்பளம் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ பெருமலிருப்பதே நல்லது. சம்பளம் ஏற் படுத்தி யிருப்பது சம்பளம் பெருமல் ஊழியம் செய்ய இயலாத நிலைமையில் இருப்பவர்களுக்காகவே. மந்திரிகளும் அங்கத்தினர்

களும் உலகத்தில் வேறு எங்கும் காணப்படாத அளவு அதிகமான வறுமையுடைய ஜனசமூகத்தின் பிரதிநிதிகள் என்பதை மறந்துவிடலாகாது. அவர்கள் பெறும் சம்பளப் பணம் எல்லாம் ஏழைகள் தருவதே யாகும். இந்த முக்கியமான விஷயத்தை ஞாபகத்தில் வைத்தே எந்தக் காரியத்தையும் செய்தல் வேண்டும்.

### மந்திரிகள் சம்பளம்

**கேள்வி:**—சட்டசபைகளில் காங்கிரஸ் மெம்பர்கள் பெரும்பான்மையோராகவுள்ள மாகாணங்களில் மந்திரிகளுடைய சம்பள விஷயம் இந்தத் தடவை எந்தத் தத்துவத்தை அனுசரித்துத் தீர்மானிக்கப்படப் போகிறது? இது சம்பந்தமாக நிறைவேறியுள்ள கராச்சித் தீர்மானம் இன்னும் அமுலில் இருக்கிறதா? இப்பொழுது ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றத்தை வைத்துத் தீர்மானிப்பதானுல் சர்க்கார் ஊழியர்களுக்கு மூன்று மடங்கு சம்பள உயர்வு தரவேண்டுமே, அதற்குச் சர்க்கார் வருமானம இடந்தருமா? இடந்தராதென்றால் மந்திரிகளுக்கு 1500-ரூபாய் கொடுத்துவிட்டு வாசற் சேவகருக்கும் உபாத்தியாயருக்கும் 12-ம், 15-ம் கொடுத்து, காங்கிரஸ் மந்திரி சபை நிர்வாகத்தைச் சரிவர நடத்தவேண்டி யிருப்பதால் கூக்குரல் போடாதீர்கள் என்று கூறுவது சரியாகுமா?

**பதில்:**—இந்தக் கேள்வி பொருத்தமானதே, ஏன் மந்திரி 1500-ம் வாசற் சேவகரும் உபாத்தியாயரும் 15-ம் பெறவேண்டும்? ஆனுல் இந்தப் பிரச்னையை இப்படிக்கேள்வி கேட்டுத் தீர்த்துவிட முடியாது. இந்தமாதிரி வித்தியாசங்கள் ஆதிகாலந் தொட்டு இருந்து வருகின்றன. யானைக்கு அமோகமான உணவு தேவையா யிருப்பதும எறும்புக்கு ஒரு தானிய மணி போதுமானதாயிருப்பதும் ஏன்? இந்தக் கேள்வியிலேயே அதன் பதிலும் அடங்கியிருக்கின்றது. கடவுள் ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்குத் தக்க அளவே படியளக்கின்றார். யானையினுடைய தேவையையும் எறும்பின் தேவையையும் அறிய முடிவதுபோல, மக்களின் தேவைகளிலுள்ள வித்தியாசங்களையும் அறிய முடியுமானுல் இந்தமாதிரியான சந்தேகங்கள் எழமாட்டா. தேவை விஷயத்தில் வித்தியாசங்கள் உண்டு என்பதை அனுபவத்தில் காண்கின்றோம். ஆனுல் அந்த விஷயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும். என்பது மட்டும் விளங்காலிருக்கிறது, ஆகையால் இன்று நாம் செய்யக்கூடியதெல்லாம் இயன்ற மட்டும் வித்தியாசங்களைக் குறைக்க முயல்வதேயாகும். அப்படிக் குறைப்பது அஹிம்சா பூர்வமான கிளர்ச்சியாலும் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டுவதாலுமே நடைபெறும்படி செய்ய முடியும். சத்தியாக்கிரகம் என்று சொல்லிக்கொண்டு துராக்கிரகம் செய்யும் பலாத்கார முறையால் சாதிக்க முடியாது. மந்திரிகள் ஜனங்களுடைய ஊழியர்கள். மந்திரிகள் ஆவதற்கு முன்கூட அவர்களுக்கிருந்த தேவைகள் வாசற் சேவகருடைய தேவைகளை விட அதிகமேயாகும். வாசற்சேவகர் ஒருவர் மந்திரி பதவிக்குத்

தகுதியுடையவராக இருப்பதோடு, தம்முடைய தேவைகளை அதிகப்படுத்திக் கொள்ளாதிருப்பாரானால் நான் சந்தோஷமே அடைவேன், மந்திரிகள் தங்களுக்கு ஏற்படுத்தப்படும் சம்பளம் முழுவதையும் பெற்றுத் தீர வேண்டும் என்ற கட்டாயமில்லை என்பதையும் மறந்துவிடலாகாது.

இந்தப் ப்ரச்னையினின்று எழும் ஒரு விஷயத்தைப்பற்றிச் சிந்திப்பது நல்லது. வாசற்சேவகர் லஞ்சம் வாங்காமல் 15 ரூ. சம்பளத்தை மட்டுங்கொண்டு தம்மையும் தம்முடைய குடும்பத்தையும் காப்பாற்ற முடியுமா? தவறாக நடக்கும் எண்ணம் உதியாமலிருப்பதற்கு வேண்டிய அளவு சம்பளம் கொடுக்க வேண்டாமா? இதற்குரிய பரிகாரம் இயன்றமட்டும் நாமே நம்முடைய வாசற் சேவகராக இருந்து கொள்வதுதான். வாசற் சேவகர் இல்லாமல் முடியாதென்றால் அவர்களுடைய தேவைக்குத் தக்க அளவு சம்பளம் கொடுக்க வேண்டியதே. இந்த விதமாகவே மந்திரிக்கும் வாசற் சேவகர்க்கு மிடையேயுள்ள வித்தியாசத்தைப் போக்கவேண்டும்.

மந்திரிகளின் சம்பளம் 500 ரூபாயிலிருந்து 1500 ரூ. ஆக உயர்த்தப்பட்டதேன் என்ற விஷயம் வேறு. பிரதானமான பிரச்னையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த விஷயம் வெகு அற்பமானதாகும். இந்த விஷயத்தைத் தீர்ப்பதால் அந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. அந்தப் பிரச்னை தீரும்போது இந்த விஷயமும் தானாகவே தீர்ந்துவிடும்.

## மந்திரிகளின் கடமை

காங்கிரஸ் மந்திரிகள் பதவியை ஏற்றுக்கொண்டு விட்டதால் கதரையும் இதரக் கிராமக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்காக என்ன செய்யப்போகிறார்கள் என்று கேட்பது நியாயமேயாகும். நான் காங்கிரஸ் மந்திரிகளைக் கேட்பதோடு நிற்காமல் மாகாண சர்க்கார்கள் எல்லாவற்றையுமே கேட்க விரும்புகிறேன். தரித்திரம் என்பது சகல மாகாணங்களுக்கும் பொதுவானதே. அதனால் ஏழைகளுக்குச் செய்ய வேண்டிய உதவிகளும் பொதுவானவைகளே. இதுதான் அகில இந்திய நூற்பவர் கழகத்தின் அனுபவமும், அகில இந்தியக் கிராமக் கைத் தொழிற் கழகத்தின் அனுபவமுமாகும். இந்த விஷயங்களைக் கவனிப்பதற்கு அதிக நேரம் தேவையாகுமாதலால் இதற்காகத் தனியாக ஒரு மந்திரியை நியமிக்க வேண்டும் என்று யோசனை கூறப்படுகிறது. நாம் இன்னும ஆங்கில முறையிலேயே செலவு கட்டச் செய்து வருவதால் இந்த யோசனையை ஏற்கத் தயங்குகிறேன். ஆனால் தனியாக மந்திரி நியமித்தாலும் நியமிக்காவிட்டாலும் இந்த வேலைக்காகத் தனியாக ஒரு இலாகா வேண்டியது அவசியமே. உணவுக்கும் உடைக்கும் பஞ்சமாயிருக்கும் இந்தச் சமயத்தில் இந்த இலாகா அதிகமான உதவியைச் செய்யமுடியும்.

மந்திரிகளுக்கு யோசனை கூறுவதற்காக அந்த இரண்டு கழகங்களிலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். அதி சீக்கிரத்திலும் மிகக் குறைந்த செலவிலும் நாடு முழுவதற்கும் வேண்டிய கதர் உடையை உண்டாக்கிவிட முடியும். ஒவ்வொரு மாகாண சர்க்காரும் கிராமத்தாரிடம் நீங்களே உங்களுக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்துகொள்ள வேண்டும் என்று கூறிவிடுமானால் உற்பத்தியும் வினியோகமும் தானாகவே நடந்து விடும். அது மட்டுமன்று. நகரங்களுக்கு வேண்டிய கதர்கூட கிராமத்தில் உற்பத்தியாகிவிடும். அப்போது மில்களில் உற்பத்தியாகும் துணிகள் உலகத்தில் துணிக்குறைவுள்ள பாகங்களுக்குச் செல்லக் கூடியதாக ஆகிவிடும்.

இந்தக் காரியத்தைச் செய்து முடிப்பது எப்படி?

மாகாண சர்க்கார் கிராமத்தாரிடம் இன்ன தேதிக்குப் பிறகு உங்களுக்குத் துணி அனுப்ப மாட்டோம், நீங்களே தாம் கதரை உற்பத்திசெய்து கொள்ள வேண்டும் என்று கூறிவிடவேண்டும் சர்க்காரே கிராமத்தார்க்குப் பருத்தி விதையோ பருத்தியோ ராட்டினம் தறி முதலியனவோ தேவையானதைக் கொள்முதல் விலைக்கே கொடுத்து அந்தப் பணத்தை ஐந்தாறு வருஷங்களில் தவணையாக வசூலித்துக் கொள்ளவேண்டும். தேவைப்படுமிடங்களுக்கு கதர் உற்பத்திஆசிரியர்களை அனுப்பி வைக்கவும் கிராமத்தாருடைய தேவைக்குப் போக மிஞ்சும் கதரை விலைக்கு வாங்கிக் கொள்ளவும் வேண்டும். இந்த விதமாகச் செய்தால் எவ்விதக் கஷ்டமும் சிப்பந்திச் செலவுகளுமின்றி எளிதில் எல்லோர்க்கும் உடை கிடைக்கும்படி செய்துவிடலாம்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் வேண்டிய சாமான்கள் இவை, ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்யக்கூடிய சாமான்கள் இவை, ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தி செய்து வெளியே கொண்டுபோய் விற்கக்கூடியவை இவை என்று ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும். கிராமங்களில் செக்கிலாடும் எண்ணெய், புண்ணாக்கு, கைக்குத்தலரிசி, கருப்புக்கட்டி, தேன், விளையாட்டுச் சாமான்கள், பாய்கள், கையால் செய்யும் கடுதாசி, சோப் போன்ற பல பொருள்களைச் செய்யலாம். போதுமான சிரத்தை மேற்கொண்டால் செததோ, சாகவோ கிடக்கும் கிராமங்கள் எல்லாம் உயிர் பெற்று எழுந்து நகரங்கட்கும் பட்டினங்கட்கும் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தங்கள் அபார சக்திகளை திர்சனமாகக் காட்டிவிடும்.

இந்தியாவில் கால்நடைச் செல்வமும் ஏனென்று கேட்பாரின்றி வீணே அழிந்து போய்க்கொண்டிருக்கிறது. கோசேவா சங்கம் இன்னும் அதிகமான அனுபவத்தைப் பெறுகிருந்த போதிலும் போதிய உதவிகளைச் செய்ய இயலும்.

ஆதாரக் கல்வி அமைக்கப்படாததால் கிராமத்து ஜனங்கள் எழுத்து வாசனையில்லாமல் இருக்கிறார்கள். இந்தக் கல்வியை ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் ஏற்படுத்த முடியும். காங்கிரஸ்

சர்க்கார்கள் அதை ஏற்படுத்தி வந்தார்கள். ஆனால் அவர்களுடைய ராஜிநாமாவால் அந்த முயற்சிகள் தடைப்பட்டுப் போயின. இப்பொழுது மறுபடியும் அவைகளைப் புதுப்பிக்கலாம்.

## ஏன் கூடாது?

"கஸ்தூர்பா தர்ம நிதி ஏஜண்டுகள் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தால் அது கிராமத்து ஜனங்களுக்கு ஒரு தவறான வழி காட்டுவதாகும் என்று கூறுகிறீர்கள். தாங்கள் கூறுவது இப்பொழுதுள்ள சட்ட சபைகளுக்குப் பொருந்தும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சுயராஜ்யம் வந்துவிட்டால் அப்பொழுது நிலைமை மாறிவிடாதா? அதனால் அவர்கள் சட்ட சபையில் இருப்பது நல்லதல்லவா? சாதாரணமாக இரண்டு வருஷங்களில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களைச் சட்ட சபையிலிருந்தால் அதன் ஒரு கூட்டத்திலேயே முடித்துவிட முடியுமல்லவா?",

இந்தவிதமாக ஒரு சகோதரி எழுதுகிறாள். ஆனால் அவளுடைய வாதத்தில் மூன்று பிழைகள் இருப்பதாகத் தோன்றுகிறது. முதலாவதாக, நான் இப்போதுள்ள சட்ட சபைக்கும் சுயராஜ்ய சட்ட சபைக்கும் எவ்வித வித்தியாசமும் கூறமாட்டேன். அத்துடன் அது என்னுடைய வாதத்துக்கு அவசியமுமில்லை.

இரண்டாவதாக, சட்டசபை அங்கத்தினர்கள் வாக்காளர்களின் வழி காட்டிகள் என்று எண்ணுவது வெறும் பிரமையேயாகும். வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளைச் சட்ட சபைக்கு அனுப்புவது தங்களுக்கு வழி காட்டுவதற்காக வன்று. அதற்கு மாறாக அவர்கள் ஜனங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே சட்ட சபைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆதலால் சட்ட சபை அங்கத்தினர் ஊழியர்கள்; அவர்களை அனுப்பும் ஜனங்கள் எஜமானர்கள். ஆனால் நான் கூறும் பிரமைக்குக் காரணம் இப்போது நடைபெறும் சர்க்கார் முறையேயாகும். இந்தப் பிரமை நீங்கி விட்டால் இப்போது காணப்படும் அசங்கியமான போட்டிகள் எல்லாம் வெகுவாகக் குறைந்து போகும். சட்ட சபைக்குப் போகக் கடமைப் பட்டவர்களாகச் சிலர் இருப்பார்கள். அவர்களே தாம் ஜனங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சட்ட சபைக்குச் செல்வார்கள். இன்று போகிறவர்கள் சுயராஜ்யம் பெறுவதற்காகப் போராடவே போகிறார்கள். ஆனால் அந்த விஷயத்திலும் அங்கே போய் அதிகமாக எதுவும் சாதித்துவிட முடியாது என்பதை இப்போது அநேகர் கண்டு கொண்டு வருகிறார்கள்.

சகோதரியின் வாதத்திலுள்ள மூன்றாவது பிழை, ஜனங்களுக்கு வழிகாட்ட ஏற்றவை சட்ட சபைகளே என்பதாகும்.

ஆனால் உலகத்தில் எங்கு பார்த்தாலும், சிறந்த வழிகாட்டிகளாய் இருப்பவர்கள் சட்டசபைகளுக்கு வெளியேயே இருப்பதைக் காணலாம். அப்படிக்கில்லை யென்றால் சகல அரசாங்கமும் நாறிப் போய்விடும். சட்டசபை என்பது ஒரு சிறிய சங்கம். அதனால் அதிலுள்ள வழிகாட்டிகளைவிட அதிகமான வழிகாட்டிகள் ஜன சமூகத்திலேயே இருக்கிறார்கள். சட்ட சபைகள் எல்லாம் சமூக வாழ்வாகிய சமுத்திரத்தில் ஒரு சிறு ஜலத்துளி மாத்திரமேயாகும்.

## பஞ்சமும் ஜனன விகிதமும்

இந்தியா ஆபீஸ் வைத்திய போர்டின் தலைவராயிருக்கும் மேஜர் ஜெனரல் ஸர் ஜான் மாக்கா என்பவர் கீழ்கண்டவிதமாகப் பேசியிருப்பதாகவும் அவருடைய கூற்றில் காணப்படும் முக்கியமான பிரச்னையைப்பற்றி நான் அபிப்பிராயம் கூறவேண்டும் என்பதாகவும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஸர். ஜான் மாக்கா கூறியது :—

"இந்தியாவில் பஞ்சங்கள் வந்து கொண்டேதானிருக்கும். இன்றுகூட இடையறாத பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவில் ஜனன விகிதத்தைக் குறைப்பதற்காக ஏதேனும் செய்தாலன்றி தேசம் நாசமாகத்தான் போகும்."

இந்த மாதிரியிலும் வேறு சில மாதிரியிலும் இந்தியாவில் பஞ்சங்கள் உண்டாவதற்கான காரணங்களைக் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது இந்த துர் அதிர்ஷ்டம் பிடித்த நாட்டில் உண்டாகும் பஞ்சங்களின் உண்மையான காரணத்தைக் காண வொட்டாதபடி நம்மைச் செய்வதேயாகும். நான் முன்னாலும் சொல்லியிருக்கிறேன், இப்போதும் சொல்லுகிறேன். இந்தியாவில் உண்டாகும் பஞ்சங்கள் இயற்கை கொண்டுவந்து நம்முடைய தலைமேற் போட்டுவிட்டவையல்ல — நம்மை ஆள்பவர்கள், தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அலட்சியமாகவோ சிருஷ்டித்தவைகளேயாகும். தண்ணீர்த்தட்டு உண்டாகாமல் தடுப்பது மனிதனுடைய முயற்சிக்கும் சாமர்த்தியத்துக்கும் அப்பாற்பட்டதன்று. மற்ற தேசத்தார் எல்லோரும் தடுத்து விட்டனர், இந்தியாவில் மட்டுந்தான் எவ்வித முயற்சியும் செய்யப்படக் காணோம்.

ஜனன விகிதம் அதிகரிக்கிறது என்ற பூச்சாண்டி புதியதன்று. அடிக்கடி அதைக் கொண்டு வந்து அச்சுறுத்துகிறார்கள். ஆனால் ஜனத்தொகைப் பெருக்கத்தை வெறுத்துத் தள்ள வேண்டிய ஒரு கேடாகக் கருதலாகாது. நாம் நீக்கவேண்டிய கேடுகளில் முதல் தரமான கேடு ஜனத்தொகை பெருகுவதைத் செயற்கை முறைகளால் தடுப்பதே யாகும். அவைகளை அனுஷ்டிக்க ஆரம்பித்துவிட்

டால் நம்முடைய மனிதஜாதி தாழ்வே அடையும். ஆனால் நல்ல வேளையாக ஜனங்கள் எல்லோரும் அதை அனுஷ்டிக்கப் போவதில்லை. நாம் விரும்பாத அளவு அதிகமான குழந்தைகள் உண்டாவதற்குக் காரணம் காமமாகிய சாபமேயாகும். அந்தச் சாபத்தை நீக்கும் மருந்து பஞ்சமும் நோயும் போருமாகிய சாபங்களே. இந்த மூன்றுவித சாபங்களும் ஏற்படாமலிருக்க வேண்டுகிறேன். புலனடக்கம் என்னும் சமய சஞ்சீவியை உபயோகித்து வேண்டாத குழந்தைகளைப் பெறும் சாபத்தை விலக்குவதேயாகும். இப்பொழுதுகூட, உள்ளதை உள்ளபடி அறியக் கூடியவர்கள் செயற்கை முறைகளின் தீமைகளை உணர்ந்து வருகிறார்கள். முயல்களைப்போலக் குழந்தைகளைப் பெற்றுத் தள்ளுவதை நிறுத்த வேண்டியது தான். ஆனால் ஒரு தீமையை விலக்கப்போய் ஒன்பது தீமைகளை வரும்படி செய்துவிடக்கூடாது. அதை மனித ஜாதியை உயர்த்தக்கூடிய முறைகள் மூலமாகவே தடுக்க வேண்டும். அதாவது வாழ்வில் சகல துறைகளையும் முறைப்படுத்தக் கூடிய வண்ணம் சரியான கல்வியைப் பரப்பவேண்டும். ஒரு சாபத்தைப் போக்க வேண்டுமானால் அத்துடன் சேர்ந்து அநேக சாபங்களையும் போக்கவேண்டியது அவசியமாகும். மலையில் ஏறவேண்டிய பாதை என்று உயர்வு அடையக்கூடிய பாதை எதையும் தள்ளிவிடக்கூடாது மனிதன் உயர்வு அடைய வேண்டுமானால் நாளுக்கு நாள் அதிகமாகக் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதாகவே ஏற்படும். அதை வரவேற்க வேண்டுமேயன்றி அஞ்சிவிடலாகாது.

## அழகு எது?

காந்தியடிகள் பம்பாயிலுள்ள பிர்லா மாளிகைத் தோட்டத்தில் பயிர் செய்திருக்கும் புஷ்பப் பாத்திகளை அழித்து அவைகளில் காய்கறிகளைப் பயிர் செய்யுமாறு திரு. ராமேஸ்வர்தாஸ் பிர்லாவிடம் கூறினார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அகாதா ஹாரிஸன் அம்மையார்—“அப்படியானால் கொஞ்ச இடத்தில் கூடப் புஷ்பங்களை உண்டாக்க வேண்டாம் என்று கூறுகிறீர்கள்? உடம்புக்கு உணவைப் போலவே ஆன்மாவுக்கு அழகு தேவையல்லவா?” என்று கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள் :—

“அப்படிச் சொல்லமாட்டேன். காய்கறிகளின் நிறம் அழகாயிருக்க வில்லையோ? மாசுமறுவற்ற வானம் எவ்வளவு அழகாயிருக்கின்றது! அதெல்லாம் உங்களுக்கு வேண்டாம். நீங்கள் வானவில் காட்டும் நிறங்களையே விரும்புகின்றீர்கள். ஆனால் அதெல்லாம் கண்ணை ஏமாற்றும் இந்திரஜாலமாயிற்றே. அழகாயிருப்பவை உபயோகமாயிருக்க வேண்டியதில்லை என்றும் உபயோகமாயிருப்பவை அழகாயிருக்க முடியாது என்றும் நமக்குக்

கற்பித்து வருகிறார்கள். அது தவறு. உபயோகமாயிருப்பவை களும் அழகாயிருக்க முடியும் என்பதை உங்கட்குக் காட்ட விரும்புகின்றேன்''

அந்தப்படியே புஷ்பங்கள் வளர்ந்த இடங்களில் காய்கறிகள் பயிர் செய்யப்பெற்றன. யாருடைய அழகுணர்ச்சியும் அதனால் பங்கம் அடைந்துவிடவில்லை.

## வனஸ்பதியும் நெய்யும்

ஸர்தார் ஸர் தத்தார் ஸிங் நம்முடைய நாட்டிலுள்ள பசுக்களின் சம்ரட்சணைக்காகப் பெரிதும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். பசு என்பதில் எருமையும் அடங்கும். ஆயினும் பசுவைப் பிரமாதமாக நினைத்தால்தான் நாம் வாழ்வோம், அதைவிட்டு எருமையைப் பிரமாதமாக நினைத்துவிட்டால் அதுவும் நாமும் இறக்கவேண்டியது தான். இது எப்படி என்று அறிய விரும்புகிறவர்கள் திரு. சட்டிஷ் சந்திரகுப்தா எழுதியுள்ள "இந்தியப் பசு" என்னும் சிறந்த நூலைப் படிக்கவேண்டும்.

தாவர நெய் என்று சொல்லப்படும் " வனஸ்பதி " என்பது பசு நெய்யைத் துரத்த வந்திருப்பதைக் குறித்து மட்டுமே நான் இப்போது எழுத விரும்புகின்றேன். நெய் என்னும் பதம் மிருகத்தால் கிடைப்பதற்கே உரியதாகும். அதனால் தாவர நெய் என்று யோசியாமல் கூறுவது தவறு. தாவரங்களுக்கும் நெய்க்கும் சம்பந்தம் கிடையாது.

1937ம் வருஷத்தில் 26 ஆயிரம் டன்னாகவும் 1945ம் வருஷத்தில் 137 ஆயிரம் டன்னாகவும் வனஸ்பதி விற்பனையாயிற்று. அதாவது ஒரு வருஷ காலத்தில் நாலு மடங்கு கூடியிருக்கிறது. இப்படி வனஸ்பதி உற்பத்தி கூடியதால் நெய் உற்பத்தி குறைந்துவிட்டது. இது சம்பந்தமான விஷயங்களை எல்லாம் அறிய விரும்புகிறவர்கள் ஸர்தார் தத்தார் சிங் தயாரித்துள்ள அறிக்கையை வார்தாவிலுள்ள கோசேவாசங்கத்திடமிருந்து தருவித்து வாசிக்கவேண்டும்.

அவருடைய முடிவுகள் வருமாறு:—

1. வனஸ்பதியானது நெய்க்குச் சமானமான உணவாகாது. அதை உடம்பு எளிதில் ஜீரணித்துக் கொள்ள முடியாது. அதில் ஜீவ சத்துக்களும் கிடையா.

2. அது நெய் போலவே தோன்றுவதாலும் மணப்பதாலும் அதை உண்மையான நெய்யுடன் கலந்தும் கலவாமலும் உண்மையான நெய் என்று கூறி ஏமாற்ற இடமுண்டாகிறது.

3. வனஸ்பதி வியாபாரத்தில் அதிக லாபம் கிடைப்பதாக இருப்பதால் 1937ல் 26 ஆயிரம் டன் உற்பத்தி 1943ல் 105 ஆயிரம்

டன் உற்பத்தியாக ஏறிவிட்டது. கூடிய சீக்கிரத்தில் 200 ஆயிரம் டன் உற்பத்தி செய்ய யோசனை நடந்துகொண் டிருக்கிறது.

4. நெய் உற்பத்தி இந்தியாவிலுள்ள கிராமக் கைத்தொழில் களில் தலைமையானதாகும். ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் விலையுள்ள 2½ கோடி மணங்கு நெய் உற்பத்தியாகிறது.

2. நெய் உற்பத்தியின் அழிவு விவசாயிகளுடைய நலத்தைப் பாதிப்பதோடு நாட்டின் செல்வச் செழிப்புக்கு அஸ்திவாரமாக யுள்ள கால் நடைப் பெருக்கத்தையும் பாதித்துவிடும்.

இந்தக் கஷ்டங்களை நீக்குவதற்காக அவர் கூறும் யோசனை கள் :—

1. எந்தக் காரணத்திற்கேனும் சர்க்கார் வனஸ்பதி உற்பத் தியைத் தடுக்கமுடியாது போனால், அதை உடனே கட்டுப்படுத்த வாவது செய்யவேண்டும்.

2. வனஸ்பதியை உற்பத்தி செய்பவரும், விற்பவரும் லைசன்ஸ் பெற்றே தங்கள் தொழிலை நடத்தும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அத்தகையோர் தங்கள் வியாபார ஸ்தலங் களில் உண்மையான நெய்யை வைத்துக் கொள்ளவுங் கூடாது, விற்கவும் கூடாது.

3. இந்த நாட்டில் உற்பத்தியாகும் வனஸ்பதிக்கு உற்பத்தி செய்யுமிடத்திலும், இறக்குமதியாகும் வனஸ்பதிக்கு இறக்குமதி யாகும் துறைமுகத்திலும் நிறம் ஊட்டப்படவேண்டும். உற்பத்தி செய்வோர் வனஸ்பதியுடன் 10 சதமான நல்லெண்ணெய்யைக் கலக்க வேண்டும். அப்படிச் செய்தால் அப்படி எண்ணெய் சேர்ந்த வனஸ்பதியுடன் உண்மையான நெய்யைச் சேர்த்திருந் தால் அதை எளிதில் கண்டுபிடித்துவிட முடியும். நல்லெண்ணெய் கலந்திருப்பதை ரஸாயன முறையில் வெகு எளிதாகத் தெரிந்து கொள்ள இயலும்.

4. வனஸ்பதியை உண்மையான நெய்போல் இருக்கும்படி செய்வதற்காகச் சில ரஸாயன வஸ்துக்கள் சேர்க்கப் படுவதைத் தடுக்கவேண்டும்.

5. வனஸ்பதியில் பலகாரம் செய்து விற்பவர்கள் அப்படிச் செய்திருப்பதாக அட்டையில் எழுதித் தொங்கவிட வேண்டும். அப்படித் தொங்கவிடாத இடங்களில் வனஸ்பதி காணப்பட்டால் தண்டனை பெறும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்தால் வனஸ்பதியில் செய்த அல்வா முதலிய மிட்டாய்களை நெய்யில் செய்ததாகச் சொல்லி ஏமாற்றுவது நின்றுபோகும்.

6. வனஸ்பதியைத் "தாவர நெய்" "வனஸ்பதி நெய்" என்பன போன்ற பெயர்கள் வைத்து நெய் என்று நம்பும்படி யாகச் செய்து ஏமாற்றுவதைத் தடுக்க வேண்டும்.

7. நெய்யைப்போலவே வனஸ்பதியையும் "பாக்" செய்யக் கூடாது. வனஸ்பதி டப்பாவின் மீது "வனஸ்பதி" என்று தெளிவாக எழுத வேண்டும்.

பசுவை வணங்குவோருடைய பேராசையினுல்தான் இந்தக் கேடு உண்டாயிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. வனஸ்பதி கொஞ்சம்கூட வேண்டியதில்லை. எண்ணெய்களிலுள்ள தீய குணங்களைப் போக்கிச் சுத்தம் செய்யலாம். ஆனால் அவற்றைக் கட்டியாக உறையச் செய்வதும் நெய்போல் தோன்றும்படி செய்வதும் அவசியமில்லை. உண்மையாக நடக்கும் உற்பத்தியாளர் இத்தகைய யதார்த்து வேலையில் இறங்கமாட்டார். ஆனால் இப்பொழுது வனஸ்பதி இல்லாத கடையே கிடையாது. கள்ள நாணயம் செய்பவரைக் கடுமையாகத் தண்டிக்கிருர்கள். அப்படி இருக்கும்பொழுது கள்ள நெய்யை விற்பவரைத் தண்டிக்காமல் விட்டுவிடலாமா? நெய்யானது நாணயத்தைவிடக்கூட அதிகமாகப் போற்ற வேண்டிய பொருளல்லவா? ஆனால் இந்த நிலைமையை மாற்றுவதற்குள்ள சிறந்த மார்க்கம் தேச மக்களின் தேக சுகத்தைச் சிதைத்தேனும் சீக்கிரமாகச் செல்வம் தேடிவிட வேண்டும் என்று ஆத்திரப்படும் வியாபாரிகள் உண்மையாக நடப்பதுதான்.

## ஒரு மந்திரியின் துக்கம்

டாக்டர் கட்ஜு கீழ்கண்ட குறிப்பை அனுப்பி வைத்திருக்கிருர் :—

"இந்தியாவின் பல பாகங்களிலும் கார்கால மகசூல் அற்பமாகவே கிடைத்திருப்பதால் தேசத்தில் அபாயகரமான உணவுப் பஞ்சநிலைமை ஏற்படும் என்ற பயம் எங்கும் பரவி யிருக்கின்றது. ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி எல்லோர்க்கும் சமமான உணவு கிடைக்கும்படி செய்வதற்காக ஐக்கிய மகாணத்தில் அநேக பட்டினங்களில் உணவுப் பங்கீட்டுமுறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பங்கீட்டுமுறை ஏற்படுத்தப் பட்டால் அது ஏற்படுத்தப்படும் இடங்களிலுள்ள ஜனங்களுக்கு உணவு கிடைக்கும்படி செய்யவேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு உண்டாகி விடுகின்றது. உணவுப் பஞ்சத்தைப் பற்றிய பயம் அதிகமா யிருப்பதால் ஐக்கிய மகாணத்தில் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு குறைவாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறைவாக—அதாவது 6 சட்டக் தானியம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆறு சட்டக் தானியம் என்பது 2 சட்டக் கோதுமை, 2 சட்டக் அரிசி, 2 சட்டக் கலப்பு ஆட்டாமாவு ஆகும். பொதுவாக ஜனங்கள் கலப்பு ஆட்டாமாவை விரும்புவதில்லை. அதுடன் உணவின் அளவை இதற்கு அதிகமாகக் குறைப்பதும் முடியாத காரியம். பட்டினத்து ஜனங்களுக்கு உணவு கொடுப்பதற்காக

உணவு கிராமங்களிலிருந்து இடைவிடாமல் வந்துகொண்டிருக்க வேண்டும். இப்படி இடைவிடாமல் வந்து கொண்டிருப்பதற்காக எந்த ஜில்லாவில் தேவைக்கு அதிகமான உணவு இருக்கிறதோ அந்த ஜில்லாவிலுள்ள தான்யங்களை கட்டாயமாகச் சர்க்கார் எடுத்துக் கொள்வது என்ற முறையைக் கையாளும்படி மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு யோசனை கூறியிருக்கிறார்கள். இந்தக் கட்டாய தான்ய எடுப்பு முறையானது பொது ஜனங்களுடைய மனதில் கலக்கத்தை உண்டுபண்ணி வருகிறது. சர்க்கார் விதித்துள்ள 'நிர்ணய விலை' நிரம்பக் குறைவாகயிருப்பதாயும் உயர்த்தவேண்டும் என்பதாயும் கூறப்படுகிறது. இதற்குக் கூறக்கூடிய சமாதானம் விலை நிர்ணயம் செய்வது என்பது அகில இந்திய விஷயமாகும் என்பதும், அதனால் குறிப்பிட்ட மாகாணங்களில் விலையை உயர்த்துவது அகில இந்திய விலை அமைப்பைப் பாதிக்கும் என்பதுமே யாகும். அத்துடன் ஐக்கிய மாகாணத்தில் 40 சேர் கொண்ட ஒரு மணங்கு ரூ. 10-4-0 என்று நிர்ணயம் செய்திருக்கும் விலையானது உண்மையில் குறைந்த விலையாகாது. அது விவசாயிகளுக்குப் போதுமான அளவு லாபம் தரக்கூடியதாகவும் விவசாயச் செலவு உயர்ந்தாலும் போதுமான அளவாகவுமே இருக்கிறது. யுத்தத்திற்கு முந்தின காலங்களில் கோதுமை ரூபாய்க்கு 13 சேராக விற்று வந்தது. இப்பொழுது சர்க்கார் நிர்ணய விலை 4 சேர். போதுமான உணவு கிடையாது என்ற பயத்தால் சுயநலமிகள் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அதிகப்படியான விலை கொடுத்து வாங்கக்கூடிய 'கள்ள மார்க்கட்' ஏற்பட வதுவாயிருக்கிறது. விவசாயிகள் மட்டும் பட்டணங்களில் வசிப்பவர்களையும் கிராமங்களில் நிலமில்லாதவர்களையும் தங்கள் சகோதர சகோதரிகளாகப் பாவித்து அவர்களுக்குத் தங்களாலியன்ற அளவு உணவு கொடுத்துப் போஷிப்பது தேச பக்தியும் கடமையுமாகும் என்று உணர்வார்களானால் கட்டாய தான்ய எடுப்பு முறையைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்படாது. விவசாயிதான் உண்மையிலேயே எல்லோருடைய "அன்னதாதா" ஆவார். ஆதலால் தாங்கள் அவரிடம் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தான்யங்களைச் சேர்த்துவையாதிருக்கும்படியும் கள்ளத்தனமாக விற்காதிருக்கும்படியும் எவ்வளவு அதிகமாக முடியுமோ அவ்வளவு அதிகமாகச் சர்க்காரிடம் விற்கும்படியும் வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் அர்த்தஸித்தமாக நடந்தால் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் சமமாகவும் நியாயமாகவும் உணவு கிடைக்கும், பஞ்சமும் பட்டினியும் ஒழியும். தங்களுக்குத் தேச முழுவதிலும் செல்வாக்கிருப்பதால் தாங்கள் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். பட்டினங்களில் போதுமான உணவு கிடைப்பதற்காகப் பல திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டன. எந்தத் திட்டமானாலும் விவசாயி தான்யத்தைக் கொடுக்க வேண்டியதாகவே ஏற்படுகின்றது. கிராமங்களிலும் பட்டினங்களிலும் உணவு கிடைத்தா

லன்றி எல்லாவிதமான குழப்பங்களும் உண்டாகும். நாங்கள் ஐக்கிய மாகாணத்தில் அதிகமான உணவு உண்டாக்கவும் அதிகமான காய் கறிகள் உண்டாக்கவும் திட்டப்போட்டு வேலை செய்துவருகிறோம்.

தாங்கள் கூறிய யோசனைப்படியெல்லாம் நடத்தி வருகிறோம். சர்க்கார் கட்டிடங்களைச் சேர்ந்த நிலங்களை எல்லாம் உழுது பயிர் செய்யும்படி கட்டளை பிறப்பித்திருக்கிறோம். மற்றவர்களுடைய தோட்டங்களைப் பயிர் செய்யும் விஷயத்தில் அவர்களுக்கு வேண்டிய யோசனை கூறவும் இலவசமாக விதைகள் கொடுக்கவும் வாய்க்கால்களிலிருந்து ஜலம் கொண்டுபோக அனுமதி தரவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். கிணறுகள் வெட்டுவதற்கும் வசதிகள் செய்து கொடுக்கிறோம். இவ்வளவெல்லாம் செய்தாலும் பொது ஜனங்களுடைய ஒத்துழைப்பில்லாவிடில் சிறிதளவு கூட நன்மை உண்டாகமாட்டாது. விவசாயிகள் தங்களால் இயன்ற அளவு தான்யத்தை வழங்கும் அன்ன தாதா நிலைமையிலுள்ள ஒத்துழைப்பே நாம் விரும்பும் ஒத்துழைப்பாகும்.”

டாக்டர் கட்ஜூ அனுப்பியுள்ள இந்தக் குறிப்பு விவசாயிகளும் அவர்களுக்கு வழி காட்டுபவர்களும் பட்டினத்து ஜனங்களும் வெகு கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டியதாகும். வரவிருக்கும் அபாய நிலைமையை நாம் நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் அதுவே அபாயம்போல் தோன்றிய ஆசீர்வாதமாக அமைந்துவிடும். அப்படிச் செய்யாவிட்டாலோ அது சாபமாகவந்து சாபமாகவே இருந்துவிடும்.

டாக்டர் கட்ஜூ ஒரு பொறுப்பு வாய்ந்த மந்திரி நிலைமையில் எழுதுகிறார். அதனால் ஜனங்கள் அவரை ஆக்கவும் செய்யலாம், அழிக்கவும் செய்யலாம். அவரை நீக்கிவிட்டு அவரினும் திறமையான ஒருவரை நியமிக்கலாம். ஆனால் ஜனங்கள் நியமித்த மந்திரிகள், ஜனங்களின் ஊழியர்களாக வேலை பார்க்குமட்டும் ஜனங்கள் அவர்களுடைய யோசனைகளை நிறைவேற்றியே ஆகவேண்டும். சட்டத்தை மீறுவதெல்லாம் சத்தியாக்ரகமாகிவிடாது. சத்தியாக்கிரகத்துக்கு மாறாக துராக்கிரகமாகவே ஆகக்கூடும்.

## வருந்தத்தக்கது

வெளி நாட்டிலிருந்து வரும் இறக்குமதிகளை நம்பியிருப்பதோ ஆதரிப்பதோ முற்றிலும் தவறான கொள்கை என்று திரு. ஜே. ஸி. குமரப்பா “கிராம உத்தியோகப் பத்திரிகை”யில் எழுதியிருக்கிறார். ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் மழை பெய்யாததாலும், பஞ்சாபிலும் எல்லைப்புறத்திலும் மூடுபனி பெய்துவிட்டதாலும் சர்க்கரை எதிர்பார்த்த அளவு கிடையாதாகையால் காடுகளிலுள்ள ஈச்ச மரங்களிலிருந்து “பதநீர்” இறக்கிக்

"கருப்புக்கட்டி" யும் சீனியும் தயாரிக்க வேண்டும் என்று யோசனை கூறுகிறார்.

அத்யாவசியமாக வேண்டிய மண்ணெண்ணெயை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக தாவர நெய்களை உற்பத்தி செய்யலாம் என்கிறார். இறக்குமதிகளை அனுமதித்தால் அவற்றின் விலையைக் கொடுப்பதற்காக, நாம் உண்டாக்கும் பொருள்களில் சிலவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டிவரும். அது காலக்கிரமத்தில் அதிகமான கஷ்டத்தையே தரும்.

சர்க்கார் ஏற்படுத்தியுள்ள "விவசாய ஆராய்ச்சி சபை" யின் உப தலைவராயுள்ள ஸர் ஹெர்பர்ட் ஸ்டீவார்ட் என்பவர் விர்ஜினியா சிகரெட்டுப் புகையிலையை பீகாரில் அபிவிருத்தி செய்வதற்காகத் திட்டம் போட்டுள்ள சூழ்ச்சியையும் கவனிக்குமாறு திரு. குமரப்பா கூறுகிறார்.

அந்தத் திட்டத்தின்படி சர்க்கார், அநேக இடங்களில் புகையிலை ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்தப் போகிறார்கள். "ஏகாதிபத்தியப் புகையிலைக் கம்பெனியார்" புகையிலை விவசாயத்தைக் கற்று வருவதற்காக வருடந்தோறும் 600 சவரன் வீதம் உபகாரச் சம்பளம் கொடுத்து இரண்டு மாணவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பிவைக்கப் போகிறார்கள். இந்தச் சமயத்தில் சர்க்காரின் கடமை, புகையிலை ஆராய்ச்சியில் காலத்தையும் பணத்தையும் விரயம் செய்யாமல், உணவை உண்டாக்குவதற்குக் கிடைக்கக் கூடிய நிலம் முழுவதையும் பயன் படுத்துவதற்காக உபயோகிப்பதேயாகும். ஆனால் சர்க்கார் ஆராய்ச்சிச் சங்கங்கள் புகையிலையைப் பற்றியும், யந்திர சாலைகளுக்கு ஏற்ற நீண்ட இழைப் பருத்தி, திண்ணமான தோலுள்ள கரும்பு போன்ற பொருள்களைப் பற்றியும், ஏற்றுமதிக்கு ஏற்ற நிலக் கடலையைப் பற்றியும் "இந்தியா லிமிடெட்" என்று பெயரிட்டுக்கொண்டு ஏமாற்றிவரும் அன்னிய வியாபார நிலயங்களை ஆதரிப்பது பற்றியுமே சிந்தனை செய்யக் கூடியவைகளாக இருக்கின்றன.

## பசு மடங்கள்

சர்தார் ஸர் தத்தார் ஸிங் வகுத்துள்ள திட்டத்தின் சுருக்கம் வருமாறு :—

"நாட்டில் சுமார் 3000 பசு மடங்களும் அவற்றில் சுமார் 6 லட்சம் கால் நடைகளும் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனங்கள் இந்திய சர்க்கார் வகுத்துள்ள முறைகளை அனுஷ்டித்துத் தங்கள் உபஸ்தாபனங்களை அபிவிர்த்தி செய்வதோடு இப்பொழுது பஞ்ச நிலைமை ஏற்பட்டிருப்பதால் அதிகமாகப் பால் உற்பத்தி செய்து நாட்டுக்கு உதவி செய்ய முன் வந்திருக்கின்றன. நல்ல விதமாக நடைபெறும் பசு மடங்களும்

கால்நடை அனாதைச் சாலைகளும் 1500-க்குக் குறையா என்று கூறலாம். கால் நடைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம் :—

(1) நல்ல கறவை மிருகங்கள் (20 சதமானம்) 1,20,000

(2) மத்திபமானவை (20 சதமானம்) 1,20,000

(3) வயதானவை (60 சதமானம்) 3,60,000

முதல் இரண்டு இனங்களையும் சேர்ந்தவைகள் தான் பால் உற்பத்திக்கும் கால்நடை உற்பத்திக்கும் ஏற்றவைகளாகும். அவற்றுள் பாதி கறப்பவைகளாகவும், பாதி கறவை மாறியவைகளாகவும் இருக்கும்.

இப்பொழுது கொடுப்பதைவிட அதிகமாகத் தீனி கொடுத்து நல்லவிதமாகக் கவனித்து வந்தால் தினந்தோறும் 3000 மணங்குப் பால் அதிகமாகக் கறக்கும்படி செய்யலாம்.

இதை வெகு சீக்கிரத்தில் செய்துமுடிக்க வேண்டுமானால் கீழ்க்கண்ட திட்டம் அவசியமாகும் :—

(1) வயதான மாடுகளை எல்லாம் கறவை மாடுகளினின்றும் பிரித்து, காட்டுக்கோ கிராமங்களுக்கோ அனுப்பிவிட்டால் கறவை மாடுகள் நிற்பதற்குப் போதிய இடமும் கிடைக்கும். அவைகளுக்கு அதிகமான தீனியும் கிடைக்கும். வயதாகி உபயோகமற்ற கால்நடைகளை கர்ப்பம் உண்டாக விடலாகாது. அவைகளையும் கர்ப்பமாயுள்ள மிருகங்களையும் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு கமிட்டி அமைக்க வேண்டும்.

2. இந்தக் காரியம் நடைபெறுவதற்காகக் கால்நடைகளைக் கீழ்க்கண்ட விதமாகப் பிரித்தல் வேண்டும் :—

(அ) கறவை மாடுகளையும் கன்று போடும் பருவத்திலுள்ள மாடுகளையும் பசு மடங்களில் வைத்துப் பராமரிக்க வேண்டும்.

(ஆ) கறவை நின்று கர்ப்பமாகக் கூடிய கால் நடைகளை பசுமடத்துக்குச் சொந்தமாகப் பக்கத்தில் நிலங்கள் இருந்தால் அவைகளிலும், அப்படியில்லையானால் கன்று ஈன்றதும் கொண்டு வரக்கூடிய தூரத்திலுள்ள இடங்களிலும் வைத்துக் காப்பாற்ற வேண்டும். பசு மடங்களிலுள்ள கால்நடைகள் கறவை நின்றதும் அந்த இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. இப்படிக் கறவை மாடுகளை மட்டும் பசு மடங்களில் வைத்துக்கொள்வதாயிருந்தால், அங்கே சரியான தீனி போடவும் நன்றாகக் கவனித்துக்கொள்ளவும் நல்ல இடத்தில் நிறுத்தவும் முடியும்.

4. இத்தகைய ஸ்தாபனங்களுக்கு உதவி செய்யவும் உற்சாக மூட்டவும் சர்க்கார், அந்த ஸ்தாபனங்கள் பஞ்சத்தால் பராமரிக்க முடியாது தவிக்கிறவர்களிடமிருந்து கறவை மிருகங்களை வாங்கிக் கவனித்துக் கொள்ள ஒப்புக் கொண்டு, பால் உற்பத்தியை அதிகரிக்க ஏற்றுக் கொண்டால், அவைகட்கு புண்ணாக்கு முதலிய தீனிகளைப் பாதி விலைக்குக் கொடுத்து உதவலாம். அந்தப் பசு

மடங்களுக்குப் பக்கத்திலுள்ள ஏழை ஜனங்களுக்காகச் சர்க்கார் அவைகளில் உற்பத்தியாகும் பாலில் மூன்றில் ஒரு பங்கை வாங்கிக் கொள்ளவும் செய்யலாம்.

5. மனிதர் உணவாக உபயோகியாத புண்ணாக்கு, பருத்தி விதை போன்றவைகளையே கால்நடைகளுக்குத் தீனியாக உபயோகிக்கும்படி செய்ய வேண்டும்.

6. உணவுப் பொருள்களின் கழிவுகளை மனிதர் உண்டால் அவர்களுக்குக் கிடைக்கும் போஷாக்கை விட அந்தக் கழிவுகளைக் கால் நடைகளுக்குக் கொடுத்து அதனால் உற்பத்தியாகும் அதிகப் பாலால் கிடைக்கும் போஷாக்கு அதிகமாயிருக்கும். இந்த மாதிரிச் செய்வதால் இரண்டு விதமான நன்மைகள் உண்டாகும். மனிதர்க்கு வேண்டிய உணவும் உற்பத்தியாகும்; கால் நடைகளும் பஞ்ச காலத்தில் பட்டினி யில்லாமலிருக்கும்.

7. இந்தப் பசுமடங்களுக்கு வேண்டிய புண்ணாக்கு முதலிய தீனிப்பொருள்கள் எளிதில் கிடைப்பதற்கான போக்கு வரத்து வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும். அதற்காக இந்த ஸ்தாபனங்களில் உள்ள கால்நடைகள் எத்தனை, இவைகளுக்குத் தேவையான தீனி எவ்வளவு என்று உடனே கணக்கு எடுக்கவேண்டும். தீனி அதிகமாயுள்ள இடங்களிலிருந்து தீனி குறைவாகவுள்ள இடங்களுக்கு முன்கூட்டியே வேண்டிய அளவு தீனியைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடவேண்டும். பசுமட அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களை இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்கவேண்டியவர்களாதலால் அவர்களைக் கொண்டு இந்தக் காரியத்தை முன்கூட்டியே செய்துகொள்ள வேண்டும்."

சர்தார் ஒவ்வொரு மாகாணத்திலும் பசுமட அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும், ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பொலி காளைகளை வைத்திருக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று யோசனை கூறுகிறார். இந்தத் திட்டம் சரியான பலனைத் தரவேண்டுமானால் சர்க்காரும் ஜனங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கூறுவது முற்றிலும் சரியே. பசுமடங்களும் பசு சம்ரட்சணை சங்கங்களும் ஒத்துழைக்கும் என்பதில் அவர்க்குச் சந்தேகமில்லை.

கால்நடையின் நண்பர் மற்றொருவர் கூறுவதாவது :—

"பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ள சில பிரதேசங்களில் கால் நடைகளுக்கு வேண்டிய தீனி கிடைக்காமல் கால்நடைப் பஞ்சமுண்டாகுமாதலால் கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக இரண்டொரு யோசனைகளைக் கூற விரும்புகிறேன். உலகத்தில் "குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்" என்ற இயக்கங்கள் நடைபெறுகின்றன. அதுபோல் நாமும் இந்தியாவில் "கால்நடைகளைக் காப்பாற்றுங்கள்" என்ற இயக்கங்களைத் தோற்றுவித்தால் என்ன? நம்முடைய நல்ல கால்நடைகளில் அநேகம் யுத்தகாலத்தில் கொல்லப்பட்டுப் போன விஷயம் அறிவீர்கள். அப்படித்

தான் போயிற்றே, அது போதாதென்று பட்டினியாலும் போய் விடப் பார்த்துக்கொண் டிருக்கலாமா?"

ஆதலால் புல் முளைத்துள்ள நிலங்களுடைய பணக்காரர்கள் ஏழைகளுடைய பசுக்களை அந்த நிலங்களில் மேய்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். இதனால் பெருத்த நன்மை உண்டாகாது. எனினும் கவனிக்கவேண்டிய விஷயமாகவே கருதுகிறேன்.

"பஞ்சகாலத்தில் வைத்து பராமரிக்கமுடியாதவர்கள் தங்கள் மாடுகளைக் கொண்டுவந்து விடுவதற்காகச் சர்க்கார் பசு மடங்களை அமைத்து, பஞ்சகாலம் போகுமட்டும் காப்பாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இலவசமாகச் செய்ய வேண்டுமா அல்லது ஏதேனும் சொற்பப் பணம் வாங்கிக் கொண்டு செய்ய வேண்டுமா என்ற விஷயம் சர்க்காரே பரிசீலனை செய்ய வேண்டியதாகும். சர்க்கார் மாடு வைத்திருப்பவர்க்குத் தனித் தனியாகத் தீனியை வினியோகிப்பதை விட மாடுகளை மொத்தமாக வைத்துத் தீனி போடுவதே சுலபமான காரியமாகும்."

## காந்தியடிகளின் பொதுவுடைமை

காந்தியடிகள் பொதுவுடைமைவாதிகளுடன் பேசும்பொழுது, தாமே அவர்களைவிடச் சிறந்த பொதுவுடைமை வாதியாகக் கூறிக் கொள்கிறார். இருவருடைய லட்சியமும் ஒன்றாகவே இருக்கிறது. ஆனால் அவர்கள் அதை அடைய உபயோகிக்கும் வழியும் சாதனமும் அடிப்படையான வித்தியாசம் உடையவனவாக இருக்கின்றன. அவர் சமூகத்தைப் பொய் மூலமும் பலாத்காரமூலமும் மாற்றுவதை விரும்பவில்லை. அந்த வழி இந்தியாவிலுள்ள கோடானு கோடி வாயில்லாப் பூச்சிகளுக்கு எவ்வித நன்மையும் தராது. ஆகா கான் மாளிகையில் கைதியா யிருந்தபொழுது அவர் பொதுவுடைமை நூல்களைப் படித்தார். அவர் விஞ்ஞான ரீதியாகச் சிந்திப்பவராதலால் பொதுவுடைமை குறித்து நண்பர்களிடமிருந்து அறிந்து கொண்டது அவர்க்குத் திருப்தி அளிக்கவில்லை. அதனால் மார்க்ஸ் எழுதிய "மூதல்" என்னும் நூலையும் இதர நூல்களையும் எங்கெல்ஸ், லெனின் ஸ்டாலின் ஆகியோர் எழுதிய நூல்களையும் படித்தார். எல்லாம் படித்தபின் தாம் ஸ்தாபிக்க விரும்பும் பொதுவுடைமையே உலகத்தில் துன்பத்தைப் போக்க வல்லது என்ற முடிவுக்கு வந்தார்.

அவருடைய ஆச்சிரமமும் அவருடைய மேற்பார்வையிலுள்ள ஸ்தாபனங்களும் "தேவைக்குத் தக்க கூலி—திறமைக்குத் தக்க வேலை" என்னும் விதியை அனுசரித்தே நடந்து வருகின்றன. அவை அஹிம்சையையும் இந்திய கிராம நிலைமையையும் ஆதாரமாகக் கொண்ட பொதுவுடைமையை அனுஷ்டித்துப் பார்க்கும்

ஸ்தாபனங்களாகவே இருந்து வருகின்றன. சேவா கிராமத்தி லுள்ளவர்கள் கிராமத்து ஜனங்கள் சம்மதத்தின் பேரிலேயே தங்கிவருவது என்ற விதியை அனுசரித்தே நடந்துவருகிறார்கள். சமீபத்தில் ஒரு கிராமவாசி ஆச்சிரமத்து மரங்களில் சிலவற்றை வெட்டிவிட்டார். மற்றொருவர் பணம் வாங்கிக்கொண்டு விட்டுக் கொடுத்த பாதையை மறுபடியும் தம் வசப்படுத்திக் கொண்டார். கோர்ட்டு மூலம் எதுவுஞ் செய்யாமல் ஆச்ரமவாசிகள் கிராமத்து ஜனங்களுக்குச் சேவை செய்யவே வந்திருப்பதால் கிராமத்து ஜனங்களுக்கு அவர்களுடைய சேவை தேவையில்லை யானால் அவர்கள் வேறுயிடம் போய்விடுவார்கள் என்று கிரா மத்தில் சொல்லமட்டுமே செய்யப்பட்டது. இதைக் கேட்டதும் கிராமத்து ஜனங்கள் அக்கிரமம் செய்பவர்களை ஒழுங்காக நடக்கு மாறு செய்துவிட்டார்கள்.

சபர்மதி ஆச்சிரமத்தில் பெண்கள் தனித் தனிச் சமையல் வைத்துக் கொள்ளாமல் எப்பொழுதும் ஒன்று சேர்ந்தே சமைத்து வந்தார்கள். அதுமட்டுமன்று, தங்கள் குழந்தைகளைப் பிறரிடம் விடவும் பிறர் குழந்தைகளைத் தங்களிடம் வைத்துக்கொள்ளவும் செய்தார்கள். இந்த விதமாகக் குடும்ப வாழ்க்கையைக் குலைக்கா மலே பெண்களுக்கு விடுதலை தேடப்பட்டது. இது குழப்பம் ஏற்படாமல் நடைபெறும் புரட்சியாகும்.

தாஸிமா சங்கத்தார் நடத்திவரும் பொதுச் சமையலில் நூறு பேருக்கு அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். அதைக் காந்தியடிகள் சமையல் அறை என்று மட்டுமே கூறுகிறார். யாரும் அதைக் கவனிப்பாரில்லை. பொதுவுடைமை வாதிகள் பொதுச் சமையல் என்று கூறுகிறார்கள். உடனே எல்லோரும் அப்படியா என்று கவனிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

மகாராஸில் நடந்த நிர்மாண ஊழியர் மகாநாட்டில் காந்தியடி களிடம் "பொருளாதார சமத்துவம் என்று கூறுகிறீர்களே, அதன் பொருள் யாது? சட்டம் மூலமாக தர்மகர்த்தா முறை ஏற்படுத்தவேண்டும் என்று கூறுகிறீர்களே, அதன் அர்த்தமும் யாது?" என்று கேட்டார்கள்.

காந்தியடிகள் கூறிய பதில்:—

"பொருளாதாரச் சமத்துவம் என்பதன் பொருள் எல் லோர்க்கும் சரிசமமான பொருள் கொடுப்பது என்பதன்று. எல்லோர்க்கும் இன்றியமையாத தேவைகளுக்குப் போதுமான பொருள் கொடுப்பது என்பதேயாகும்."

உதாரணமாகக் குளிர் காலத்தில் எனக்கு இரண்டு போர்வை தேவையாயிருக்கின்றன. ஆனால் என்னுடைய மகன் போலவே என்னுடன் இருந்துவரும் கனுகாந்திக்கு போர்வையே தேவை யில்லை. எனக்கு ஆட்டுப்பாலும் ஆரஞ்சுப் பழமும் வேண்டும். கனுவுக்குச் சாதாரணமான உணவு போதும். எனக்கு அவனிடம் பொறாமைதான். ஆனால் அதில் அர்த்தமில்லை. நான் 76-வயதுக் கிழ

வன், அவன் வாலிபன். அவனுக்குச் செலவாகிறதைவிட என்க்கு அதிகமாகச் செலவாகிறது. அதைக்கொண்டு எங்களுக்குள் பொருளாதார சமத்துவம் இல்லை என்று கூற முடியாது. எறும்பைவிட யானைக்கு ஆயிரம் மடங்கு அதிகமான உணவு தேவை. அது பொருளாதார சமத்துவமின்மை ஆகிவிடாது. அதனால் பொருளாதாரச் சமத்துவத்தின் உண்மையான பொருள் "தேவைக்குத் தக்க கூலி" என்பதேயாகும். அதுதான் மார்க்ஸின் கொள்கை. மனைவி மக்கள் உடையவனுக்குத் தேவையான அளவு மனைவி மக்கள் இல்லாதவன் கேட்டால் அது பொருளாதார சமத்துவத்துக்கு விரோதமாகும். பணக்காரனுக்குப் பாப்பரை விட அதிகமாகத் தேவை என்று சொல்லிப் பணக்காரன் ஏழைகளுக் கிடையே காணப்படும் வித்தியாசமும் நியாயமானதுதான் என்று வாதிக்க வேண்டாம். அது ஏமாற்று வித்தையும் என் வாதத்தைத் திரித்துக் கூறுவதுமாகும்.

பணக்காரன் ஏழைகளிடையே இன்று காணப்படும் வித்தியாசத்தைக் காணச் சகிக்கவில்லை. ஏழைக் கிராமவாசிகளை அன்னிய அரசாங்கமும் சொந்த தேச மக்களாகிய நகரவாசிகளும் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தக் கிராமவாசிகள் உணவை உற்பத்தி செய்தும் பட்டினி கிடக்கிறார்கள். பாலை உற்பத்தி செய்தும் பிள்ளைகளுக்குப் பால் கிடைப்பதில்லை. எல்லோர்க்கும் போதுமான போஷணையுள்ள உணவும், சுகாதாரமான வீடும், குழந்தைகளுக்குக் கல்வி வசதியும், வைத்திய வசதியும் தேவை. அவை கிடைப்பதுதான் பொருளாதாரச் சமத்துவம். வேறு எதுவும் வேண்டாம் என்று சொல்லவில்லை, அவைகளும் வேண்டியனதான். ஆனால் வாழ்வுக்கு இன்றியமையாத இவைகள் முதலில் கிடைக்கட்டும். பிறகு மற்றவைகளைக் கவனிப்போம். முதலில் வேண்டியவைகளையே முதலில் கவனிக்க வேண்டும்.

### தர்மகர்த்தா முறை

இப்பொழுது பணத்தைவைத்துக் கொண்டிருப்பவர்கள் ஏழை பணக்காரர் சண்டை வேண்டுமா அல்லது தாங்களாகவே தர்மகர்த்தர் ஸ்தாபனத்தில் இருந்து கொள்கிறார்களா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தர்மகர்த்தர்களாக இருக்கச் சம்மதித்தால் அவர்கள் பொருளை வைத்துக்கொண்டிருக்கவும் தமக்காகவின்றி தேச மக்களுக்காகப் பொருளை அபிவிர்த்தி செய்யவும் அனுமதிக்கப் படுவார்கள். அப்படிச் செய்தால் "சுரண்டல்" என்பது நடவாது. அவர்களுக்குச் சேவையின் தன்மைக்கும் அளவுக்கும் தக்கபடி சன்மானம வழங்கப்படும். அவர்களுடைய குழந்தைகள் தகுதியுடையவர்களாயிருந்தால்தான் அவர்களுக்குப் பிறகு தர்மகர்த்தர்களாக இருப்பார்கள்.

நாளைக்கு இந்தியா சுதந்திர நாடாய்விட்டால், சட்டப்படி தர்மகர்த்தர்களாக இருக்க விரும்புகிறீர்களா என்று முதலாளி

கள் எல்லோரிடமும் கேட்கப்படும். ஆனால் இந்த தர்மகர்த்தச் சட்டத்தைச் சட்ட சபை நிறைவேற்றி அவர்கள்மீது சுமத்தாது. ஜனங்கள் அதன் பொருளை நன்முக அறிந்துகொள்ள வேண்டும். சூழ்நிலை சரியாக இருக்கும்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்கள் அத்தகைய சட்டங்களைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும். அப்படிக் கீழிருந்து மேலே வந்தால் யாருக்கும் கஷ்டம் ஏற்படாது. முதலாளிகள் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள். அப்படிக்கின்றி மேலிருந்து வந்தால் அது வெறும் பாரமாகவே ஆகிவிடும், யாரும் லட்சியம்செய்ய மாட்டார்கள்.

### பொதுவுடைமைக்காரர்

கேள்வி :—பொருளாதாரச் சமத்துவம் அடைவதற்கு நீங்கள் கூறும் வழிக்கும் பொதுவுடைமை வாதிகள் கூறும் வழிக்கும் வித்தியாசம் யாது?

பதில் ;—பொருளாதாரச் சமத்துவம் உண்டாக்க இன்று ஒன்றும் செய்ய முடியாது என்று பொதுவுடைமை வாதிகள் கூறுகிருர்கள். அவர்கள் பிரசாரம் செய்தால் போதும் என்று சொல்லித் துவேஷத்தை உண்டாக்கவும் வளர்க்கவும் செய்கிருர்கள். அரசாங்கம் கைக்கு வரட்டும், சமத்துவத்தை அமல் நடத்துவோம் என்று கூறுகிருர்கள்.

ஆனால் அரசாங்கம் தன்னுடைய இஷ்டப்படி நடக்கும்படி ஜனங்களைக் கட்டாயப்படுத்தாமல், ஜனங்களுடைய இஷ்டப்படி நடக்க வேண்டும் என்பதே என்னுடைய திட்டம். நான் துவேஷத்தை அன்பால் வெல்லச்செய்து மனமாற்றம் உண்டாக்கும் அஹிம்சை மூலமே பொருளாதாரச் சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்வேன். நான் ஜனங்கள் எல்லோரையும் மனமாற்றம் செய்யும் வரை காத்திருக்கமாட்டேன். இன்றே என்னுடைய நிலைமையில் மாறுதல் செய்ய ஆரம்பித்து விடுவேன். நான் 50 மோட்டார்காருக்கும் 10 ஏக்கர் பூமிக்கும் சொந்தக்காரனுயிருந்தால் நான் எண்ணுகிறமாதிரியான பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது என்பது சொல்லாமலே விளங்கும். பொருளாதாரச் சமத்துவம் ஏற்படுத்த வேண்டுமானால், நான் என்னை எளியவனிலும் எளியவனுகச் செய்துகொள்ள வேண்டும். இதைச் செய்யவே 50 வருஷ காலமாக முயன்றுகொண்டு வருகிறேன். அதனால்தான் நான் பணக்காரர் தரும் கார்களையும் இதர வசதிகளையும் உபயோகித்தாலும் நானே தான் பிரதானமான பொதுவுடமை வாதி என்று உரிமை கொண்டாடுகிறேன். எனக்குப் பணக்காரர்களுடன் பந்தம் கிடையாது. ஏழைகள் நலனுக்காக எந்த நிமிஷமும் அவர்கள் தொடர்பை அறுத்துக்கொள்வேன்.

### அஹிம்சா ஆயுதம்

கேள்வி :—ஏழைகளுக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றும்படி தனவந்தர்களைச் சத்தியாக்கிரக மூலம் செய்வதெப்படி?

பதில்:—அன்னிய அரசாங்கத்தைச் செய்வது போலவே தான். சத்தியாக்ரகம் சகல காரியங்களுக்கும் உபயோகமான சாதனமாகும். பாட்டக்காரர்கள் உழைப்பதால் உண்டாகும் பயனைப் பறித்துக் கொள்கிறார் ஒரு நிலச்சுவான் என்று வைத்துக் கொள்வோம். பாட்டக் காரர்கள் வேண்டிக் கொண்டாலும் அவர் கேட்பதில்லை, என்றும் தம்முடைய மனைவி மக்களுக்கும் பிறவிஷயங்களுக்கும் தேவை என்று கூறி ஆட்சேபம் கிளப்புகிறார் என்றும் வைத்துக் கொள்வோம். அப்பொழுது பாட்டக் காரர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் அவருடைய மனைவியிடம் போய் தங்களுக்காகப் பரிந்து பேசும்படியாக வேண்டிக் கொள்ள வேண்டும். அப்பொழுது அந்த அம்மாள் தமக்கு அந்தமாதிரிப் பறிக்கும் பணம் தேவையில்லை என்பதாக அவரிடம் சொல்ல வேண்டும். குழந்தைகளும் தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே சம்பாதித்துக் கொள்வதாகக் கூறவேண்டும்.

அப்படிக்கில்லாமல் அவருடனேயே மனைவி மக்களும் சேர்ந்து கொண்டால் என் செய்வது? அப்பொழுது பாட்டக் காரர்கள் நிலம் பயிர் செய்கிறவருக்கே சொந்தம் என்று கூறி விட வேண்டும். நிலச் சுவாந்தார்க்கு அவருடைய நிலம் முழுவதையும் தாமே உழுது பயிரிட முடியாது. அதனால் அவர் பாட்டக்காரர் கோரிக்கைக்கு இணங்கி விடுவார்.

அப்படிக் கில்லாமல் அவர் வேறு பாட்டக்காரரை நியமித்துக் கொள்ளலாம். அப்பொழுது அஹிம்சா பூர்வமான கிளர்ச்சி நடைபெறும். அதன் பயனாகப் புதிதாக வந்த பட்டாக்காரர் தாங்கள் வந்தது தவறு என்று கண்டுக் கொண்டு வெளியேற்றப் பட்ட பாட்டக்காரருடன் சேர்ந்து கிளர்ச்சி செய்வார்கள்.

இந்தவிதமாகச் சத்தியாக்ரகமானது பொது ஜன அபிப்ராயத்தை உருவாக்கும். ஜன சமூகத்திலுள்ள சகல வகுப்பாரும் மனமாற்றம் அடைவார்கள். அப்பொழுது சத்தியாக்ரகம் யாராலும் வெல்ல முடியாத சக்தியாக ஆகி விடுகிறது. ஆனால் பலாத்காரமோ இந்தவிதமாகச் சமூக அமைப்பு முழுவதிலும் உண்மையான புரட்சி உண்டாக்கும் காரியத்தை தடைப்படுத்தும்.

ஆகவே சத்தியாக்ரகம் வெற்றி பெறுவதற்கு அவசியமானவை:—

(1) சத்தியாக்ரகி எதிரியிடம் எவ்வித துவேஷமும் கொள்ளலாகாது.

(2) சத்தியாக்ரகம் மேற்கொள்ளப் படும் விஷயம் உண்மையானதாகவும் அவசியமானதாகவும் இருக்க வேண்டும்.

(3) சத்தியாக்ரகி எத்தகைய துன்பத்தையும் ஏற்கத் தயாராயிருக்க வேண்டும்.

# முதலாளித்துவமும் வேலைநிறுத்தமும்

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் முதலாளிகள் செய்யவேண்டியது யாது?

எங்கு பார்த்தாலும் இந்தக் கேள்வியையே கேட்கிறார்கள். தற்சமயம் அது வெகு முக்கியமானதாகவு மிருக்கிறது. "அமரிக்கன் முறை" என்று கேலி செய்யப்படுகிறதே அந்த அடக்கு முறையைக் கையாள்வது ஒரு வழி. கட்டுப்பாடான முறையில் போக்கிரிகளைக் கொண்டு தொழிலாளர்களை அடக்குவதே அந்த வழியாகும். இந்த முறையைத் தவறு என்றும் அழிவைத் தரக் கூடியது என்றும் எல்லோரும் கருதுகிறார்கள். இன்னுமொரு வழி இருக்கிறது, அதுதான் சரியானதும் கௌரவமானது மாகும். வேலை நிறுத்தங்களை அதனதன் நியாயாநியாயங்களை வைத்துத் தீர்மானித்து தொழிலாளர்க்கு நியாயம் வழங்குவதே அந்த வழியாகும். அப்படி வழங்கும் நியாயம், முதலாளிகள் எதை நியாயம் என்று கருதுகிறார்களோ அந்த நியாயமாக இராமல் எதைத் தொழிலாளர்களும் பொது ஜனங்களும் நியாயம் என்று கருதுகிறார்களோ அந்த நியாயமாகவே இருக்கவேண்டும்.

ஒழுங்கான முறையில் நடத்தப்பட்டால் வேலை நிறுத்தங்கள் உண்டாகுமா? முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் பரஸ்பரம் மரியாதையும் சமத்துவ உணர்ச்சியும் இருக்குமானால் வேலை நிறுத்தங்கள் உண்டாகவே மாட்டா. ஒழுங்கான முறையில் நடத்தப்படும் தொழிற்சாலைகளிலுங்கூட சில சமயங்களில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் வேற்றுமை உண்டாகக் கூடுமாதலால் இரண்டு கட்சியாரும் சமரசம் செய்ய மத்தியஸ்தர்களை நியமித்துக்கொண்டு அவர்கள் கூறும் தீர்ப்புப்படியே நடந்து வந்தால் என்ன?

இந்தக் கேள்வி நியாயமானதே. ஆனால் காரியங்கள் எப்படி நடைபெற்றால் நல்லது என்பதைப் பற்றி யோசியாமல் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாள் ஆக ஆக தொழிலாளர்கள் அதிகமாகத் தங்கள் கோரிக்கைகளை அதிகரிக்கவும் வற்புறுத்தவும் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளைப் பெற விரும்பும் ஆத்திரத்தில் பலாத்காரத்தைக் கையாளவும் தயங்கவில்லை. புதுமுறைகளைக் கையாள ஆரம்பித்திருக்கிறார்கள். முதலாளியின் சொத்துக்களுக்கு ஊறுசெய்யவும், யந்திரங்களை வேலை செய்யாமல் செய்யவும் வேலை நிறுத்தத்தில் சேராதவர்களை பலாத்காரமாய்த் தடுக்கவும் கஷ்டப்படுத்தவும் தயங்குகிறார்களில்லை. இந்த நிலைமையில் முதலாளிகள் நடந்துகொள்ள வேண்டியது எப்படி?

தொழிலாளிகளை முதலாளிகளைவிட உயர்வாக எண்ணாவிடினும் சம அந்தஸ்துடைய பங்காளிகளாகவேனும் எண்ண வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் இன்று இதற்கு

மாருகவே நடந்து வருகிறது. அதற்குக் காரணம் முதலாளிகள் அறிவை உபயோகித்து வருவதேயாகும். அவர்களிடம் அதிக மான பணமும் இருக்கிறது. அதை உபயோகிப்பதற்கு வேண்டிய அறிவும் இருக்கிறது.

தனி ஒரு ரூபாய்க்குள்ள சக்தி அற்பத்திலும் அற்பமே. ஆனல் பணம் நிறையச் சேர்த்து "முதல்" ஆனல், அப்போது அந்த முதல் விசேஷமான ஆற்றல் உடையதாக ஆகிவிடுகிறது. ஜலம் துளியாக இருக்கும்போது சர்வசாதாரணமாகத் தோன்றினும் சமுத்திரமாகச் சேர்ந்திருக்கும்போது பெரிய பெரிய கப்பலைச் சுமந்து செல்லக்கூடியதாக ஆகிவிடுகின்றது. இந்தியாவில் முத லாளிகள் கட்டுப்பாடாக வேலை செய்கிருர்கள். ஆனல் தொழி லாளிகளோ சங்கங்களும் சம்மேளனங்களும் அமைத்துக் கொண் டிருப்பினும் இன்னும் கட்டுப்பாடாக ஸ்தாபன ரீதியில் வேலை செய்யக்கூடியவர்களாக ஆகவில்லை. ஆதலால் உண்மையான கூட்டுறவால் கிடைக்கக்கூடிய ஆற்றல் இன்னும் அவர்களுக்கு உண்டாகவில்லை.

அத்துடன் அவர்கள் அறிவில்லாதவர்களாகவு மிருக்கிருர் கள். அதனலேயே தொழிலாளிகளுக் கிடையிலும், தொழிற் சங்கங்களுக்கிடையிலும் சச்சரவுகள் நிகழ்ந்து கொண்டிருக் கின்றன. அதுமட்டுமா? அறிவில்லாத காரணத்தால் எதற்கும் துணிந்த சுயநலமிகள் அவர்களைத் தங்கள் நலத்துக்காக உபயோ கித்துக் கொள்கிருர்கள். அவர்களைப் பலாதகாரத்தில் இறங்கு மாறு கூடச் செய்து விடுகிருர்கள். அஹிம்சையின் தத்துவத்தை அறியாதபடியால் அவர்கள் அந்த விதமாகத்தான் நடக்க முடி யும். கடைசியில் யாருக்கு நஷ்டம், தொழிலாளர்க்கேதான். தொழிலாளிகள் மட்டும அஹிம்சையின் ஆற்றலை அறிந்து கொள் வார்களானல், ஒன்று சேராமல் முதலாளியின் கையாளாக உள்ள தொழிலாளிகளைவிட ஒன்று சேர்ந்து நிற்கும் தொழிலாளிகளே எப்போதும் அதிகமான ஆற்றல் உடையவர்கள் என்பதை அறிந்து கொள்வார்கள்.

ஆதலால் நான் முதலாளிகளுக்குக் கூறும்யோசனை யாதெ னில் தாங்கள் சிருஷ்டித்து விட்டதாக எண்ணிவரும் தொழிற்சாலை யின் உண்மையான சொந்தக்காரர்கள தொழிலாளிகளே என்று மனமுவந்து எண்ண வேண்டும் என்பதே. அத்துடன் அவர்கள் தொழிலாளிகளிடம் அடங்கிக் கிடக்கும் அறிவைக் கிளறிவிடக் கூடிய நல்ல கல்வியைக் கொடுத்து, தொழிலாளிகள் ஒன்று சேர்வதால் உண்டாகும் ஆற்றலை சந்தோஷமாக வரவேற்று அபிவிர்த்தி செய்வதையே தங்கள் கடமையாகக் கருதவும் வேண் டும்.

இந்த உயர்ந்த காரியத்தை ஒரே நாளில் செய்துவிட முடி யாது. அதற்கிடையில் வேலை நிறுத்தக்காரர்கள் தொழிற்சாலை களை அழிக்க வந்தால் அப்போது முதலாளிகள் செய்யவேண்டி யது யாது? தொழிற்சாலை முதலாளிக்குச் சொந்தமாவது

போலவே தொழிலாளிக்கும் சொந்தமாவதால் தொழிற்சாலையைத் தொழிலாளியின் மேற்பார்வைக்கே விட்டுவிட வேண்டும் என்று நான் எவ்விதத் தயக்கமுமின்றி யோசனை கூறுவேன் முதலாளிகள் அவ்விதம் தொழிற்சாலையை விட்டு விலகுவது சரியான காரியம் என்று எண்ணி எவ்விதக் கோபதாபமுமின்றி விலகிக் கொள்ளவும், தங்களுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காகத் தங்கள் ஓவர்ஸியர்களையும் பிற நிபுணர்களையும் தொழிலாளர்க்கு உதவி செய்யுமாறு சொல்லவும் வேண்டும். அப்படிச் செய்தால் முதலாளிகளுக்கு இறுதியில் நன்மையே உண்டாகும். எவ்வித மான நஷ்டமும் உண்டாகமாட்டாது. அவர்களுடைய நியாய மான செயல் எதிர்ப்பை யெல்லாம் முறியடித்துவிடும், தொழிலாளர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். தங்கள் முதலைச் சரியான வழியில் உபயோகித்தவர்கள் ஆகவும் செய்வார்கள். அத்தகைய செயலை நான் தானம் வழங்கும் செயலாக மதிக்க மாட்டேன். முதலாளிகள் தங்கள் பணத்தைச் சரியான முறையில் பயன்படுத்தியதாகவும் தொழிலாளிகளைச் சம பங்காளிகளாகச் செய்து கொண்டதாகவுமே எண்ணுவேன்.

## படிப்பு முடிந்தபின் செய்ய வேண்டியது யாது ?

ஒரு மாணவர் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்கிறார் :—
நான் என் படிப்பு முடிந்தபின் செய்யவேண்டியது யாது ?

அதற்கு நான் கூறும் பதில் :—

நாம் இன்று ஒரு அடிமை ஜாதி. அதனால் நம்முடைய கல்வி முறை நம்முடைய எஜமானர்களுடைய நன்மைக்கு உகந்ததாகவே அமைக்கப் பட்டிருக்கிறது. ஆயினும் சுயநலமே உருவெடுத்த மனிதனுங்கூடத் தான் உபயோகப்படுத்தப் போகும் மனிதர்களை ஏதேனும் நன்மைபோல் தோன்றுவதைக் கொண்டு மயக்க வேண்டியிருப்பதால், நம்முடைய எஜமானர்களும் தங்கள் பாடசாலைகளில் வந்து படிப்பதற்காகச் சில நன்மைகளைக் காட்டுகிறார்கள். அத்துடன் அரசாங்க நிர்வாகிகள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். அவர்களிலும் நல்லவிதமாகக் கல்வி கற்பிக்க வேண்டும் என்று எண்ணுகின்ற நல்லவர்களும் சிலர் உளர். ஆதலால் இப்பொழுதுள்ள முறையிலுங்கூட சில நன்மைகள் காணப்படவே செய்கின்றன. ஆனால் பொதுவாகப் பார்க்குமிடத்து இக்காலத்தில் படிப்பை தவறான விதத்திலேயே உபயோகிக்கின்றோம், அது பணமும் பதவியும் சம்பாதிப்பதற்கான சாதனமாகவே கருதப்படுகின்றது.

"எது சுதந்திரம் அளிக்குமோ அதுதான் கல்வி" என்ற ஆன்றோர் வாக்கியம் இப்பொழுதும் உண்மையானதே. அவர்கள் கூறும் கல்வி வெறும் ஆத்மஞானமட்டுமன்று; அவர்கள் கூறும் சுதந்திரம் வெறும் ஆத்ம விமோசனமட்டுமன்று. அறிவு என்பதில்

மனித ஜாதிக்குச் செய்ய வேண்டிய சேவைக்கு உபயோகமான சகல பயிற்சியும் அடங்கும். சுதந்திரம் என்பதில் சகலவிதமான அடிமைத் தனத்தினின்றும் விடுதலை பெறுவதுமடங்கும். அடிமைத் தனமானது பிறர்க்கு அடிமையா யிருத்தல் என்றும் தம்முடைய தேவைக்கு அடிமையா யிருத்தல் என்றும் இருவகைப்படும். இந்த லட்சியத்தைப் பெறுவதற்காக மட்டும் தேடும் அறிவே உண்மையான கல்வியாகும்.

அன்னிய அரசர்கள் வகுக்கும் கல்வி முறையெல்லாம் அவர்களுடைய நன்மைக்கு உகந்ததாகமட்டுமே யிருக்கும் என்பதை உணர்ந்து, காங்கிரஸ் மகா சபையானது 1920ல சர்க்காருடைய சகல பாடசாலைகளையும் பஹிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானித்தது. ஆனால் அந்தக் காலம் மாறிவிட்டதாகத் தோன்றுகிறது. பாடசாலைகளும் கல்லூரிகளும் பெருகுவதைவிட அதிகமாக அவற்றில் படிக்க விரும்புகிற மாணவர்களுடைய தொகையும் அதே முறையில் கற்பிக்கிற ஆசிரியர்களுடைய தொகையும் பெருகி வருகின்றன. பரீட்சைக்கு வருகிறவர்களுடைய தொகை நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகிக் கொண்டே போகின்றது. இந்தமாதிரியான மயக்கம் ஏற்பட்டிருந்த போதிலும் உண்மையான கல்விக்கு நான் கூறிய லட்சணம்தான் சரியானது.

நான் கூறும் கல்வி லட்சியத்தில் ஆழ்ந்த பற்றில்லாமல் தம்முடைய படிப்பைவிட்டு விடுகிற மாணவர் பின்னால் தம்முடைய செயலுக்காகப் பச்சாதாபப் படவே செய்வார். ஆதலால் நான் அத்தகையவர்களுக்கு அத்தகைய நிலைமை ஏற்படாத யோசனையொன்றைக் கூறுகின்றேன். அவர் படிப்பை விடாமலே சேவை என்னும் லட்சியத்தை எப்பொழுதும் இதயத்தில் வைத்துக் கொண்டு, எந்தக் காலத்திலும் பணம் தேடுவதற்காக யில்லாமல் அந்த லட்சியத்துக்காகவே நம்முடைய கல்வியை உபயோகிக்க வேண்டும். அத்துடன், அவர் இப்போதுள்ள கல்வியில் காணப்படும் குறைகளை நீக்கிக் கொள்வதற்காகத் தமக்குக் கிடைக்கும் ஓய்வுநேரம் முழுவதையும் அந்த லட்சியத்துக்காக செலவு செய்ய வேண்டும். ஆதலால் அப்படிப்பட்டவர் நிர்மாணத் திட்டத்தில் கலந்து கொள்ளக் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்தையும் உபயோகியாமல் இழந்து விடக் கூடாது.

## இன்னுமொரு சேவை

காந்தியடிகள் பம்பாயில் தங்கிய ஐந்து நாட்களில் காங்கிரஸ் காரியக் கமிட்டி சம்பந்தமான வேலைகளையே அதிகமாகச் செய்து வந்த போதிலும் ஏழைகளுக்காக இயற்கைச் சிகிச்சை சாலை ஒன்றை ஏற்படுத்தும் விஷயத்திலும் அக்கறையுள்ளவராகவே இருந்தார்.

அவர் சமீபத்தில் சர்தார் படேலுக்கு எழுதிய கடிதம் ஒன்றில்—" நான் 50 வருஷகாலமாக விளையாட்டாகக் கவனித்து வந்த

விஷயம் இப்பொழுது என்னுடைய லட்சியங்களில் ஒன்றாக ஆகியிருக்கின்றது" என்று எழுதினர். மற்றொரு நண்பருக்கு "ஏழைகளுக்குச் சேவை செய்வதற்குள்ள திறமை என்னிடமிருப்பதாக நான் அறிந்தால் அதைப் பரிபூரணமாக உபயோகப் படுத்தக் கடமைப் பட்டவனாவேன். அப்படிச் செய்யா விட்டால் என்னை முட்டாள் என்றே சொல்ல வேண்டும்" என்று எழுதினர்.

ஆகவே அவர் இப்பொழுது எழுபத்தாறாவது வயதில்—வாழ்வின் அந்தி நேரத்தில்—தம்முடைய பல சேவைகளுடன் இந்தச் சேவையையும் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றார்.

அவர் தாம் செய்ய விரும்பும் இயற்கைச் சிகிச்சை முறைக்கும் பிற வைத்திய முறைக்குமுள்ள வித்தியாசத்தைக் கீழ்கண்டவாறு ஒரு நண்பருக்கு விளக்கிச் சொல்கிறார்:—

"சாதாரணமான வைத்திய முறையில் நோயாளியானவர் நோயை குணமாக்கக் கூடிய மருந்தை வாங்கி யுண்பதற்காக டாக்டரிடம் வருகிறார். டாக்டர் அவர் உண்ண வேண்டிய மருந்து இது என்று கூறுகிறார். நோயாளியிடம் காணப்படும் நோய் தணிந்ததும் டாக்டர் தம்முடைய சேவை முடிந்து விட்டதாகச் சொல்லுகிறார். அதன் மேல் அவர் நோயாளியைப் பற்றிக் கவனிப்பதே யில்லை. நோயாளி இப்பொழுதுள்ள நோய் போகவும் இனிமேல நோய் வராதிருக்கவும் தம்முடைய வீட்டிலிருந்து கொண்டே அனுசரிக்க வேண்டிய சரியான வாழ்க்கை முறையைக் கற்றுக் கொடுக்கிறார். சாதாரண டாக்டரோ, வைத்தியரோ நோயை ஆராய்வதிலேயே அதிகமாக அக்கரை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இயற்கை வைத்தியர் ஆரோக்கியத்தை ஆராய்வதிலேயே அதிகமான அக்கரை யுடையவர். டாக்டருடைய வேலை நோயைக் குணப்படுத்துவதோடு சரி. ஆனால் இயற்கை வைத்தியருடைய வேலை அது முதல்தான் ஆரம்பமாகின்றது. இனிமேல் நோய் வராமல் செய்வதே அவருடைய பிரதான வேலை. ஆகவே இயற்கைச் சிகிச்சை என்பது வாழ்க்கை முறையே யன்றி நோயைக் குணப்படுத்தும் முறை யன்று."

காந்தியடிகள் பம்பாயில் ரங்டா மாளிகையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்கண்டவாறு கூறினர்:—

"இயற்கை வைத்தியம் மூலம் எல்லா நோய்களையும் குணப்படுத்திவிட முடியும் என்று சொல்லமாட்டேன். எந்த வைத்திய முறையும் அப்படிச் செய்துவிட முடியாது. முடியுமானால் நாம் இப்போதே அமரர்கள் ஆகிவிடமாட்டோமா? ஆயினும் இயற்கை முறையானது குணப்படுத்த முடியாத நோயைப் பொறுமையுடனும் சாந்தியுடனும் சகித்துக் கொள்ளும் சக்தியை அளிக்கும். கோடிக் கணக்கான மக்கள் அனுபவிக்க முடியாததை நாம் அனுபவிக்கலாகாது என்று மட்டும் தீர்மானித்து விடுவோமானால், அப்புறம் தனவந்தரும் தரித்திரரும் கையாள வேண்டிய முறை இயற்கை முறையே தவிர வேறு கிடையாது."

# இயற்கைச் சிகிச்சை

உருளி இயற்கை வைத்தியசாலையின் ஆரம்பத்தில் காந்தியடிகளே நோயாளிகளைக் கவனித்துச் சிகிச்சை செய்யலானார். அவர்கள் அனைவர்க்கும் சிற்சில மாறுதல்களுடன் ஒரேவிதமான சிகிச்சை முறையையே கூறினார். ராமநாமத்தை பஜிக்கும்படியும், இடுப்பு ஸ்நானமும், தேய்ப்பு ஸ்நானமும் செய்யும்படியும், உடலினுள் சேர்ந்திருக்கும் அழுக்குகளைப் போக்குவதற்காகப் பால், மோர், பழங்களை, உண்பதோடு நல்ல சுத்தமான ஜலத்தை அதிகமாகக் குடிக்கும்படியும் சொன்னார்.

அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு உபதேசித்தார் :—

உடல் நோய்கள் மன நோய்கள் அனைத்திற்கும் காரணம் ஒன்றே ஒன்றுதான் என்பது உண்மையே. ஆதலால் அவைகளுக்கான பரிகாரமும் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பதில் தவறு கிடையாது. நோய் ஒன்றாக இருப்பது போலவே பரிகாரமும் ஒன்றேயாகும். அப்படித்தான் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதனால்தான் நான் இன்று காலை என்னிடம் வந்த நோயாளிகள் எல்லோர்க்கும் ஒரேவிதமான சிகிச்சை முறையைக் கூறினேன். ஆனால் சாஸ்திரங்கள் கூறுவது நமக்கு அசௌகரியமாயிருந்தால் உடனே அவற்றை மீறுவதற்குத் தக்கவாறு வியாக்கியானங்கள் செய்துவிடுகின்றோம். சாஸ்திரங்கள் எல்லாம் பரலோக வாழ்க்கைக்காகத்தான் என்றும் புண்ணியம் செய்தால் அதன் பயனை பரத்தில்தான் அனுபவிக்க முடியும் என்றும் தவறாக எண்ணி வருகின்றோம். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். புண்ணியத்தால் இகத்தில் நன்மை கிடையாதென்றால் பரத்திலும் கிடையாது என்பதே என்னுடைய உறுதியான எண்ணம்.

இந்த உலகத்தில் எவ்வித நோயுமின்றி இருப்பவரைக் காண்பது அரிது. சில நோய்களை இகத்தில் குணப்படுத்த முடியாது. உதாரணமாக ராமநாமமானது இழந்துபோன உறுப்பைத் தந்துவிடக்கூடிய அற்புதத்தை நிகழ்த்த முடியாது. ஆனால் இழந்துபோனாலும் இதயம் சாந்தியாக இருக்கக்கூடிய மகாப் பெரிய அற்புதத்தை நிகழ்த்தமுடியும். ராமநாம பஜனை செய்தால் மரண பயம நீங்கும். வாழ்வு சாபல்லியமாகும். என்றேனும் ஒரு நாள் இறக்க வேண்டியதாகவே யிருப்பதால் இப்பொழுது வந்துவிடுமோ என்று ஏன் சஞ்சலப் படவேண்டும்?

## இதுவே என் இந்தியா

இயற்கை வைத்தியம் செய்வதற்கு அதிகமான படிப்பும் பாண்டித்தியமும் தேவையில்லை. எளிதாக அனுஷ்டிக்கக் கூடியதாயிருப்பதால் எல்லோரும் அனுஷ்டிக்கலாம். கோடிக் கணக்கான மக்களுக்கு உபயோகமாயிருக்க வேண்டிய எதற்கும் பாண்டித்தியம் தேவையாயிராது. சிலர்தான் பாண்டித்தியம் பெறமுடியும். அதனால் அதைப் பணமுடையவர்களே அடைய முடியும். ஆனால் இந்தியாவோ அங்கு மிங்குமாகச் சிதறிக் கிடக்கும் சின்னஞ் சிறு கிராமங்கள் எழு லட்சத்திலேயே தங்கி யிருக்கின்றது. அத்தகைய கிராமம் ஒன்றில்போய் வசிக்கவே விரும்புகின்றேன். அதுதான் உண்மையான இந்தியா. அதன் நன்மைக்காகத்தான் உயிர் வாழ்கின்றேன். இத்தகைய மக்களுக்குப் பிரமாதமான டாக்டர்களையும் பிரமாண்டமான ஆஸ்பத்திரிகளையும் அளிக்க முடியாது. அவர்களுக்குவேண்டிய தெல்லாம் இயற்கைச் சிகிச்சையும் ராம நாமமுமேதாம்.

## இயற்கைச் சிகிச்சை முறை

மனிதனுடைய உடலானது காற்று, ஜலம், மண், நெருப்பு, ஆகாசம் ஆகிய ஐம்பூதங்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது. ஆன்மாவே அதை இயக்குகின்றது.

இவற்றுள் அதிக முக்கியமானது காற்று. மனிதன் உணவில்லாமல் பல வாரங்களும், ஜலமில்லாமல் சில காலமும் உயிருடனிருக்கலாம். ஆனால் காற்றில்லாமல் ஐந்தாறு நிமிஷ நேரங்கூட இருக்க முடியாது. அதனாலேயே கடவுள் காற்றை இப்படி எங்கும் கிடைக்கக் கூடியதாகச் செய்திருக்கின்றார். உணவுப் பஞ்சமும் ஜலப் பஞ்சமும் நேரிட்டாலும் நேரிடலாம். ஆனால் காற்றுப் பஞ்சமட்டும் ஒருநாளும் நேரிடாது. அந்த விதமாகக் கடவுள் சிருஷ்டித்திருந்தும்,நாம் முட்டாள்தனமாகக் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடி நல்ல தூய காற்றை உள்ளே வரவொட்டாமல் தடுத்துக் கொண்டு உறங்குகிறோம். இரவு திருடர் பயமிருந்தால் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடலாம். ஆனால் தன்னைத் தானே வீட்டில் போட்டு அடைத்து வைப்பானேன்?

சுத்தமான காற்று வேண்டுமானால் திறந்த வெளியிலேயே உறங்க வேண்டும். ஆனால் திறந்த வெளியிலும் தூசியும் அழுக்குமுள்ள காற்றேயிருக்குமானால் திறந்த வெளியில் உறங்குவதிலும் பலனில்லை. படுக்குமிடத்தில் அவை இரண்டும் இருத்தலாகாது. சிலர் தூசிக்காகவும் குளிருக்காகவும் தங்கள் முகங்களை மூடிக் கொண்டு உறங்குகிறார்கள். அது தூசியையும் குளிரையும் விட அதிகக் கேடுசெய்வதாகும். சிலர் வாயால் சுவாசிக்கும் கெட்ட பழக்கமுடையவர்களாயிருக்கிறார்கள். வாயானது உண்பதற்

காக ஏற்பட்டதே யன்றி சுவாசிப்பதற்காக வன்று. மூக்குத் துவாரங்கள் வழியாகச் செல்லும் காற்று வடிகட்டப்பட்டுச் சுத்தமாகவும் சூடாகவுமே சுவாசப் பைகளுக்குச் செல்லுகின்றது.

கண்ட விடங்களில் கவனமின்றி துப்புகிறவர்களும் குப்பை கூளங்களை எறிகிறவர்களும் மனிதனுக்கும் கடவுளுக்கும் துரோகம் செய்கிறார்கள். மனிதனுடைய உடல் கடவுளின் ஆலயம். அந்த ஆலயத்துள் செல்லும் காற்றை அசுத்தமாக்குகிறவர்கள் ஆலயத்தை அசுத்தப் படுத்துகிறவர்கள் ஆகிறார்கள். அத்தகையோர் ராம நாமத்தை பஜிப்பதால் யாதொரு பயனும், அடைய மாட்டார்கள்.

நான் இங்கு தங்கினால் உங்களுக்குக் கஷ்டமாகத்தானிருக்கும். நான் சும்மாயிருக்கமாட்டேன். உங்கள் வீடுகளுக்கு வருவேன் உங்கள் தெருக்களையும் சாக்கடைகளையும் கக்கூசுகளையும் சமையல் அறைகளையும் வந்து பார்ப்பேன். எந்த இடத்திலானாலும் எள்ளளவு குப்பையோ கூளமோ இருக்க நான் இடந்தர மாட்டேன்.

## 125 வயது வரை வாழ்வது எப்படி ?

காந்தியடிகள் ஹோட்டலில் தங்கியிருந்தபோது அவரைப்பார்க்க வந்த ஆங்கில நண்பர் ஒருவர்:—

" தாங்கள் தங்கள் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொண்டிருக்கிறீர்களே, அதற்காக என்ன செய்கிறீர்கள் ? '' என்று கேட்டார்.

**காந்தியடிகள்** :—ஆம் சுகமாகத்தான் இருந்துவருகின்றேன். அதற்குக் காரணம் நான் உண்பதிலும் பருகுவதிலும் உறங்குவதிலும் ஒழுங்கான வழக்கங்களைச் அனுஷ்டித்து வருவதும், 1901 முதல் இயற்கைச் சிகிச்சை முறையைப் பின்பற்றி வருவதுமேயாகும். 1901-ம் வருஷத்தில்தான் அதுவரை உபயோகித்துவந்த மருந்து பாட்டிலைத் தூக்கி வெளியே எறிந்து விட்டேன். அது முதல் 45 வருஷங்களாக இயற்கை முறைப்படியே வாழ்க்கையை நடத்தி வருகின்றேன். ஆயினும் என் சுகத்துக்கு இதைவிடப் பெரிய காரணம் நான் என்னுடைய மனத்தைப் பற்றின்றி இருக்குமாறு பழக்கி வருவதேதான். லட்சியமும் சாதனமும் தூயதாயிருந்தால் பலனைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவ்விதம் பலனைப்பற்றிக் கவலை கொள்ளாதிருப்பதே பற்றின்மையாகும். சாதனங்களைச் சரியானதாக வைத்துக்கொண்டு மற்றதை எல்லாம் கடவுளிடம் விட்டுவிட்டால் கடைசியில் எல்லாம் நன்மையாகவே முடியும் என்பதே என்னுடைய சித்தாந்தம். இந்த என்னுடைய சித்தாந்தத்திற்கு ஆதாரம் பகவத் கீதைதான். அதுதான் செயல் புரி

யும் காலத்தில் சந்தேகம் நேர்ந்தால் நான் திருப்பிப் பார்க்கும் செயல் அகராதி."

நண்பர்:—பகவத் கீதையின் உபதேசமும் ஆல்டுஸ் ஹக்ஸ்லி "லட்சியங்களும் சாதனங்களும்" என்று எழுதியுள்ள நூலில் விவரிக்கும் முறையும் அநேகமாக ஒத்தே யிருக்கின்றன."

காந்தியடிகள் தாம் லண்டன் நகரத்தில் மாணவராக இருந்த காலத்தில் ஆல்டூஸ் ஹக்ஸ்லியின் தந்தையாருடைய நூல்களைப் படித்த விபரத்தை யெல்லாம் கூறினார். அதன்பின்,

நண்பர்:—"ஆரோக்கியத்துக்கு உடலையும் கவனிக்க வேண்டியதுதானே"

காந்தியடிகள்:—ஆமாம் உடலையும் கவனிக்க வேண்டியது தான். ஆனால் உள்ளத்தின் விஷயத்தையே நான் அதைவிட முக்கியமானதாகக் கருதுகின்றேன். நாம் நினைக்கும் வண்ணமே ஆகின்றோம். எண்ணமானது செயலாக ஆகும்பொழுதுதான் பூரணம் அடைகின்றது. எண்ணம் செயல் இரண்டும் ஒன்றுக் கொன்று ஒத்ததாக இருந்தால்தான் வாழ்வு இயற்கையாகவும் பூரணமாகவும் நடைபெறும்.

நண்பர்:—"ஆனால் இதுவரைச் செய்த அக்கிரமங்களின் பலன் களை அனுபவிக்க வேண்டாமோ?"

காந்தியடிகள்:—நான் என்னுடைய தவறான நடத்தையால் என்னுடைய ஆயுளைக் குறைத்துக்கொண் டிருக்கலாம். எவ்வளவு ஒழுங்காக இப்பொழுது நடந்தாலும் அந்தமாதிரிக் குறைந்து போன ஆயுளைக் கூட்டிவிட முடியாது. ஆயினும் உடலிலுள்ள பற்றை அப்படியே துறந்துவிட்டால் என்னுடைய பிழைகளால் உண்டாகும் தீமைகளை எல்லாம் இல்லாமற் செய்துவிட முடியும். நாம் செய்த பிழையால் உண்டாகும் தீமைகளை மட்டுமன்று கருவி லொட்டியவைகளையும் வளர்ப்பில் உண்டானவைகளையும்கூட மாற்றிவிடலாம். இயற்கை விதியை, அறிந்து மீறினாலும் அறியா மல் மீறினாலும் தண்டனை ஏற்படவே செய்யும். ஆயினும் பற்றின் மையைப் பரிபூரணமாக உண்டாக்கிவிட்டால் அந்தத் தண்டனையை இல்லாமல் செய்துவிடலாம். "மறுபிறப்புப் பெற்று லன்றி மார்க்கண்ட வாழ்வுபெற முடியாது" என்பது தேவ வாக்கு. ஆதலால் மாறிப் பிறந்துவிட்டால் மார்க்கண்ட வாழ்வு பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு எவ்விதத் தடை யும் கிடையாது. புதிதாகப் பிறந்து புதிதாக வாழ முடியும், பழயவாழ்வை அறவே துறந்துவிட்டால்—பற்றின்மையைப் பரி பூரணமாக அமைத்துக் கொண்டுவிட்டால் அப்புறம் பழய வாழ்வு வந்து புதிய வாழ்வைக் கெடுத்துவிட முடியாது."

## பண முடிப்புக்கள்

பொதுஜன ஊழியர் ஒருவர்க்கு அளிக்கப்படும் பண முடிப்புக்களை எப்படி உபயோகிக்கவேண்டும் என்பது சம்பந்தமாக எனக்கு ருசிகரமான ஒரு தகவல் எட்டியிருக்கின்றது. நானும் பொது ஜனங்களிடமிருந்து பல பணமுடிப்புக்களைப் பெறுகின்றேன். சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது கல்கத்தாவுக்கும் மதுரைக்குமிடையில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்தார்கள். சிலர் அனுமதேயமாகவும், சிலர் செலவுசெய்ய வேண்டிய காரியங்களைக் குறிப்பிட்டும், சிலர் என்னிஷ்டம்போல் செலவு செய்யும்படியாகவும் தந்தார்கள். எனக்குச் சொந்தம் என்று சொல்லும் வண்ணம் நான் எவ்விதப் பொருளையும் வைத்துக்கொண்டிருக்கவில்லை. இப்பொழுது தந்துள்ள நன்கொடைகளையோ அல்லது அவற்றில் ஒரு பகுதியையோ நான் சொந்தத்துக்கு உபயோகித்துக்கொள்ள எனக்கு உரிமை உண்டா? நான் சேவை செய்துவரும் காலம் முழுவதிலும் அந்த விதமாக உபயோகித்ததே யில்லை. என்னைப்போல் நடக்குமாறே என்னுடைய நண்பர்களுக்கும் யோசனைசொல்லி வருகின்றேன். ஜனங்கள் ஏதேனும் பொதுநல விஷயத்துக்காகத் தாங்கள் செலவு செய்வதைவிடத் தலைவர்கள் நியாயமாகவும் கவனமாகவும் செலவு செய்வார்கள் என்ற பரிபூரணமான நம்பிக்கையின் பேரிலேயே தலைவர்களிடம் பணமுடிப்பு அளிக்கிறார்கள். அவ்விதம் ஜனங்களுடைய நம்பிக்கை முழுவதையும் பெற்றுள்ள தலைவர்கள் நான் செய்வதுபோலச் செய்வதைத் தவிர வேறுவிதமாகச் செய்யலாகாது. பொது நலத்துக்கு உபயோகிக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் கொடுக்கும் பொருளைச் சொந்த நலத்துக்கு உபயோகிப்பது என்பது அடாத காரியம். அதனால் உண்டாகக் கூடிய தீமைகளை எண்ணிப் பார்த்துக்கொள்ளலாமே யன்றி எழுத்தில் சொல்லிவிட முடியாது. அரசனுடைய மனைவியின் கற்பு எப்படி சந்தேகத்துக்கு இடமில்லாமல் இருக்க வேண்டுமோ அப்படியேதான் பொது ஜன ஊழியர்களுடைய சேவையும் இருக்க வேண்டும்.

## சதவிகித நாணயங்கள்

இந்திய நாணயச் சட்டத்தை மாற்றிப் புதிய சட்டம் செய்வதற்காக ஒரு மசோதா டில்லிச் சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த மசோதா சட்டமாய் விட்டால், ரூபாய்க்கு 64 காலணா என்பது போய் 100 சதம் என்று ஆய்விடும். அதனால் பல மாறுதல் உண்டாவது சகஜம்.

இத்தகைய சட்டம் செய்யவேண்டிய அவசியத்தை மசோதா கீழ்கண்டவாறு கூறுகிறது:—

யுத்த காலத்தில் தயாரித்த, நாலணுவுக்குக் குறைந்த சிறு நாணயங்கள் அதிருப்திகரமாயும் பொதுஜனப் பிரீதியற்றதாயும் இருப்பதால் யுத்தத்துக்கு முன் நடப்பிலிருந்த நாணயங்களைத் தயாரிக்கவேண்டும். ஆனால் ரூபாய் 16 அணுவாகவும் அணு 12 பையாகவும் இருப்பதை மாற்றி தசாம்ச நாணயங்களைத் தயாரிப்பதற்கு இந்தச் சந்தர்ப்பம் மிகவும் தக்கதாகும். இந்தக் காலத்து வியாபாரத்துக்கு சீக்கிரமாகவும் எளிதாகவும் கணக்குப்போடக் கூடிய முறையே தேவையாயிருக்கின்றது. அதற்கு உலகத்தில் அதிகமான முன்னேற்றம் அடைந்துள்ள தேசங்கள் பலவற்றிலும் பழய முறைகளுக்குப் பதிலாக நடப்புக்கு வந்துள்ள தசாம்ச முறையோடு போட்டி போடக்கூடியது வேறு எதுவுமேயில்லை. இந்துயாவிலும் அந்த முறையே வேண்டும் என்றே பொது ஜன அபிப்பிராயமும் இருந்துவருகிறது. இதற்காகத்தான் இந்த மசோதா.''

அத்துடன் சேர்க்கப்பட்ட ஒரு குறிப்பு கூறுவது :—

''ரூபாய்க்கு 100 சதம் என்னும்பொழுது, இப்பொழுது இருந்துவரும் நாணயங்களுக்குச் சரியான முழு சதங்கள் இத்தனை என்று கூறிவிட முடியாது. கொஞ்ச காலத்துக்கு அணுவும் சதமும் நடமாடிக்கொண்டிருக்குமாதலால் அணுவுக்கு இத்தனை சதம் என்று நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகின்றது.''

திரு. கிஷோரிலால் மஷ்ரூவாலா இந்த விஷயத்தைக் கவனமாக ஆராய்ந்தபின், தசாம்ச நாணய முறையானது தத்துவ ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தபோதிலும் நடப்பில் சில வருஷ காலத்துக்கு ஏழை மக்கள் வழக்கம்போல பணக்கார வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும்படியாக பலியிடப்பட்டு விடுவார்கள் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். இந்த முடிவுக்கு ஆதாரமாக அவர் அறிவுக்குப் பொருத்தமாகக் கூறும் வாதத்தை இப்பொழுது சுருக்கித்தர விரும்பவில்லை. அது முழுவதும் '' ஹரிஜன பந்துப் '' பத்திரிகையில் காணலாம்.

தசாம்ச நாணய முறை நம்மை அரசாள்பவர் நாட்டில்கூட ஏற்படவில்லை. அங்கே சட்ட சபையார் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை மதிக்கவும் அதன்படி நடக்கவும் செய்கிறார்கள். இந்தியாவிலோ பொது ஜன அபிப்பிராயம் என்பது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. அதுவும் பலமற்றதாகவே இருந்துவருகிறது. அத்துடன் இந்த நாணய முறையால் நஷ்டப் பட்டுப்போகும் பாமர மக்கள் இன்னும் வாயில்லாப் பூச்சிகளாக இருந்து வருகிறார்கள்.

வரியைக் கூட்டிவிட்டார்கள் என்று குறை கூறுவதற்கு இடமில்லாமலே வரியை ஏழைகளிடம் வசூலித்து விடுவார்கள் என்று திரு. மஷ்ரூவாலா எடுத்துக் காட்டுவது முற்றிலும் ஏற்கத்தக்கதாகவே இருக்கின்றது. இந்த முறையானது விஞ்ஞான ரீதியில் சரி

யாக இருப்பதாகக் கூறப்பட்ட போதிலும் ஏழைகளுக்குக் கஷ்டம் கொடுக்கும் என்பது நிச்சயமாகத் தெரிந்த படியால் அதிகாரத்தை இன்னும் சில மாத காலத்தில் மாற்றப் போவதாகச் சொல்லும் இந்தச் சமயத்தில் இத்தப்புதிய முறையை ஏற்படுத்துவது சர்க்காருக்கு அழகன்று. இந்தியாவைப் போன்ற எளிய தேசத்தில் பின்னால் நன்மை செய்யக் கூடியதாயிருப்பினும், இப்பொழுது நன்மையா தீமையா என்ற கேள்வியே முடிவு சொல்ல வேண்டிய கேள்வியாகும். ஆதலால் சர்க்கார் புனராலோசனை செய்து மசோதாவை நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் அப்படிச் செய்யாமல் போனால், மத்திய சட்டச் சபையேனும் அதை நிராகரித்து விடவேண்டும் என்று விரும்புகின்றேன்.

## குதிரைப்-பந்தயம்

**கேள்வி :**— குதிரைப்பந்தயம் அநேக முக்கியமான நகரங்களில் நடந்துகொண்டிருக்கிறது. அது தனவந்தர்கள், தரித்திரர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் சகலரையும் ஒன்றுபோலவே ஈர்த்து வருகின்றது. அதனால் அறநெறி பிறழ்ந்து நடத்தலும் அதிகமாக வறுமையால் வாடுதலும் உண்டாகின்றன. அநேக சமஸ்தானாதிபதிகள் பந்தயக் குதிரைகள் வாங்குவதற்காகத் தங்கள் பிரஜைகளின் பணத்தை லட்சக் கணக்காகப் பாழாக்குகிறார்கள். இந்த அநியாயத்தைத் தடுக்க நம்முடைய புதிய சர்க்கார்கள் செய்ய வேண்டியது யாது?

பதில் :—குதிரைப் பந்தயமானது தீமையே என்பதில் சந்தேகமே கிடையாது. அதனால் நன்மை உண்டாவதாகச் சொல்வது கொஞ்சமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. அதிலும் நாட்டில் துன்பம் நாளுக்குநாள் அதிகமாகப் பெருகிவரும் இந்நாளில் அது முற்றும் தவறேயாகும். இப்பொழுது ஏற்பட்டுள்ள தேசீய சர்க்கார்கள் இந்தத் தீய வழக்கத்தைத்தடுக்க அநேக காரியங்கள் செய்யலாம். ஆயினும் அவர்கள் ஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்தவர்களாதலால் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைப் புறக்கணித்து எதுவும் செய்துவிட முடியாது. சீர்திருத்தவாதிகள் தாம் ஜனங்களுடைய போக்குக்கு எதிராகக் காரியங்கள் செய்யலாம். ஆயினும் ஜன சர்க்கார்கள், அதிகாரிகளுடைய சர்க்கார் குதிரைப் பந்தய ஆடம்பரத்துக்கு ஜனங்களுடைய வரிப்பணத்தைக்கொடுத்து வீணாக்கியது போலவும் அதை நாகரிகச் சின்னமாக ஆதரித்து வந்தது போலவும் செய்யாமல் நடந்து அந்தத் தீயவழக்கம் நாகரிகமன்று என்றும் ஆதரிக்கத்தகுந்ததன்று என்றும் காட்டலாம். இவ்விதம் தேசீய சர்க்கார்கள் நடந்து காட்டும் அறநெறியைச் சமஸ்தானாதிபதிகளும் கடைப்பிடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

# நேத்தாஜி இருக்கிறாரா?

சுபாஷ் சந்திரபோஸ் இறந்துபோய் விட்டதாகச் சில வருஷங்களுக்குமுன் ஒரு செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாயிற்று. நான் அதை உண்மை என்று நம்பினேன். ஆனால் பின்னால் அது தவறு என்று ஆய்விட்டது. நேத்தாஜி தம்முடைய சுயராஜ்யக் கனவு நனவு ஆகும்வரை நம்மைவிட்டுப் பிரிந்து போகமாட்டார் என்ற உணர்ச்சி அது முதல் என்னிடம் உண்டாயிருக்கின்றது. அவர் தம்முடைய கண்ணுக்குக் கண்ணான லட்சியத்தை அடையும் பொருட்டுத் தம்முடைய பகைவர்களை மட்டுமன்றி உலகமுழுவதையுமே ஏமாற்றிவிடக் கூடிய திறமை வாய்ந்தவர் என்பதை அறிந்ததும் என்னுடைய உணர்ச்சி அதிகமான உரம் அடைந்திருக்கின்றது. இவைகள் தாம் நான் அவர் உயிருடனிருப்பதாக நம்புவதற்குரிய காரணங்கள்.

இனி வரப்போவதை இப்பொழுதே கூறும் ஆற்றல் என்னிடம் கிடையாது. உண்மையைவிட்டுப் பிறழாமல் இருப்பதால் உண்டாகும் ஆற்றலைத் தவிர வேறு ஆற்றல் எதுவும் இல்லேன். அஹிம்சையும் உண்மையைவிட்டு பிறழாத காரணத்தால் உண்டாகும் சக்தியே ஆகும். உண்மை முழுவதையும் அறியக் கூடியவர் கடவுள் ஒருவரே. அதனாலேயே நான் உண்மை என்பதும் கடவுள் என்பதும ஒன்றேதான் என்று கூறி வருகின்றேன். ஆதலால் தான் சிற்றறிவுடைய மனிதனால் உண்மை முழுவதையும் அறிந்துவிட முடியாது. அதனால் நேத்தாஜி உயிரோடிருக்கிறார் என்று கூறுவது என்னுடைய உணர்ச்சியே யன்றி வேறன்று. இந்த ஆதாரமில்லாத உணர்ச்சியைமட்டும் நம்பிவிட முடியாது.

இந்த உணர்ச்சியைத தவறு என்று காட்டுவதற்குரிய சான்றுகள்கூட பலமாகக் காணப்படுகின்றன: அந்த சாட்சியத்துக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் பொறுப்பாளிகள். சுபாஷ் சந்திர போஸுடனிருந்த காப்டன் ரஹ்மான் நேத்தாஜி இறக்கும்பொழுது அவருடன் இருந்ததாகவும் தீப்பட்டுக் கறுத்துப்போன அவருடைய கைக் கடிகாரத்தைக் கொண்டுவந்திருப்பதாகவும் கூறுகிறார். நேத்தாஜியின் மற்றொரு தோழர் திரு. அய்யர் என்னுடைய உணர்ச்சி தவறு என்றும் சுபாஷ் சந்திரர் உயிருடனிருப்பதாக எண்ணும் உணர்ச்சி நாம் விட்டுவிட வேண்டும் என்றும் என்னிடம் வந்து கூறினார். இந்தக் காரணங்களால் எல்லோரும் நான் கூறியதை மறந்துவிட்டு இவர்கள் கூறுவதை நம்பி நேத்தாஜியின் பிரிவைச் சகித்துக் கொள்ளும் படியாக நான் வேண்டிக்கொள்கின்றேன். ஏகமாகிய கடவுளின் சக்தியோடு ஒப்பிட்டால் எந்த மனிதனுடைய தந்திரமும் வெறும் சூன்யமேயாகும். கடவுள் தான் உண்மை, வேறு எதுவும் நிலைப்பதில்லை.

## பத்திரிகை நிருபர்கள்

### இந்தியரும் ஐரோப்பியரும்

இந்தியப் பத்திரிகை நிருபர் ஒருவர் நம்முடைய பெரிய மனிதர்கள் தாங்கள் நடத்தும் பத்திரிகை நிருபர் மகா நாடுகளில் இந்திய நிருபர்களை விலக்கிவிட்டு அன்னிய நிருபர்களையே வைத்துக் கொள்வதாகக் குறை கூறுகிறார். அத்துடன் நானும் அந்தத் தவறு செய்வதாகவே எண்ணுகிறார். ஆனால் நான் அவ்விதமான தவறு செய்யவில்லை என்பதை, ஆட்சேபிக்கக்கூடும் என்ற அச்சமின்றி, தைரியமாகக் கூறுகிறேன். நான் ஆசியாக் கண்டத்தில் பிறந்த குற்றத்துக்காக அளவிறந்த துன்பங்கள் அனுபவித்திருப்பதால் அத்தகைய பிழையை நான் செய்யக் கூடியவனல்லன். இந்த நண்பர் கூறுவது போல் யாரும் தவறு செய்வதாக எனக்குத் தெரியவில்லை. அப்படிச் செய்தால் அவரை இந்தியப் பத்திரிகை நிருபர்கள் பகிஷ்காரம் செய்துவிட மாட்டார்களா? அதற்குப் பயந்தேனும் அவர் சரியாக நடந்துகொள்வார் அல்லவா? என் விஷயத்திலும் சரி, நான் அறிந்தவரை பிறர் விஷயத்திலும் சரி, அன்னிய நாடுகளில் நம்முடைய விஷயங்கள் தெரிய வேண்டும் என்பதற்காகச் சில சமயங்களில் அன்னிய நிருபர்களுக்கு விசேஷ பேட்டி அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இப்போதுள்ள நிலைமையில் வேறு விதமாகச் செய்வதற்கில்லை. இந்திய நிருபர் போலவே அயல்நாட்டு நிருபர்களுடைய பகிஷ்காரத்தைத் தேடிக்கொள்வதும் அறிவீனமாகும். அத்துடன் இந்திய நிருபர்களை விலக்க வில்லை என்பது மட்டுமன்று, தேசத்தின் பொது நலனை கொள்கின்றனர் என்பதையும் எல்லோரும அறிந்து கொள்ளலாம். நானும் ஒரு நிருபர் என்ற நிலைமையில் இந்திய நிருபர்களும் அயல் நாட்டு நிருபர்களும் தங்களுடைய வருவாயையும் தங்கள் எஜமானர்களுடைய வருவாயையும் பெரிதாக எண்ணுமலும் பிறரைத் தாக்கும் இழிவில் ஈடுபடாமலும் பொது நல விஷயங்களையே பிரதானமாகக் கருதும்படி வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

## சாஸ்திரியாரும் காந்திஜியும்

இப்பொழுது சாஸ்திரியார் மறைந்து விட்டபடியால் அவர் கடைசியாகக் காந்தியடிகளுடன் நடத்திய சம்பாஷணைகள் சோகத்தை உண்டாக்குவனவாக இருந்த போதிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக உள.

அவர்கள் இருவரும் முதலில் ஜனவரி 22-ம் தேதி சந்தித்தார்கள். காந்தியடிகள், சாஸ்திரியார் அதிக சுகவீனமாயிருப்பதால் சில நிமிஷ நேரம் உள்ளே போகத் தமக்கு மட்டுமே அனுமதி கிடைக்கும் என்று அறிந்தார். திரு. ஜகதீசன், நானும் என்னுடைய சகோதாரும் அவருடன் வர வேண்டும் என்று யோசனை

கூறினார். "உங்களைப் பார்க்க சாஸ்திரியார்க்குச் சந்தோஷமாயிருக்கும்" என்று சொன்னார். அதனால் காந்தியடிகள் எங்களையும் திரு. மணிலாலையும் கூட்டிக்கொண்டு போனார். நாங்கள் வெளியே நிற்க வேண்டி வரும் என்று எச்சரித்தார். ஆனால் டாக்டர், சாஸ்திரியார் நிலைமை சந்தோஷம் தரும்படியாக இருப்பதாகக் கூறி எங்களுக்கு உள்ளே போக அனுமதி தந்தார்,

ஒரு சமயத்தில் சாஸ்திரியார், தாம் காந்தியடிகள் சென்னைக்கு வரும் வரை உயிருடனிருப்பதைப் பற்றிச் சந்தேகமாகவே இருந்தார். அதனால் காந்தியடிகளை நேரில் கண்டதும் அவருக்கு உண்டான ஆனந்தம் அவருடைய தொண்டையை அடைத்துக் கொண்டது. படுக்கையில் தலையணைகளை அடுக்கிச் சாய்ந்து கொண்டிருந்தவர் காந்தியடிகள் கட்டிலின் அருகே வந்ததும் எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

தொண்டை அடைத்துக் கொண்டதால் "சகோதரரே! வாருங்கள். தங்களை அணைத்துக் கொள்ள விரும்புகிறேன்" என்று திக்கித் திக்கிச் சொன்னார்.

காந்தியடிகள் அவருடைய கையைப் பிடித்து ஆறுதல் கூறினார். "என்னை அணைத்து அலுப்பு உண்டாக்கிக் கொள்ள வேண்டாம்" என்று வேண்டினார். கீர்த்தி வாய்ந்த அந்த நோயாளி உடனே மறுபடியும் காந்தியடிகளின் கையைப் பிடித்த வண்ணமே தலையணை மீது சாய்ந்து கொண்டார்.

சாஸ்திரியார்க்கு ஏற்பட்ட மனக் கிளர்ச்சி அவருக்கு மூச்சுத் திணறும்படியாகச் செய்து விட்டது. அதனால் அவர் மிகுந்த சிரமத்தோடு "தங்களிடம் ஒரு விஷயம் சொல்ல எண்ணிக் கொண்டிருக்கிறேன்" என்று ஆரம்பித்தவர் பேச முடியாமல் மொழிக்கு மொழி பெரு மூச்சு விட்டுக் கொண்டு கண்ணில் நீர் ததும்ப "உலகத்தில் நிரந்தரமாகச் சமாதானத்தை நிலைக்கச் செய்வதற்காகக் கிடைத்த மற்றொரு சந்தர்ப்பத்தையும் இழந்து விட்டார்கள். அவர்கள் சமாதான மகாநாடு கூடி யிருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் தங்களைத் தவிர வேறு யார் மனித ஜாதிக்காகப் பேசக் கூடிய அருகதை யுடையவர்? இந்தியா தன்னுடைய கடமையைச் செய்யத் தவறி விட்டதென்றே எண்ணுகின்றேன்" என்று கூறினார்.

காந்தியடிகள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற நாள் முதலே, சாஸ்திரியார், காந்தியடிகளை ஸான் பிரான்ஸிஸ்கோவில் நடக்கும் சமாதான மகா நாட்டுக்குப் போகும்படி வேண்டி எழுதிக் கொண்டே இருந்தார்:—

"அவர்களாகத் தங்களைக் கூப்பிடா விட்டாலும், நீங்கள் சத்தியம் அஹிம்சை இரண்டையும் உபதேசிப்பதற்காக அங்கே போகத்தான் வேண்டும். தாங்கள் அங்கே போயிருந்தாலே போதும். கூப்பிட வில்லையே என்று இருந்துவிடக் கூடாது."

அவர் எழுதிக் கொண்டிருந்தவற்றின் சாராம்சத்தையே இங்கு எழுதியுள்ளேன். தாம் எங்கிருந்தாலும் தம்முடைய

அஹிம்சை பலன் தரும் என்றே காந்தியடிகள் எண்ணினர். பெரிய நாடுகள் விரும்பினலன்றி அவர் போவதால் பிரயோசனம் எதுவும் உண்டாகமாட்டாது. ஆனல் இந்த அபிப்பிராயம் சாஸ்திரியார்க்குத் திருப்தி அளிக்கவில்லை. அதனலேயே அவர் காந்தியடிகளைச் சந்தித்ததும் மேற் கண்டவாறு தம்முடைய உணர்ச்சிகளை வெளியிடலானர்.

அதன் பிறகு அவர் "ஆங்கிலப் பார்லிமெண்டு தூது கோஷ்டியார் வந்திருப்பதால் எவ்வித நன்மையும் உண்டாகப் போவதில்லை என்பதை அறிவோம். தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்களானலும் இந்தியா விஷயத்தில் அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரி தான்" என்று கூறினர்.

காந்தியடிகள் அதை ஒத்துக்கொண்டு "ஆயினும் அவர்களை நம்பிப் பார்ப்போம்" என்று சொன்னர்.

இங்கிலாந்தில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியாக விருந்த பர்ரோஸ் என்பவர் வங்காளத்துக்குக் கவர்னராக வந்திருக்கிறார். அவர் ஹாஸ்யச் சுவை உடையவராகக் காணப்படுகிறார். அவர் வந்ததும் பத்திரிகை நிருபர்கள் அவரிடம் போய் அவர் அவலம்பிக்கப் போகின்ற கொள்கையைக் குறித்துத் தொல்லைப்படுத்திய போது அவர் "கனவான்களே நான் எதையும் அவலம்பிக்கப் போவதில்லை. நிறைவேற்றி வைக்கவே போகிறேன்" என்று மறுமொழி பகர்ந்தார். அவர்கள் எல்லோரும் அப்படியேதான். தொழிற்கட்சி சர்க்காரும் வேறு விதமாக நடக்க முடியாது. "இந்த நிலைமையில் இனிச் செய்ய வேண்டியது யாது?" என்று சாஸ்திரியார் கேட்டார்.

காந்தியடிகள் :—"அதை யார் அறிவார்? பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கூடத் தெரியாது என்று எண்ணுகிறேன். ஆனல் நான் தங்களிடம் அரசியல் விஷயங்களை விவாதிப்பதற்காக விரவில்லை."

அதைக் கேட்டதும் சாஸ்திரியார் ஆவேசமாகப் பதில் கூறினர் :—

"அப்படியானல் அதற்கு, எனக்குத் தகுதியில்லை என்ரு எண்ணுகிறீர்கள்?"

காந்தியடிகள் :—"அப்படி எண்ணவில்லை. ஆனல் இப்போதுள்ள ஆரோக்கிய நிலைமையில் தங்களால் எதுவும் செய்ய முடியாதல்லவா?"

அதன் பின் அவர்கள் இருவரும் வகுப்புப் பிரசனையைப்பற்றிச் சில வார்த்தைகள் பேசினர்கள். அப்புறம் பரஸ்பரம் கேலியாகவும் பேசிக்கொண்டார்கள். இறுதியில் சாஸ்திரியார் எங்களை அருகில அழைத்து ஒவ்வொருவரிடமும் அன்பான மொழிகளைக் கூறி விடை கொடுத்தார். திரு. மகன்லால் காந்தியுடன் தென் ஆப்பிரிக்கா பற்றியும் ஜெனரல் ஸ்மட்ஸ் பற்றியும் சிறிது பேசினர். காந்தியடிகள், டாக்டர் தம்முடைய வரவால் சாஸ்திரியாருடைய ஆரோக்கியத்துக்குப் பங்கம் ஏற்படவில்லை என்று கூறினல்

சாஸ்திரியாரை மறுபடியும் வந்து பார்ப்பதாக உறுதி கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

டாக்டர் பழுதில்லை என்று கூறியதால் காந்தியடிகள் 30-ம் தேதி இரவு மறுபடியும் சாஸ்திரியாரைப் பார்க்கப் போனார். இந்தத் தடவை அவருடன் திரு. ராஜகோபாலாச்சாரியார், திரு. தக்கர் பாபா, ராஜ்குமாரி அமிர்த கௌர், மிஸ். அகதா ஹாரிஸன், திரு. ஜகதீசன், என் அண்ணா திரு. பியாரிலால், டாக்டர் ஸ்ரீனிவாசன் ஆகியவர்கள் சென்றார்கள். நானும் சென்றேன். ஜெனரல் ஆஸ்பத்திரியில் கௌரவ வைத்தியராக வேலைபார்த்து வந்த டாக்டர் ஸ்ரீனிவாஸன் சாஸ்திரியாரைக் கவனித்து வந்தபடியால் அவரே முன் தடவை செய்ததுபோல இப்பொழுதும் காந்தியடிகள் தங்கியிருந்த யிடத்துக்கு வந்து அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். இந்தத்தடவை சாஸ்திரியாரும் காந்தியடிகளும் இராமாயணத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

சாஸ்திரியார் "தாங்கள் எனக்கு எத்தனையோ விதங்களில் நன்மை செய்கிறவர்களா யிருந்து வருகிறீர்கள்" என்று ஆரம்பித்தார்.

அதைக் கேட்டதும் காந்தியடிகள் "இதென்ன பிதற்றல், சாஸ்திரியார்!" என்று சொன்னார். "அதென்ன, காந்திஜி! இன்று உலக முழுவதிலும் தாங்கள் தாம் தலைசிறந்த பெரிய மனிதர் என்பதை நான் அறியேனா?" என்று கூறிக்கொண்டு சாஸ்திரியார் தம்முடைய பேரக் குழந்தைகளைக் காட்டி "அவர்கள் மீது தங்கள் கடாட்சம் விழட்டும்" என்று கூறினார்.

அத்துடன் இராமாயணத்திலிருந்து "ராமனைப் பாராதவனும் ராமனால் பார்க்கப்படாதவனும் இந்த உலகில் எல்லோராலும் இகழப்படுவர்" என்னும் சுலோகத்தை முக மலர்ச்சியுடன் கூறினார்.

அதன்பின் அவர், தாம் முந்திய நாள் மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு தூங்கியபோது 15 நிமிஷ நேரத்தில் இராமாயணத்தைப் பற்றிக் கனவிலேயே மிகமிக அழகான கட்டுரை யொன்றை எழுதிய விபரத்தைக் காந்தியடிகளிடம் கூறினார்.

அவருடைய கட்டுரையின் பொருள் இதுவாகும்:—ராவணன் இறந்தபின் ஹனுமான் அசோகவனத்துக்குச் சென்று சீதா பிராட்டியிடம் "தாயே, அனுமதி அருளும், அரைக்கணத்தில் தங்களைச் சித்திரவதை செய்துவந்த இந்த அரக்கிகளை எல்லாம் அழித்துவிடுகின்றேன்" என்று கூறினான். அதைக் கேட்டதும் அம்மையார் அவன் பக்கமாகத் திரும்பி "அப்பா, வேண்டாம், இந்த ஏழைகள் என்ன குற்றம் செய்தார்கள்? இவர்கள் எஜமானுடைய அடிமைகள், அதனால் தங்கள் ஜீவனத்துக்காக அவன் ஆணைப்படி நடந்தார்கள். அவர்களுக்கு ஒன்றும் செய்யாதே. வாழ்வைச் சுவையுடையதாகச் செய்வது மன்னிக்கும் குணம் ஒன்றே. அதுவே தெய்வீகத்தன்மை உடையது. அதுதான் அறங்களி லெல்லாம் தலைசிறந்தது. ஆதலால் அவர்களை மன்னித்து

விடு. சிறிதுகூடத் தவறு செய்யாதவன் கிடையாது" என்று அருள் மொழிகள் பகர்ந்தார்.

சாஸ்திரியார் இந்த விஷயத்தைக் கூறிவிட்டு "நான் வீடு சென்றதும் இந்தக் கட்டுரையைத் திரு. ஜகதீசனிடம் சொல்லி எழுதச் செய்து தங்களுக்கு அனுப்புகின்றேன். அதைப் பியாரே லாலைப் படிக்கச் சொல்லிக் கேட்பீர்களா?" என்று கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள், தாமே அதை வாசிப்பதாக வாக்களித்தார். "நாளையே அதை திரு. ஜகதீசனை எழுதச் சொல்லி அனுப்பி வையுங்கள். மதுரைக்குப் போகுமுன் படிப்பேன்" என்று கூறினார்.

சாஸ்திரியார் :—அது சாத்தியமில்லை. எனக்கு இரண்டு மூன்று நாட்கள் வேண்டியிருக்கும். சிறுகச் சிறுகத்தான் செய்ய முடியும். என்னுடைய டாக்டர் அற்புதமானவர்தான். ஆயினும் நாளையே செய்யுமாறு இன்னும் எனக்கு ஆரோக்கியத்தை உண்டாக்கி விடவில்லை."

சாஸ்திரியார் மனம் முழுவதும் இராமாயணத்திலேயே ஆழ்ந்து போயிருந்தது. இராமாயணத்துக்கு இணையான நூல் கிடையாது என்றார். அதை முன் போல் ஜனங்கள் வாசிக்கவுமில்லை, அது கூறும் லட்சியத்தை அனுஷ்டிக்கவுமில்லை என்று வருந்தினார்.

சீதாபிராட்டியார் தம்முடைய தூய பெருங் கனலால் தீய எண்ணங்கொண்ட ராவணனை அணுகாதபடி செய்தபோது அவரிடம் அரக்கிகள் ஓடிவந்து—"உனக்கு உலகம் தெரியவில்லை; தெரிந்திருந்தால் இப்படி அவர் கொடுப்பதை வேண்டாம் என்று மறுத்துவிட மாட்டாய்" என்று கூறினார்கள்.

அதற்குப் பிராட்டியார் கூறிய மறுமொழி :—

"உங்கள் நகரம் அழகாயிருக்கின்றன, உங்கள் மாளிகைகள் பிரமாண்டமாயிருக்கின்றன. எல்லா விதமான நாகரிகச் சின்னங்களும் நிறைந்திருக்கின்றன. ஆனாலும் ராவணன் செய்யும் பிழையை உணர்ந்து அவனுக்கு இடித்துரைப்பார் இரண்டொருவரைக் கூடக் காணோமே."

இதைக் கூறும்போது சாஸ்திரியாருடைய மனம் உருகி விட்டது.

"இதுதான் நாமும் நம்முடைய நண்பர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையாகும். இதைச் செய்ய நாம் தவறி விட்டோம். நான் இதை ஒன்றிரண்டு தடவை தங்களிடம் நிறைவேற்றியிருக்கிறேன். தாங்களும் அதை எல்லோரும் அஞ்சும் படியாகக் கூடச் சில சமயங்களில் பகிரங்கமாக எடுத்துக் கூறி வருகிறீர்கள். ஆனால் அதுதான் நண்பர் செய்ய வேண்டிய காரியங்களில் பிரதானமானதாகும்," என்று காந்தியடிகளிடம் கூறி விட்டு, ராஜாஜியைப் பார்த்து—"ராஜாஜி! நூறு பேர் தவறு செய்தால் அவர்களில் ஒருவரேனும் முன்கூட்டி எச்சரிக்கப்பட்டால்

தவறு செய்வதை திருத்திவிட மாட்டாரா? நான் மகாத்மாவுக்கு உபதேசம் செய்வதாக எண்ண வேண்டாம். என் பிழையையே கூறிக் கொள்கின்றேன். இந்தக் கடமையைச் செய்ய நானும் சில சமயங்களில் தவறிப் போயிருக்கிறேன்'' என்று கூறினார்.

அதன்பின் காந்தியடிகளிடம் ''தாங்கள் உண்மையை நாடுபவர். அநேக விஷயங்களில் நம்மிருவர்க்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்யாசமுண்டு. நான் தங்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள முடியாத சமயங்களில் எல்லாம் அதை எவ்வித ஒளிவு மறைவுமின்றித் தங்களிடம் கூறியுள்ளேன். ஆனால் நான் தங்களைவிட எத்தனையோ மடங்கு தாழ்ந்தவனாயினும் நானும் தங்களைப்போல் உண்மையைப் பின்பற்றுபவனே. வால்மீகி மகரிஷி இராமாயணத்தில் அருளியுள்ள அழியா உண்மைகளே எனக்கு எப்போதும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வற்றா ஊற்றாக இருந்து வருகின்றன. அந்த மகாப்பெரிய இதிகாசத்தில் நான் கண்ட உண்மைகளை யெல்லாம் ஜனங்களுக்கு வழங்க வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டதாகவே எண்ணுகின்றேன்'' என்று கூறினார்.

காந்தியடிகள், அவர் இராமாயணத்தைக் குறித்து நிகழ்த்தியுள்ள உபன்னியாசங்களை அச்சேற்ற வேண்டும் என்று யோசனை கூறினார். ஆனால் சாஸ்திரியார்க்கு அதுமட்டும் திருப்தி யளித்து விடுவதாயில்லை. அவர் ''நான் இன்னும் கொஞ்சகாலம் ஜீவித்திருக்கவும், அன்பர் ஜகதீசன் கொஞ்ச காலம் என்னுடனிருக்கவும் முடியுமானால் நான் செய்துவிட்ட பிழையைத் திருத்திவிட முடியும்'' என்றார்.

காந்தியடிகள் :—''ஜகதீசன் தங்களைப் போற்றுபவர், தங்களிடம் பயபக்தியுள்ள தாஸர். தங்களுக்குச் சிரமம் என்று அவர் எண்ணாத பொழுதெல்லாம் தங்கள் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார். தங்களுக்குச் சிரமம் என்று அவர்க்குத் தோன்றிவிட்டால் அப்பொழுது அவர் வீட்டில் இல்லை என்று சொல்லி அனுப்பி விடுவார்''

அதைக் கேட்டதும் சாஸ்திரியார் சந்தோஷமாக நகைத்துக் கொண்டு—''ஆகவே இராமனைப் போலவே தாங்களும் பொய் பேசக் கற்றுக் கொடுக்கிறீர்களே. சுமந்திரன் தேர் ஓட்டிக் கொண்டு போனபோது இராமன் விரைவாக ஓட்டும்படி சொன்னான். அப்பொழுது சுமந்திரன் 'ஆனால் சக்கரவர்த்தி மெதுவாக ஓட்டும்படியே சொன்னார்' என்று கூறினான். அதற்கு இராமன் 'அப்பா! ஏன் என் துக்கத்தை இன்னும் நீட்டிக்கப் பார்க்கிறாய்? விரைவாக ஓட்டு; சக்கரவர்த்தி கோபித்தால் அவர் கூறியது காதில் விழவில்லை என்று கூறிவிடு' என்று சொன்னான்.''

நோயாளி அதிகமாகப் பேசிவிட்டார். டாக்டருக்குக் கவலை உண்டாகிவிட்டது. ஏதோ தமிழில் கூறினார். சாஸ்திரியார்—''ஆமாம், நீர் சொல்வது சரிதான். சம்பாஷிப்பதில் திறமையுடையவர், தாம் பேசுவதைவிட அதிகமாகப் பிறர் பேசுவதற்

குச் செவி சாய்த்துக் கொண்டே தானிருப்பார். நான் அதிக மாகப் பேசிக்கொண்டிருந்து விட்டேன்" என்று கூறினார்.

காந்தியடிகள் :—"நாங்கள் எல்லோரும் அதற்குச் சான்று பகர்வோம்"

சாஸ்திரியார் :—"அதிருக்கட்டும். தங்களைச் சந்திப்பது இது தான் கடைசி முறை என்று எண்ணுகிறேன். தாங்கள் மதுரை யிலிருந்து திரும்பியதும் தங்களைப் பார்க்க வருகிறேன் என்று கூறும் நிலைமையில் நான் இருக்கவில்லை. அதனால்தான் நான் பேச விரும்பியதை யெல்லாம் பேசினேன். இப்பொழுது உங்கள் முறை."

காந்தியடிகள் :—"அப்படிச் சொல்லாதீர்கள். நாம் இரு வரும் சந்திப்பது கடைசித் தடவை இது வன்று. மதுரை யிலிருந்து திரும்பி வந்ததும் மறுபடியும் தங்களை வந்து பார்க்க முயல்வேன். இப்பொழுது நான் சொல்வதற் குள்ளதெல்லாம் தாங்கள் சீக்கிரமாகக் குணமடைந்து சேவாக் கிராமம் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்வது ஒன்றே."

சாஸ்திரியார்:—"எப்பொழுதும் நன்மையே விளையும் என்று நம்புகிறவர்களில் தாங்களே தலைசிறந்தவர்."

காந்தியடிகள் :—"ஆமாம், உண்மைதான், அடக்க முடியாத நம்பிக்கை யுடையவனே நான்."

இருவரும் நகைத்துக் கொண்டார்கள். மறுபடியும் ஹாஸ்ய மாகப் பேசிவிட்டுப் பிரிந்தார்கள்.

காந்தியடிகள் மதுரையிலிருந்து திரும்பிவந்த பொழுது ரயில் ஏறுவதற்கு முன் மூன்று மணி சாவகாசமே எஞ்சியிருந்தது அந்த நேரத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினார். ஸ்நானத்தை முடித்துக் கொண்டார். கையெழுத்துக் கேட்டவர்க்குக் கை யெழுத்துப் போட்டுக் கொடுத்தார். ஹரிஜன் பிரசாரத்திற்கும் ஹிந்துஸ்தானி பிரசாரத்திற்கும் பணம் வசூல் செய்தார். இவ்வ ளவும் முடித்துக்கொண்டு ரயிலுக்குப் போகும் வழியில் அவசர அவசரமாகச் சாஸ்திரியாரைப் போய்ப் பார்த்தார்.

அன்று திங்கட்கிழமை. காந்தியடிகளுக்கு மௌன விரத மானதால் எழுதித்தான் காட்டினார். சாஸ்திரியார் சுற்றுப் பிர யாணத்தைப்பற்றி விசாரித்தபோது, காந்தியடிகள், நல்லவிதமாக நடந்ததாயினும் மிகச் சிரமமாக இருந்ததாக எழுதினார்.

மதுரையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்துக்கு ஐந்தாறு லட்சம் ஜனங்கள் வந்திருந்ததையும், அவர்களில் பாதிப்பேர் பக் கத்து கிராமங்களிலிருந்து வந்திருந்ததையும், அங்கே ஜனங்கள் காந்தியடிகளின் தரிசனம் பெறுவதற்கு இதுதான் இறுதித் தருணம் என்று எண்ணியபடியால் சாலையின் ஓரங்களில் வெயி லைப் பாராமல் ஆகாரமின்றி உட்கார்ந் திருந்ததையும் கேட்டு சாஸ்திரியார் ஆச்சரிய மடைந்தார்.

காந்தியடிகள் சாஸ்திரியாருடைய தேக சுகத்தைப் பற்றி விசாரித்தார். டாக்டர் சொல்லுகிற படியே நடக்குமாறு யோசனை கூறினர். சாஸ்திரியார், உடம்பு குணமாய் விட்டது போல் தோன்றுவதாகக் கூறினர். அவருடைய மனமானது அளவுகடந்து உருகிவிட்டது.

" சகோதரரே! என்னை விசேஷமாகக் கௌரவித்து விட்டீர்கள். அதிலும் தாங்கள் அவசரமாகப் போகவேண்டிய இந்தச் சந்தர்ப்பத்திலும் என்னைப் பார்க்க வந்தது விசேஷத்திலும் விசேஷமாகும். என் உடன்பிறந்த சகோதரர்களையும் என் குழந்தைகளையும் விடத் தாங்களே எனக்கு அதிக நெருக்கமும் அருமையுமுள்ளவராக ஆகிவிட்டீர்கள்."

அவருடைய நாக்குத் தழுதழுத்தது—"ஏதோ அயலார் அறிய முடியாத ஒரு ஒற்றுமையால் நாமிருவரும் ஒன்று சேர்ந்து விட்டோம். இந்த நட்புக்கு மனத்திற்குப் புறம்பான காரணம் எதுவும் கூற முடியாது. கோக்கலே காரணமா யில்லை, அவர் அதற்கான சந்தர்ப்பத்தை மட்டுமே அளித்தார்."

காந்தியடிகளின் அருகே வந்து அவருடைய காதில் :—"நான் வீணாக வார்த்தைகளை அளப்பதில்லை. நான் கூற விரும்புவதைத் தாங்கள் அறிவீர்கள்" என்று மெதுவாக உரைத்தார்.

காந்தியடிகள், அவர் உணர்ச்சி மிகுதியால் மூச்சுத் திணறுவதைக் கண்டு பேசாமலிருக்குமாறு கையால் சைகை செய்து கொண்டு விடை பெற்றுக் கொள்ள எழுந்தார்.

அப்படி அவர் எழுந்ததும் சாஸ்திரியார் அவருடைய கைக் கடிகாரம் தொங்குவதைக் கண்டு விட்டார் :—" ஆகா, உம்மை விட்டுப் பிரியாத தோழன். தங்கள் கடிகாரம் தவறி விட்டதாகவும் இனிமேல் கடிகாரம் உபயோகிப்பதில்லை என்று தாங்கள் கூறியதாகவும் சொன்னார்கள்" என்று கூறினர்.

உடனே திரு. டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார் "கடிகாரமில்லை, பவுண்டன் பேனாதான் தவறி விட்டது" என்று சொன்னர்.

சாஸ்திரியார் அப்படியா :—" அப்படியா? யாரேனும் தங்கள் கடிகாரத்தைத் திருடிக் கொண்டால் கடிகாரத்தை உபயோகிப்பதையும் நிறுத்தி விடுவீர்களோ?" என்று கேட்டார்.

காந்தியடிகள் கடிகாரமில்லாமல் முடியாது என்று பொருள் படும்படி தலையை அசைத்துக் கொண்டு சிரித்தார்.

அதன் பின் நாங்கள் சாஸ்திரியாரிடம் விடை பெற்றுக் கொண்டு அவர் சேவாக்கிராமத்துக்கு வருவதாகச் சொன்ன வாக்குறுதியை ஞாபகப்படுத்தினேம். அதன் பின் அரை மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் நாங்கள் ஸ்பெஷல் ரயிலில் ஏறிவிட்டோம், காந்தியடிகள் ஹரிஜனப் பத்திரிகைக்கு, எழுதிய கட்டுரைகளைத் திருத்தவும் புதிதாகக் கட்டுரைகளை எழுதவும் ஆரம்பித்து விட்டார்.